
சுவடி : 43
ஏடு : 6
திசம்பர் 2018
*
ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**
*
ஆசிரியர் குழு
**க. முகிலன்**
**தமிழேந்தி**
**வாலாசா வல்லவன்**
**வையவன்**
**சி. பெரியசாமி**
**கோவிராமலிங்கம்**
**சி. நடராசன்**
**மங்கலம் அரசன்**
**தி.துரைசித்தார்த்தன்**
**ஆ. முத்தமிழ்ச்செல்வன்**
*
அனைத்துத் தொடர்புகளுக்கும்
**'சிந்தனையாளன்'**
மனை எண்.277/2
சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை,
அம்பத்தூர், சென்னை - 600 050.
தொடர்புக்கு :
**94448 04980**
**95975 26990**
மின்னஞ்சல் :
sinthanaiyalantamilmonthly
@gmail.com
*
இதழ் வடிவமைப்பு :
**சன் நகலகம்,** சென்னை-5.
9840015179
*
இணையத்தில் படிக்க
**www.keetru.com**
*

ஆசிரியவுரை

# நம் குறிக்கோள் : உண்மையான இந்தியக் கூட்டாட்சி!



தந்தை பெரியார் 11-9-1938இல் "தமிழ்நாடு தமிழருக்கே!" என்ற குறிக்கோளை முன்வைத்தார்.

1939 முதல் 30-9-1945 வரையில் "திராவிட நாடு திராவிடருக்கே!" என்ற கோரிக்கையை முன் வைத்தார். நாட்டுப் பிரிவினை என்கிற கருத்தை 1-10-1945 முதல் 1-11-1956 வரை தூக்கிப் பிடித்தார். ஆனால், அதற்கான ஏற்பாடு எதையும் முனைப்போடு செய்யவில்லை.

1-11-1956இல், "சென்னை மாகாணம்" என்கிற திராவிட நாடு, தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, கர்நாடகா என நான்கு தனித்தனி ஆட்சிப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. அப்போது முதல், தன் 19-12-1973 இறுதிச் சொற்பொழிவு வரை "தனிச் சுதந்தரத் தமிழ்நாடு" என்கிற கோரிக்கையைப் பரப்புரை செய்தார்; தன் இறுதி மூச்சை 24-12-1973 அன்று நிறுத்தினார். அப்போது அவரது தலைமாட்டில் நானும் திருச்சித் தோழர்களும் நின்றோம்.

'திராவிடர் கழகப் போக்குச் சரியில்லை' என்று 1971 மார்ச்சில் தந்தை பெரியாருக்கு உணர்த்தினேன். அது பற்றிய ஒரு கருத்தரங்கை, அவருடைய ஒப்புதலுடன் 1971 ஏப்பிரலில், தஞ்சை மாவட்டம் இராசமன்னார்குடியில் நடத்தினோம். அந்தக் கருத்தரங்கைத் தந்தை பெரியார் முடித்து வைத்தார். எங்கள் கருத்தை ஆதரித்தார்.

நான் பெரியாருடைய மறைவுக்குப் பின்னரும், என் 1971 கருத்தை மாற்றிக் கொள்ளவில்லை. துலாம்பரமாக ஓர் அறிக்கையை 13-11-1975இல் வெளியிட்டேன். அதையே ஒரு காரணமாக வைத்து, நான் 16-11-1975இல் திராவிடர் கழகத்திலிருந்து நீக்கப்பட்டேன்.

என்னை ஒத்த தோழர்கள் ஒன்றுசேர்ந்து, 8-8-1976இல், சீர்காழியில், "பெரியார் சம உரிமைக் கழகம்" என்ற தனி அமைப்பை உருவாக்கினோம்.

சாதி ஒழிப்பு, சமதர்மம், வகுப்புவாரி உரிமை இவற்றை இயக்கத்தின் கொள்கைகளாக அறிவித்தோம்.

1978 ஏப்பிரல் முதல், இந்தியப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு, இந்திய அரசமைப்புச் சட்டத்திலுள்ளபடி - மத்திய அரசுக் கல்வியிலும், மத்திய அரசு வேலையிலும் தனி இடஒதுக்கீட்டைப் பெறுகிற ஒரு வேலைத் திட்டத்தை முதன்மையாக எடுத்துக் கொண்டோம்.

அப்போது முதல் உத்தரப்பிரதேசம், பீகார், இராசஸ்தான், அரியானா முதலான மாநிலங்களில் பயணம் மேற்கொண்டோம்.

1988க்குள் வங்காளம், அசாம், பஞ்சாப் முதலான மாநிலங்களிலும் பயணித்தோம்.

அதனால் பெற்ற பட்டறிவைக் கொண்டு, "பெரியார் சமஉரிமைக் கழகம்" என்கிற நம் அமைப்பின் பெயரை, "மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி" என 1988இல் மாற்றம் செய்து கொண்டோம்.

"இந்தியாவில் பொதுவுடைமை மலர மார்க்சிய - பெரியாரிய நெறியில் தேசிய இனவழிப்பட்ட சமஉரிமை உடைய சமதர்மக் குடிஅரசுகள் ஒருங்கிணைந்த உண்மையான கூட்டாட்சி அமைய ஆவன செய்தல்" என்பதை, நம் கட்சியின் குறிக்கோளாக வரித்துக் கொண்டோம். நிற்க.

வங்காளத்தில் இயங்கிக் கொண்டுள்ள மார்க்சியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவர்கள் பேராசிரியர் சந்தோஷ் ராணா, வாஸ்கர் நந்தி இருவரும், பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீடு பற்றி நம் வழிகாட்டலை வேண்டி, என்னை அழைத்தனர். நான் மட்டும் 1986 அக்டோபர், நவம்பரில் 40 நாள் வங்காளத்தில் தங்கி இடஒதுக்கீடு பற்றி, அங்குள்ளவர்களுக்கு விளக்கினேன். அவர்கள் 1986 நவம்பரில் கல்கத்தாவில்-"இந்தியாவின் பன்முகத் தன்மைக்கு வகுப்பு (அ) சாதிகளின் அச்சுறுத்தல்" என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கை நடத்தினர்.

அதற்கு, நம் கட்சித் தோழர்கள் தில்லி ச. தமிழரசு, அலிகர் முனைவர் து.மூர்த்தி, க.முகிலன், மா.முத்துச்சாமி, கலச.இராமலிங்கம் மற்றும் சிலரை அழைத்திருந்தேன்.

அக்கருத்தரங்கில், நான் "இந்திய அரசமைப்புச் சட்டம் மோசடியானது" என்பது பற்றி விரிவாகப் பேசினேன். அதைச் செவிமடுத்த தோழர் வாஸ்கர் நந்தி, 1987 ஏப்பிரலில் பஞ்சாபில் லூதியானாவில் ஒரு கருத்தரங்கை நடத்தினார். அதில் நான் பங்கேற்று, "இந்திய அரசியல் சட்டம் மோசடியானது" என்பதை விளக்கினேன்.

அதைத் தொடர்ந்து, பஞ்சாபில் ஜலந்தரில் 1987 செப்டம்பரில் நடைபெற்ற மார்க்சியர்கள் மாநாட்டில், நானும். மறைந்த நம் தோழர் முனைவர் து. மூர்த்தி அவர்களும் உரையாற்றினோம். அம்மாநாட்டினர் எங்கள் பேச்சை ஆரவாரித்து வரவேற்றனர்.

அதைத் தொடர்ந்து, வாஸ்கர் நந்தி முயற்சியில், அசாமில், நியூ ஜல்பைகுரியில் 1988 நடைபெற்ற மாநாட்டுக்கு என்னை அழைத்தார். அந்த மாநாட்டில், "இந்தியக் கூட்டாட்சிக்கு அச்சுறுத்தல்" (Federalism in Peril) என்ற சிறு நூலை நானே எழுதி, அச்சிட்டு, அதை வெளியிட்டுப் பேச வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

அதன்படி, ஒரு சிறு நூலை அச்சிட்டு எடுத்துச் சென்று நியூ ஜல் பைகுரியில் வெளியிட்டேன்.

நாம், நம் கட்சியின் சார்பில் தில்லியில், மவ்லங்கர் மன்றத்தில்,

18-10-1991 வெள்ளி அன்று "மண்டல் பரிந்துரை மற்றும் இந்தியக் கூட்டாட்சிக் கொள்கைக் கருத்தரங்கு"

19-10-1991 சனி அன்று, "தந்தை பெரியார் 113 ஆவது பிறந்த நாள் விழா மற்றும் பன்மொழி மலர் வெளியீடு"

20-10-1991 ஞாயிறு அன்று "இந்தியக் கூட்டாட்சிக் கொள்கை விளக்க மாநாடு" ஆகிய முப்பெரும் நிகழ்ச்சிகளை, மா.பெ.பொ.க. மற்றும் அனைத்திந்திய ஒடுக்கப்பட்டோர் பேரவை சார்பில் நடத்தினோம். அம்மூன்று நாள்கள் நடந்த தில்லி நிகழ்ச்சிகளில் நம் மா.பெ.பொ.க. தோழர்களும், ஒருநாள் மாநாட்டில் பா.ம.க. தோழர்களும் பங்கேற்றனர்.

20-10-1991 ஞாயிறு அன்று முற்பகல் மாநாட்டில் ஒய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி பஞ்சாபைச் சேர்ந்த அஜித் சிங் பெய்ன்ஸ் தொடக்கவுரை ஆற்றினார்.

21-10-1991 திங்கள் அன்று முற்பகலில் நார்த் அவின்யூ 93, இல்லத்தில், நீதிபதி அஜித் சிங் பெயின்ஸ் தலைமையில் சிலர் கூடி, "உண்மையான கூட்டாட்சிக்கான அரசமைப்புச் சட்ட விவாதக் குழு" (Real Federal Constitution Discussion Group) என, ஒன்றை அமைத்தோம்.

அதன் ஒருங்கிணைப்பாளராக, ஈரோடு பேராசிரியர் மு.க. சுப்பிரமணியம் பொறுப்பேற்றார்.

அன்னார் மறைவுக்குப் பின்னர், அந்த விவாதக் குழுவின் ஒருங்கிணைப்பாளராக நான் உள்ளேன்.

தில்லியில் 1991 மூன்று நாள்கள் நிகழ்ச்சிகள் நடந்த பிறகு, 23-10-1991 முதல் 30-10-1991 முடிய அலிகர், கான்பூர், லக்னோ, பாட்னா, கல்கத்தா ஆகிய ஊர்களுக்கு நம் தோழர்கள் ஆண்கள் 50 பேர், பெண்கள் 10 பேர் ஆக 60 பேர்கள் ஒரே குழுவாகப் பயணம் சென்று கொள்கைப் பரப்புரை செய்தோம்.

அதாவது இந்திய அளவில் நாம் செயல்பட்டோம்.

அதைத் தொடர்ந்து, 1992இல், நீதிபதி அஜித் சிங் பெய்ன்ஸ் அவர்களை சென்னைக்கு அழைத்து இந்தியக் கூட்டாட்சி பற்றி ஒரு பொதுக் கூட்டம் நடத்தினோம்.

"இந்தியக் கூட்டாட்சி ஏன்?" என்ற பெயரில், பேராசிரியர் மு.க.சுப்பிரமணியம் தமிழில் ஒரு நூல் எழுதியுள்ளார்.

நான் "இந்தியக் கூட்டாட்சிக்கு அச்சுறுத்தல்" (Federalism in India in Peril) என ஆங்கிலத்தில் ஒரு நூல் எழுதி, 2014இல் வெளியிட்டுள்ளேன்.

அதன் பின்னர், நான் 2015, 2016 இரண்டு ஆண்டுகளிலும் தொடர்ந்து, சண்டிகருக்குச் சென்று நீதிபதி அஜித் சிங் பெய்ன்ஸ், நான் இருவரும் இணைந்து இந்தியப் பிரதமர், இந்தியச் சட்ட அமைச்சர் ஆகியோருக்கு, கூட்டாட்சிக் கோரிக்கையை வலியுறுத்தி, வேண்டுகோள் விண்ணப்பம் விடுத்துள்ளோம்.

**கூட்டாட்சி, இந்தியாவில் வரவேண்டும். அப்படி யானால் நாம் இந்தியா முழுவதிலும் சென்று அதுபற்றிப் பரப்புரை செய்ய வேண்டும். எப்படிப் பட்ட கூட்டாட்சி என்பதை இந்திய மக்களுக்கும், மக்கள் தலைவர்களுக்கும் முதலில் நாம் புரிய வைக்க வேண்டும்.**

நாம் விரும்பும் இந்தியக் கூட்டாட்சி என்பதன் வடிவம் என்ன?

1. இந்தியாவின் பாதுகாப்பு, பணம் அச்சடிப்பு, செய்திப் போக்குவரவு மூன்று துறைகள் மட்டும் மத்திய அரசிடம் இருக்க வேண்டும்.
2. கல்வி, மக்கள் நலன், தொழில் துறை, எரிபொருள், வேளாண்மை, காடுகள் பாதுகாப்பு, அஞ்சல் துறை, தொடர் வண்டித்துறை, வருமான வரித்துறை, வணிக வரித்துறை மற்றும் எஞ்சிய அதிகாரங்கள் அனைத்தும் தன்னாட்சி பெற்ற மாநிலங்களிடம் இருக்க வேண்டும்.
3. கூட்டாட்சி இந்தியாவில் பட்டியலிடப்பட்ட அனைத்து மொழிகளும், அந்தந்தத் தன்னாட்சி பெற்ற மாநிலங் களின் அன்றாட நிருவாக மொழிகளாக இருக்க வேண்டும்.
4. இந்திய ஒன்றியப் பணியாளர் தேர்வாணையம் என்கிற-"The Union Public Service Commission" என்கிற அமைப்பு உடனே கலைக்கப்பட வேண்டும்.
5. ஒவ்வொரு தன்னாட்சி மாநிலத்துக்கும் தனித்தனி அரசமைப்புச் சட்டம் வேண்டும்.
6. ஒவ்வொரு தன்னாட்சி மாநிலத்துக்கும் தனித்தனி தேசியக் கொடி இருக்க வேண்டும்.
7. முதலில் தன்னாட்சிக் குடிமகன். அதன்பின் இந்தியக் குடிமகன் என் இரட்டைக் குடி உரிமை (Dual Citizenship) வேண்டும்.
8. ஒவ்வொரு தன்னாட்சி மாநிலமும் இந்திய ஒன்றிய அரசிடம்-இங்கே எண்.1-இல் கண்ட மூன்று துறை அதிகாரங்களையும் விருப்பத்துடன் ஒப்படைக்க வேண்டும்.

இப்படியெல்லாம் எழுதுவதும், பேசுவதும் எளிது. இவற்றைச் செயல்படுத்துவது பற்றி நாம் ஒவ்வொரு வரும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

நாம் 7-1-2018இல், சென்னையில், கூட்டாட்சி மாநாடு நடத்தினோம்.

வரும் 6-1-2019 ஞாயிறு அன்று, தமிழ்வழிக் கல்வி மாநாடு நடத்திட உள்ளோம்.

கூடுவோம்! பேசுவோம்! திட்டமிடுவோம்! செயல்படுத்து வோம்! வாருங்கள்!

**1-12-2018** **- வே. ஆனைமுத்து**

# முனைவர் து. மூர்த்தி 2ஆம் நினைவு நாள்



அலிகர் முஸ்லிம் பல்கலைக் கழகத்தில் நவீன இந்திய மொழிகள் துறைத் தலைவராகப் பணி யாற்றிக் கொண்டிருந்த முனைவர் து.மூர்த்தி அவர்கள், எதிர்பாராத தன்மையில், 24.10.2016 அன்று மறைவுற்றார்.

அன்னாரின் முதலாவது நினைவு நாள் விழா 29.10.17 அன்று நடைபெற்றது.

இரண்டாவது நினைவு நாள் 24.10.2018 அன்று ஆகும். தற்போது அயல்நாட்டுப் பயணத்திலுள்ள து. மூர்த்தி அவர்களின் தமையனார் து. அரங்கநாதன் அவர்கள், தம் தம்பியின் 2ஆம் ஆண்டு நினைவு நாளை ஒட்டி, ரூ.5,000 (அய்யாயிரம்) "சிந்தனையாளன்" வளர்ச்சி நிதியாக அளித்துள்ளார்.

**வாழ்க முனைவர் து. மூர்த்தி புகழ்!**

# அரசியல் சட்ட எரிப்பு நாள் - மாவீரர் நாள், கருத்தரங்கம்




சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் 2018 நவம்பர் 26 அன்று மாலை 4 மணிக்கு சென்னை, சேப்பாக்கம், நிருபர்கள் சங்கக் கூட்ட அரங்கில், அரசியல் சட்ட எரிப்பு நாள் - மாவீரர் நாள் கருத்தரங்கம் தி.இராவணன் தலைமையில் நடைபெற்றது. மனோகர் வரவேற்புரை ஆற்றினார். மருத்துவர் தாயப்பன் 'ஈழம்-நமது கடமை' என்ற தலைப்பிலும், விடுதலை இராசேந்திரன் 'பெரியாரியம் இன்றைய தேவை' என்ற தலைப்பிலும் கொளத்தூர் மணி, 'சட்ட எரிப்பும் சாதி ஒழிப்பும்' என்ற தலைப்பிலும் உரையாற்றினர். பிரவீன்குமார் நன்றி கூறினார். மா.பெ.பொ.க. தோழர்கள் க. முகிலன், வாலாசா வல்லவன் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

# காவிரிப் படுகையில் கஜா புயலின் பேரழிவுகளும் தமிழக அரசின் கண்டிக்கத்தக்க மெத்தனப் போக்கும்

**- க. முகிலன்**

கடந்த நாற்பது ஆண்டுகளாகப் புயலைச் சந்திக்காமலிருந்த காவிரிப்படுகையின் கடற்கரையோர மாவட்டங்கள் நவம்பர் மாதம் தாக்கிய கஜா புயலால் பேரழிவுக் குள்ளாகி உள்ளன.

நவம்பர் 10 அன்று குறைந்தக் காற்ற ழுத்த தாழ்வு மண்டலமாக உருவான கஜா புயல், வானிலை ஆய்வு மய்யத்திற்கே போக்குக் காட்டிக் கொண்டிருந்தது. முதலில் கஜா புயல் கடலூருக்கும் ஆந்திராவின் மசூலிப் பட்டினத்துக்கும் இடையில் கரையைக் கடக்கும் என்று வானிலை ஆய்வு மய்யம் அறிவித்தது. பின்னர் கடலூருக்கும் பாம்பனுக் கும் இடையில் நாகப்பட்டினத்தில் கரையைக் கடக்கும் என்று அறிவிக்கப்பட்டது. நவம்பர் 15 நள்ளிரவு 12 மணிமுதல், நவம்பர் 16 அதி காலை வரை மணிக்கு 110 கி.மீ. வேகத்தில் கஜா புயல் வேதாரண்யம் அருகில் கரையைக் கடந்தது. 2011 திசம்பரில் கடலூர் மாவட்டத் தைத் தாக்கிய 'தானே' புயலைப் போல் பத்து மடங்கு பேரழிவை கஜா புயல் உண்டாக்கியிருக்கிறது.

அ.தி.மு.க. தலைமையிலான தமிழக அரசு புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்தது. தாழ்வான பகுதிகளிலிருந்து 22,849 குடும்பங்களைச் சேர்ந்த 81,948 பேர் அங்கிருந்து அழைத்துச் செல்லப்பட்டு 471 முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர். 7000 மின் கம்பங்களும் 216 நடமாடும் மருத்துவமனைகளும் தயார் நிலையில் வைக்கப் பட்டன. அரசின் இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையை தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் பாராட்டின. ஆனால் இந்த முன்னேற்பாடுகளை முறித்துப் போடும் வகையில் கஜா புயல் கோர தாண்டவமாடியது.

வேதாரண்யம், அதிராம்பட்டினம், மல்லிப்பட்டினம், சேது பாவாசத்திரம் உள்ளிட்ட கடற்கரையை யொட்டியிருந்த மீனவர்களின் குடிசை வீடுகள் சூறைக் காற்றால் தரைமட்ட மாயின. மீன்பிடி படகுகள் புயல் காற்றால் தூக்கி வீசப்பட்டும், ஒன்றோடொன்று மோதியும் நொறுங்கி உடைந்தன. மீன்பிடி வலைகளும் கருவி களும் சின்னாபின்னமாயின.

இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் குடிசை வீடுகள் அதிகம். தமிழ்நாட்டில் காவிரிப் பாசனப் பகுதியில் பெருநிலவுடை மையாளர்களின் ஆதிக்கத்தின் காரணமாக அடிமனைக்கே உரிமையில்லாத குடிசை வீடுகள் அதிகம். புயல் காற்றால் குடிசைகளின் கூரைகள் பிய்த்து எறியப்பட்டன. ஓட்டு வீடு களின் ஓடுகள் காற்றில் பறந்தன. வீடுகளின் சுவர்களும் பெரும் சேதத்திற்குள்ளாயின. வீடுகள் மீதும் வீடுகளைச் சுற்றிலும் வீதிகளிலும் மரங்கள் வீழ்ந்தன. இதனால் பல ஊர்களில் மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியே வருவதற்கே ஒரு நாளானது. மேல் கூரையே இல்லாத வீடு; எப்போது இடிந்து விழுமோ என்ற நிலையில் இருக்கும் சுவர்கள்.



பெருத்த சேதத்திற்குள்ளான படகுகள்

அதனால் மக்கள் உடுத்தியிருந்த உடையோடு உயிருக்கு அஞ்சி தம் வீடுகளை விட்டு வெளியேறினர். ஒரு பகுதியினர் அரசின் நிவாரண முகாம்களுக்குச் சென்றனர். பெரும்பா லோர் பள்ளிகளிலும் திறந்த வெளிகளிலும் தங்கினர்.

இவ்வாறு பல இலட்சம் மக்கள் தம் குழந்தை குட்டிகளுடன் குடிப்பதற்கு நீரும், உண்ண உணவும், மாற்றிக்கொள்ள உடையும், குளிரிலிருந்து காத்துக் கொள்ள போர்வையும் கிடைக்காமல் பெரும் துன்பத்திற்கு உள்ளாயினர். தங்கள் உடைமைகளையும், வீட்டையும் வாழ்வாதாரத்தையும் இழந்து எதிர்காலத்தைப் பற்றிய பெருங்கவலையில் உறைந்து கிடக்கின்றனர்.

அ.தி.மு.க. அரசு புயலால் ஏற்பட்ட பேரழிவுகளுக்கு ஏற்ப திட்டமிட்டு விரைந்து மீட்பு நடவடிக்கைகளை எடுக்க வில்லை. எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் யானைக்குச் சோளப்பொரி என்பது போலாகிவிட்டதை அரசு உணரத் தவறிவிட்டது. இந்த ஆண்டு கேரள மழை வெள்ளப் பேரிடரின் போது முதலமைச்சர் பினராய் விசயன் முதல்நாள் முதலே களத்தில் நேரடியாக நின்றதுடன், அனைவரின் ஒத்துழைப்பையும் உதவியையும் கோரினார். இதேபோல் கடந்த ஆண்டு ஒடிசாவில் புயல் தாக்கிய போது முதல மைச்சர் நவீன் பட்நாயக் செயல்பட்டார். இந்தியாவில் முன்னேறிய மாநிலமாகக் கருதப்படும் தமிழ்நாட்டிலோ புயலால் பாதிக் கப்பட்ட மக்களுக்கு நான்கைந்து நாள்களான பின்னும் முறையாகக் குடிநீரோ, உணவோ வழங்கப்படாத கொடிய நிலை இருந்தது.

கிட்டத்தட்ட ஒரு கோடி மக்கள் புயலால் பெருந்துன்பங்களுக்கும் இயலாமைகளுக்கும் உள்ளாகியிருந்த நிலையில் - குடிக்க ஒரு வாய்த் தண்ணீரும் கிடைக்காமல் தவித்துக் கொண்டிருந்த போது, நவம்பர் 17 அன்று முதலமைச்சர் பழனிசாமி தன் சொந்த மாவட்டமான சேலத்தில் மேச்சேரி-நங்கவள்ளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைத் தொடங்கி வைத்து, நலத்திட்ட உதவிகளை வழங்கிக் கொண்டிருந்தார். அத்துடன் தன் மாமனார் கட்டிய கோயிலின் குடமுழுக்கு விழாவில் கலந்துகொண்டு விழாக்கோலம் பூண்டிருந்தார். இதைவிடக் கொடுமை என்னவென்றால், செய்தியாளர்களிடம் பேசிய போது, "351 முகாம்களில் ஒரு இலட்சத்து 77 ஆயிரத்து 500 பேர் தற்போது இருக்கிறார்கள். அவர்களுக்குத் தேவையான உணவு, மருத்துவ வசதி அனைத்தையும் அரசு செய்து கொண்டிருக்கிறது. உணவு இல்லை என்ற நிலை எங்கேயும் இல்லை" என்று எடப்பாடி பழனிசாமி முழங்கியதுதான்.

புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு முதலமைச்சர் ஏன் நேரில் சென்று பார்க்கவில்லை என்ற கண்டனங்கள் எழுந்தன. அதனால் புயலால் தாக்கியபின் அய்ந்துநாள் கழித்து முதலமைச்சர் பழனிசாமி, துணை முதலமைச்சர் பன்னீர்செல்வத்துடன் ஹெலிக்காப்டரில் புதுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டங்களின் பல பகுதிகளைப் பார்வையிட்டார். வானிலை சரியில்லை என்பதால், திருவாரூர், நாகை மாவட்டங்களை வான்வழியாகக்கூட பார்க்கவில்லை. புதுக்கோட்டையிலும் பட்டுக்கோட்டையிலும் உயிரிழிந்த குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்கினார். பாதிக்கப்பட்ட மக்கள் எவரும் முதல மைச்சரைச் சந்திக்க முடியாதவாறு காவல்துறையினர் தடுத்தனர்.

தமிழக அரசின் வருவாய்த் துறை 22-11-18 அன்று கஜா புயல் பாதிப்புகள் குறித்து வெளியிட்ட அறிக்கையின் விவரங்கள்:

| | |
|---|---|
| உயிரிழந்தோர் | 63 பேர் |
| சேதமடைந்த வீடுகள் (குடிசைகள் 2,78,824 ஓட்டு வீடுகள் 62,996) | 3,41,820 |
| சாய்ந்த மின்கம்பிகள் | 1,03,508 |
| மின்மாற்றிகள் (Transformers) | 886 |
| துணை மின்நிலையங்கள் | 181 |
| தென்னந்தோப்புகள் | 30,000 எக்டர் |
| நெற்பயிர் | 32,706 எக்டர் |
| வேளாண்மை மற்றும் தோட்டப் பயிர்கள் பாதிப்பு | 88,102 எக்டர் |
| கால்நடைகள் | 12,298 |
| பறவைகள் | 92,507 |
| விழுந்த மரங்கள் | 11,32,686 |

இத்தகைய பெரிய பேரழிவுகளின் போது சிக்கித் தவிக்கும் மக்களை உடனடியாக மீட்பதற்கான தொலைநோக்குத்



திட்டத்தைத் தமிழக அரசு தீட்டவில்லை. 2011 திசம்பர் 30 அன்று கடலூர் மாவட்டத்தைத் தாக்கிய 'தானே' புயல், 2016 திசம்பர் 11 அன்று சென்னையைத் தாக்கிய 'வார்தா' புயல், 2017 நவம்பர் 29-30இல் குமரி மாவட்டத்தைத் தாக்கிய 'ஒக்கி' புயல் ஆகியவற்றின் பேரழிவுகளிலிருந்து தமிழக அரசு பாடம் கற்கவில்லை என்பதையே கஜா புயலின் மீட்பு நடவடிக்கையின் போதாமைகள் புலப்படுத்துகின்றன. புயல் தாக்கிய பின் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மின்சாரம் வழங்குவதைச் சீர்செய்வது, மக்களுக்குக் குறைந்த அளவில் நிவாரணத் தொகை வழங்குவது என்பதுடன் தன் கடமையை அரசு கைகழுவிவிடுகிறது.

கஜா புயலால் 50 இலட்சம் தென்னை மரங்கள், மா, பலா, தேக்கு, சவுக்கு, தைலமரம் மற்றும் பிற மரங்கள் என 50 இலட்சம் மரங்கள் முறிந்து விழுந்துள்ளன. குறிப்பாக வீடுகளிலும், தெருக்களிலும், போக்குவரத்துச் சாலைகளிலும் விழுந்துள்ள மரங்களை அகற்றுவதற்கான சிறப்பு ஏற்பாட்டைத் தமிழக அரசு செய்யவில்லை. அந்தந்த ஊர்களில் வாழும் இளைஞர்களும் மக்களும் மரங்களை வெட்டி அகற்றும் பணியைச் செய்து கொண்டிருக்கிறார்கள். உடனடியாக மரங்களை அகற்றாததால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தண்ணீர், உணவு போன்றவற்றை வழங்க முடியவில்லை. தமிழக அரசு இராணுவத்தின் உதவியைக் கேட்டுப் பெற்றிருந்தால் விரைவில் மரங்கள் அகற்றப்பட்டிருக்கும்.

தானே புயலின் போது முழுமையான அளவில் மின்சாரம் வழங்கிட ஒரு மாதமாயிற்று. ஜெனரேட்டர்களைத் தயார் நிலையில் வைத்திருந்து, கஜா புயல் பாதிக்கப்பட்ட பகுதியில் அவற்றைக் கொண்டு நீர்த்தேக்கத் தொட்டிகளில் நீரை ஏற்றி, குடிநீர் வழங்கியிருக்க வேண்டும். ஆடு, மாடுகள் செத்துக் கிடக்கும் சூழலில் குளம், குட்டைகளில் உள்ள நீரைப் பயன்படுத்துவதால் தொற்றுநோய்களுக்கு ஆளாகும் நிலை ஏற்படும்.

மின்துறை ஊழியர்கள் மற்ற மாவட்டங்களிலிருந்தும் வரவழைக்கப்பட்டு விழுந்து கிடக்கும் மின்கம்பங்களை நடும் பணியில் முழுமூச்சுடன் ஈடுபட்டு வருகின்றனர். பல இடங்களில் நெல் வயல்களில் வீழ்ந்துள்ள மின்கம்பங்களைத் தூக்கிச் சென்று நடும் பெருந்துன்பமான பணியைச் செய்கின்றனர்.



இவர்களின் பணியை மக்கள் பாராட்டுகின்றனர். இப்பணியில் அந்தந்தப் பகுதியில் உள்ள இளைஞர்களும் உறுதுணையாக உள்ளனர். இப்பணியில் ஈடுபட்டிருந்தபோது மின்சாரம் தாக்கி மின்துறை ஊழியர்கள் இரண்டு பேர் இறந்து போனது கொடுமையாகும். ஆயினும் ஒரு இலட்சம் மின்கம்பங்களை மீண்டும் நட்டு, மின் கம்பிகளை இணைத்து, முன்பு இருந்த நிலைக்கு மின்சாரம் வழங்கிட இரண்டு மாதங்களாகும் என்று கருதப்படுகிறது.

கஜா புயலின் சூறைக்காற்று நின்றவுடன் மீட்புப் பணிகளையும் துயர்துடைப்புப் பணிகளையும் முன்னின்று மேற்கொள்வதற்கு ஊராட்சிகளின் தலைவர்களும் உறுப்பினர்களும் இல்லாததால் கிராம நிர்வாக அலுவலர்களை மட்டுமே சார்ந்திருக்கும் அவல நிலை இருந்தது. 2016 அக்டோபர் மாதம் உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல் நடந்திருக்க வேண்டும். உயர்நீதிமன்றம் பல தடவை அறிவுறுத்தியும் தோல்வி பயத்தின் காரணமாக அ.தி.மு.க. ஆட்சி உள்ளாட்சித் தேர்தலை நடத்தவில்லை. உள்ளாட்சிகளின் தலைவர்களும் உறுப்பினர்களும் அந்தந்த ஊர்களில் மக்களோடு வாழ்பவர்கள். அதனால் இதுபோன்ற பேரிடர் காலங்களில் மரங்களை வெட்டி அகற்றுவது, சாலைகளில் போக்குவரத்துக்கான தடைகளை நீக்குவது, மக்களுக்கு உடனடித் தேவைகளான தண்ணீர், பால், உணவு, போர்வை, தார்ப்பாய் முதலானவை கிடைக்குமாறு செய்வது முதலான பணிகளில் முனைப்புடன் ஈடுபட்டிருப்பார்கள். கஜா புயலை ஒரு பாடமாக ஏற்று உள்ளாட்சித் தேர்தல்களை விரைவில் நடத்துமாறு மக்கள் திரள் போராட்டங்களைத் தமிழகம் முழுவதும் நடத்த வேண்டும்.

உள்ளாட்சிகளில் மக்களின் பிரதிநிதிகள் இல்லாததால், கஜா புயல் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகளும் நிவாரணப் பொருள்கள் வழங்கலும் வருவாய்த் துறை அலுவலர்கள் மூலம் செய்யப்படுகிறது. இதனால் மீட்புப் பணியில் பெரும் சுணக்கமும் நிவாரணப் பொருள்களை வழங்குவதில் பல குளறுபடிகளும் ஏற்பட்டுள்ளன. சேதமடைந்த வீடுகளுக்காகவும், அழிவுற்ற பயிர்களுக்காகவும் இழப்பீட்டுத் தொகை வழங்கும் போது, உள்ளாட்சியின் மக்கள் பிரதிநிதிகளின் கண்காணிப்பு இல்லாததால் ஊழல் தலைவிரித்தாடப் போகிறது.

சாலைகளில் போக்குவரத்தையும், மின்வழங்கலையும் இயல்பு நிலைக்குக் கொண்டுவந்த பின் அரசு நிர்வாகம் கஜா புயல் பாதித்த பகுதிகளிலிருந்து காணாமல் போய்விடும். இம்மக்களின் வாழ்வாதாரம் பழைய நிலைக்குத் திரும்புமா? என்பது பெரிய கேள்விக்குறியாக நிற்கிறது.

காவிரிப்படுகையின் கடைமடைப் பகுதிகளுக்குக் கடந்த முப்பது நாற்பது ஆண்டுகளாக நெற்பயிரிடும் அளவுக்கு நீர் கிடைக்காததால், மாற்றுப் பயிராகப் பெரும் பரப்பில் தென்னை மரங்களை நட்டனர். மா, பலா போன்ற பழ மரங்களும் நட்டனர். கஜா புயலில் 30,000 எக்டரில் 50 இலட்சம் தென்னை மரங்கள் வேரோடு சாய்ந்துவிட்டன. ஒரு தென்னை மரத்தை நட்டபின் 7-8 ஆண்டுகளில் காய்க்கத் தொடங்கும்; மரம் நன்கு முதிர்ச்சியடைந்து முழு அளவில் காய்ப்பதற்கு 15 ஆண்டுகளாகும். ஒரு ஏக்கரில் உள்ள 75 மரங்களில் ஆண்டிற்கு 8 வெட்டு; ஒவ்வொரு வெட்டுக்கும் 3500 காய்கள் கிடைக்கும். ஓராண்டில் தோராயமாக ஒரு இலட்சம் உருவா வருவாய் கிடைக்கும். 15 ஆண்டுகள் செலவு செய்து, ஒரு தலைமுறையின் உழைப்பைத் தந்த பிறகே இந்த நிலையை எட்ட முடியும். குடும்பங்களில் பிள்ளைகளின் உயர்கல்வி, திருமணம் முதலான செலவுகளுக்குத் தென்னையையே நம்பி வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். தென்னை மரங்களின் அழிவால் இக்குடும்பங்களின் பிள்ளைகளின் உயர்கல்விக் கனவு தொலைந்துவிட்டது. இவர்களின் வாழ்க்கை 25 ஆண்டுகள் பின்னோக்கிச் சென்றுவிட்டது.

தமிழக அரசு, சாய்ந்துவிட்ட ஒரு தென்னை மரத்துக்கு இழப்பீடாக ரூ.600/-ம், அதை அகற்றுவதற்காக ரூ.500/-ம் என ரூ.1,100/- வழங்கப்படும் என அறிவித்துள்ளது. புயல் நிவாரணப் பணியில் ஈடுபட்டுள்ள தமிழக அரசின் வேளாண் துறைச் செயலாளர் ககன்தீப் சிங்பேடி ஒரு தென்னை மரத்தை வெட்டி அகற்றுவதற்கு ரூ.1,600/- செலவாகும் என்று கூறியுள்ளார். சென்னை-சேலம் எட்டு வழிச் சாலையில் அகற்றப்படும் தென்னை மரம் ஒன்றுக்கு ரூ.50,000 இழப்பீடாக வழங்கப்படும் என்று சேலம் மாவட்ட ஆட்சியர் அறிவித்தார். ஆனால் கஜா புயலால் வீழ்ந்த தென்னை மரத்துக்கு ரூ.1,100 மட்டுமே தரப்படும் என்று தமிழக அரசு கூறுவது எவ்வளவு பெரிய மோசடி!

ஒரு தென்னை மரத்துக்கு ரூ.20,000 வழங்கப்பட வேண்டும். இந்த ஆண்டு ரூ.10,000, அதற்கு அடுத்த ஆண்டில் ரூ.5,000 மூன்றாவது ஆண்டில் ரூ.5,000 என்று வழங்க வேண்டும். அப்போதுதான் மீண்டும் தென்னம் பிள்ளையை நட்டு வளர்க்க முடியும். உழவர்கள் தங்கள் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க முடியும். இதே தன்மையில் பலா, மா, தேக்கு போன்ற மரங்களுக்கும் வாழை, நெல், கரும்பு, வெற்றிலை போன்ற பயிர்களுக்கும் இழப்பீடு வழங்க வேண்டும். படகுகளையும் வலைகளையும் இழந்த மீனவர்களுக்கும் உரிய இழப்பீடு அளிக்க வேண்டும். குடிசை வீடுகளை அரசே கான்கிரீட் வீடகளாகக் கட்டித்தர வேண்டும்.



வயலில் சாய்ந்த மின்கம்பங்களை நடும் பணியில் மின்வாரிய ஊழியர்கள்

முதலமைச்சர், உடனடி நிவாரணமாக ரூ.1000 கோடி அறிவித்துள்ளார். 22-11-18 அன்று பிரதமர் நரேந்திர மோடியைத் தில்லியில் சந்தித்து உடனடியாக ரூ.1,431 கோடி அளிக்க வேண்டும் என்றும், அடுத்து ரூ.14,910 கோடி வழங்க வேண்டும் என்றும் கோரியுள்ளார். இந்த ரூ.14,910 கோடியில் குடிசை வீடுகளுக்காக ரூ.6,000 கோடி, மின்துறைக்காக ரூ.7,077 கோடி கேட்கப்பட்டுள்ளது. ஆனால் வேளாண்மை மற்றும் தோட்டப் பயிர்களுக்காக வெறும் ரூ.625 கோடி மட்டுமே கோரப்பட்டுள்ளது. எனவே தமிழக அரசு உழவர்களின் வாழ்வை மீட்டெடுக்கும் எண்ணத்தில் இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. காவிரிப்பாசனப் பகுதியை மீத்தேன், ஹைட்ரோகார்பன் எடுப்பதற்கான மண்டலமாக மாற்றத் திட்டமிட்டுள்ளதோ என்று அய்யப்பட வேண்டியுள்ளது.

தமிழக அரசு கேட்டுள்ள ரூ.14,910 கோடியில் பத்து விழுக்காடு அளவில் மட்டுமே நடுவண் அரசு அளிக்கும் என்பதைக் கடந்த காலங்களில் நடந்தவை உணர்த்துகின்றன. 2015இல் சென்னை வெள்ளத்தின் போது ரூ.25,912 கோடி கேட்டதற்கு ரூ.1769 கோடியும் 2016-17இல் வறட்சிக்காக ரூ.35,565 கோடி கேட்டதற்கு ரூ.1793 கோடியும் நடுவண் அரசு அளித்தது. எனவே தமிழக அரசு கஜா புயலுக்காகக் கேட்டுள்ள ரூ.15,000 கோடி மிகவும் குறைவு என்பதால், உழவர்களுக்கு உரிய இழப்பீடு வழங்கும் வகையில் இத்தொகையை ரூ.50,000 கோடியாகக் கேட்க வேண்டும். நடுவண் அரசு இத்தொகையை வழங்க வேண்டும் என்று தமிழர்கள் கட்சி வேறுபாடுகளை ஒதுக்கி வைத்துவிட்டு ஓரணியில் திரண்டு போராட வேண்டும்.

நமக்கு உணவளித்த காவிரிப்படுகை உழவர்கள் தம் வீடுகளை, உடைமைகளை, வாழ்வாதாரத்தை இழந்து - எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை இழந்து வீதியில் நிற்கிறார்கள். இவர்களின் துயர்களைத் துடைக்கவும், வாழ்வாதாரத்தை மீட்டெடுக்கவும் உரிய செயற்பாடுகளை மேற்கொள்வது தமிழர்கள் அனைவரின் கடமையாகும்.

# காஞ்சியில் தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி புலவர் கி.த.பச்சையப்பன்

## ஆகியோரின் நினைவேந்தல் நிகழ்ச்சி



காஞ்சிபுரம் முற்போக்கு சமூகநீதிப் பேரவையும், கிராமிய இந்தியா சமூக , கலை-பண்பாட்டு மையமும் இணைந்து கலைஞர். கருணாநிதி மறைவையும், புலவர். கி.த.பச்சையப்பன் மறைவையும் நினைவுகூர்ந்து படத்திறப்பு நிகழ்வு கடந்த 11-11-2018 ஞாயிறு முற்பகல் பாலாறு அருகே உள்ள ரிஸ்க் உரையரங்கத்தில் நடத்தப்பட்டது.

சமூகநீதிப் பேரவைத் தலைவர் க. கோதண்டன் தலைமையில் நடந்த இந்நிகழ்வில் ரிஸ்க் இரா. சடையன் வரவேற்புரை நிகழ்த்தினார். கலைஞர் படத்தை புஞ்சை.பூ. வில்லவனும், புலவர் கி.த.ப. படத்தை திருவள்ளுவர் அறக்கட்டளை தமிழ் முகிலனும் முறையே திறந்து வைத்து நினைவுகளைப் பகிர்ந்தனர். தி.மு.க. காஞ்சி தெற்கு மாவட்டச் செயலாளர், சட்டப் பேரவை உறுப்பினர் க. சுந்தர் நிகழ்வின் நிறைவுரையை ஆற்றிச் சிறப்பித்தார்.

மேனாள் சட்ட மன்ற உறுப்பினர் பா.ம.க. சக்தி கமலாம்பாள், நாத்திகம். நாகராசன், கவிஞர்.பாரதி விஜயன், குறள் அமிழ்தன், ரிஸ்க். இல. முனுசாமி, காஞ்சி. அமுதன், ப.வேலாயுதம், பூ.கா.பொன்னப்பன், கவிஞர்.வ. வெங்கடேசன், தோழர்.சி. ஏழுமலை ஆகியோர் நினைவேந்தல் உரையாற்றினர். டாக்டர். விமுனா மூர்த்தி ஒருங்கிணைப்பில் நடந்த இந்நிகழ்ச்சி கவிஞர். தங்கப்பன் இசை மாலையுடன் தொடங்கி பொன்மதி. க. முருகன் நன்றியுரையுடன் நிறைவு பெற்றது. சமூகநீதிப் பேரவை, ரிஸ்க், மற்றும் பலவேறு அமைப்பினர் கலந்துகொண்டனர். பகல் உணவருந்தியதுடன் நிகழ்ச்சி நிறைவடைந்தது. அனைவரும் விடைபெற்றனர்.

# தொடரும் சாதி ஆணவப் படுகொலைகள்

- செங்கதிர்

இந்திய அரசமைப்புச் சட்டம் இறுதி செய்யப்பட்ட 25-11-1949 அன்று டாக்டர் பி.ஆர். அம்பேத்கர், “1950 சனவரி முதல் குடியரசாகப் போகும் இந்தியா வில் அரசியல் சனநாயகம் மட்டும் இருக்கும்; சமூக சனநாயகம் இருக்காது; சமூக சனநாயகத்தை உரு வாக்க வேண்டியது நம் கடமை” என்று எச்சரித்தார். 68 ஆண்டுகளுக்குப் பின்னும் சமூக சனநாயகம் ஏற்படவில்லை. படிநிலை ஏற்றத்தாழ்வைப் பிறவி அடிப்படையில் கொண்ட சாதியமைப்பை ஒழிக்காத வரையில் இந்திய சமூகத்தில் சனநாயகம் மலராது என்று வாழ்நாள் முழுவதும் அம்பேத்கர் வலியுறுத்திக் கொண்டேயிருந்தார். சாதி அடிப்படையிலான ஒடுக்கு முறைகளும், இழிவுபடுத்தல்களும், உழைப்புச் சுரண்டலும் நீடிக்கின்றன. சாதியமைப்பின் கொடிய வடிவங்களில் ஒன்றாகச் சாதி ஆணவக் கொலைகள் இந்தியா முழுவதும் நடந்து கொண்டிருக்கின்றன.

தந்தை பெரியாரின் பேருழைப்பால் தமிழகத்தில் சமூகநீதி வளர்த்தெடுக்கப்பட்டிருக்கிறது; இந்தியா விலேயே தமிழகத்தில் மட்டும் பெயர்களுக்குப் பின் சாதிப் பெயர் இல்லை என்றெல்லாம் பெருமையுடன் சொல்லிக் கொண்டாலும் தமிழகத்திலும் சாதி ஆணவக் கொலைகள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன. 2012இல் தருமபுரி தலித் இளைஞர் இளவரசன் - வன்னியர் சாதியினரான திவ்யா ஆகியோரின் காதல், தலித் குடியிருப்பு மீது நடத்தப்பட்ட தாக்குதல், இளவரசன் இறப்பு ஆகியன தமிழகத்தில் பெரும் பேசு பொருளாக இருந்தது. சாதி இந்துப் பெண்ணைக் காதலித்ததற்காக கோகுல்ராஜ் கொல்லப்பட்டார். உடு மலைப்பேட்டை தலித் சங்கர் - சாதி இந்துவான கவுசல்யா ஆகியோர் வெட்டப்பட்டதில் சங்கர் இறந்துவிட்டார். கவுசல்யா, தன் காதல் கணவனைக் கொன்ற பெற் றோர்க்குத் தண்டனைப் பெற்றுத் தந்தார். சாதி ஒழிப்புக்கு எதிராகக் களமாடி வருகிறார்.

2018 நவம்பரில் ஒசூருக்கு அருகில் உள்ள சூடகொண்ட பள்ளியைச் சேர்ந்த 25 அகவையினரான சந்தீஷ், 21 அகவையினரான சுவாதி ஆகிய இருவரும் கொடிய முறையில் சாதிவெறியர்களால் கொல்லப்பட்டனர்.

சூடகொண்டபள்ளி ஒரு சிற்றூர். 30 வன்னியர் குடும்பங்கள், 13 தலித் குடும்பங்கள் மற்றும் பிற சாதியினர் சில குடும்பங்கள் கொண்ட ஊர். நந்தீஷ் ஒரு தலித். சுவாதி வன்னியர் சாதியைச் சேர்ந்தவர். சுவாதியின் தந்தை சீனிவாசன் வால்மீகி நாயுடு சாதியைச் சேர்ந்த பெண்ணைத் திருமணம் செய்து கொண்டவர்.



சாதி வெறியர்களால் படுகொலை செய்யப்பட்ட நந்தீஷ், சுவாதி

நந்தீசும் சுவாதியும் கடந்த நான்கு ஆண்டுகளாகக் காதலித்து வந்ததாகக் கூறப்படுகிறது. இவர்கள் காதலிப்பது வெளியில் தெரிந்ததால் ஓராண்டுக்குமுன் நந்தீஷ் ஒசூருக்குச் சென்று மரக்கடையில் வேலைக்குச் சேர்ந்து அங்கேயே தங்கியிருந்தார். சுவாதி 2018 ஆகத்து மாதம் வீட்டை விட்டு வெளியேறினார். ஆகத்து 15 அன்று இருவரும் ஒரு கோயிலில் திருமணம் செய்து கொண்டனர். 2-9-18 அன்று பதிவுத் திருமணம் செய்துகொண்டு, ஒசூரில் குடும்பம் நடத்தினர்.

10-11-18 அன்று ஒசூரில் நடிகர் கமலஹாசன் நடத்திய மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியைக் காண நந்தீசும் சுவாதியும் வந்தனர். அப்போது இவர்களைக் கண்ட சுவாதியின் உறவினர்கள் இவர்களைச் சந்தித்து, சுவாதியின் பெற்றோர் அவர்களின் திருமணத்தை ஏற்றுக்கொண்டனர் என்றும் சாதி வழக்கப்படி திருமணம் செய்ய விரும்புவதாகவும் கூறி, இருவரையும் மகிழுந்தில் அழைத்துச் சென்றனர்.

கர்நாடக மாநிலம், மாண்டியா மாவட்டம், சிவசமுத் திரம் பகுதிக்கு அழைத்துச் சென்று கொடூரமாகத் தாக்கி, இருவரின் முகத்தையும் அடையாளம் கண்டறிய முடியாதவாறு சிதைத்து, கை, கால்களைக் கட்டி ஆற்றில் வீசிவிட்டனர். மூன்று நாள்கள் கழித்து இருவரின் உடல்களும் கரை ஒதுங்கின. சாதிக்கு இழுக்கு தேடி விட்டாள் என்று கருதி சுவாதியின் தலையை மொட்டை யடித்திருந்தனர்.

நந்தீஷ் மேதை அம்பேத்கர் பற்றாளர். நவம்பர் 10 அன்று அவர் அணிந்திருந்த சட்டையில் அம்பேத்கர் படமும் ‘ஜெய் பீம்’ என்ற முழக்கமும் பொறிக்கப் பட்டிருந்தது. அம்பேத்கர் படத்துக்குக் கீழே சூடகொண்டப் பள்ளி என்றும் பொறிக்கப்பட்டிருந்ததால் கர்நாடகக் காவல் துறையினர் அவர்களின் ஊரைக் கண்டறிந்து ஓசூர் காவல் துறையிடம் அவர்களின் உடல்களை ஒப்படைத்தனர்.

நந்தீசின் தம்பி நவம்பர் 11 அன்று ஓசூர் காவல் நிலையத்தில் நந்தீஷ், சுவாதி இருவரும் காணவில்லை என்று புகார் கொடுத்தார். காவல்துறை உடனடியாக நடவடிக்கை எடுத்திருந்தால் இருவரையும் காப்பாற்றி யிருக்கலாம். இப்படுகொலையைச் சுவாதியின் தந்தை யும் உறவினர்களும் திட்டமிட்டு நடத்தியிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. சுவாதியின் தந்தை சீனிவாசன், பெரியப்பா வெங்கடேஷ், உறவினர் கிருஷ்ணன் உள்ளிட்ட ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருமண அகவை எய்திய ஒரு ஆணும் பெண்ணும் தம் வாழ்க்கைத் துணையைத் தீர்மானிக்கும் உரிமை மறுக்கப்படுவதும், அவர்கள் கொல்லப்படுவதும் நம் சமூகம் நிலவுடைமைக் காலத்தின் சாதியச் சேற்றி லேயே இன்றளவும் ஆழ்ந்து கிடக்கிறது என்பதையே காட்டுகிறது.

இந்திய அளவில் ஆண்டுதோறும் ஏறக்குறைய ஆயிரம் ஆணவக் கொலைகள் நடக்கின்றன. மற்ற மாநிலங்களைவிட இது தமிழகத்தில் குறைவாக நடக்கிறது என்பது பெருமைக்குரியதல்ல. ஆணவக் கொலைக்கு எதிராகக் கடுமையான சட்டங்கள் இயற்றப்பட வேண்டும். சொந்த சாதி உணர்ச்சி, சாதிப் பெருமிதம் ஆகிய வற்றுக்கு எதிராக அரசுகளும், வாக்கு வங்கி அரசியல் கட்சிகளும் எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை.

பொதுவாக, ஆணவக் கொலைகள் தலித் இளைஞர், தலித் அல்லாத சாதிப் பெண்ணைக் காதலிக்கும் போதும், திருமணம் செய்து கொள்ளும் போதும்தான் நடக்கின்றன. தலித் மக்களை எல்லாச் சாதியினரும் தீண்டத்தகாதவர்களாகவே இன்றளவும் பார்க்கின்றனர் என்பதையே இது உறுதிப்படுத்துகிறது. இதைப்பற்றி அம்பேத்கர் 1945ஆம் ஆண்டில், “தீண்டாத மக்களுக்கு எதிராகப் பாகுபாடு காட்ட வேண்டும் என்ற அளவில் இந்துக்களிடம் ஒரு மனப்போக்காக இருக்கின்ற தீண்டா மையானது கற்பனைக்கெட்டக்கூடிய காலத்திற்குள் நகரங்களிலோ, கிராமங்களிலோ மறைந்து போகாது என்று நான் உறுதியாகக் கருதுகிறேன்” என்று எழுதியிருக்கிறார்.

இந்த நவம்பர் மாதத்திலேயே மற்றொரு சாதி ஆணவக் கொலை திருநெல்வேலி மாவட்டத்தில் நடந்திருக்கிறது. எசக்கி சங்கர் (அகவை 33) என்பவர் வெள்ளான்குழி என்ற ஊரைச் சேர்ந்தவர். களக்காடு மத்திய கூட்டுறவு வங்கியில் வேலை செய்து வந்தார். இவர் மற்றொரு சாதியைச் சேர்ந்த பெண்ணைக் காதலித்தார். இரண்டு குடும்பத்தினரும் திருமணத்துக்கு ஒப்புதல் அளித்தனர். ஆனால் பத்தாம் வகுப்பு படிக்கும் அப்பெண்ணின் தம்பி இத்திருமணம் நடப்பதை விரும்பவில்லை. அவர் தன்னுடன் படித்த மூன்று பேருடன் சேர்ந்து, எசக்கி சங்கர் தாமிரபரணி ஆற்றில்



படுகொலை செய்த சுவாதியின் தந்தை சீனிவாசன், பெரியப்பா வெங்கடேஷ், உறவினர் கிருஷ்ணன்

குளிக்கச் சென்ற போது கொன்றுவிட்டார். 21-11-18 அன்று அப்பெண் தற்கொலை செய்து கொண்டார். 22-11-18 அன்று அப்பெண்ணின் தம்பியும் அவருடன் படிக்கும் மாணவனும் கைது செய்யப்பட்டனர்.

நம்முடைய கல்வி முறை சாதியமைப்புக்கு எதிராக எள்முனையளவுகூட எதையும் செய்யவில்லை என்ப தையே இது காட்டுகிறது. பள்ளிகளில் தான் எந்தச் சாதி என்பதன் அடையாளமாக ஒரு குறிப்பிட்ட வண்ணத் தில் கையில் கயிறு கட்டும் அளவுக்கு வகுப்பறைகளில் சாதி உணர்ச்சியும் பகையும் தமிழ்நாட்டில் மேலோங் கியிருப்பது மாபெரும் வெட்கக்கேடாகும்.

சாதி ஆணவக் கொலைகளுக்கு எதிராகக் கடுமை யான சட்டங்கள் இயற்ற வேண்டும். பள்ளிப் பாடத்தில் அம்பேத்கர், பெரியார் ஆகியோரின் சாதி ஒழிப்புக் கருத்துகளைச் சேர்க்க வேண்டும். சாதி என்பது சமத்து வத்துக்கு, சமஉரிமைக்கு, சனநாயகத்துக்கு, நாகரிக சமூகத்துக்கு எதிரானது என்கிற கருத்தை இன்னும் வலுவாக மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும்.

## பெரியார் பெருந்தொண்டர் ஓவியர் சாமி-கங்காதரன் 9ஆம் நினைவு நாள்



தந்தை பெரியார் அவர்கள் 24.12.1973இல் மறைந்தார். பெரி யாரின் மறைவு கருதி, முதலாவது இரங்கல் கூட்டம் திருச்சியில், பிசப் ஹீபர் உயர் நிலைப் பள்ளித் திடலில் 6.1.1974இல் நடைபெற்றது. அக்கூட் டத்தில் மேடையில் வைப்பதற்கு என்று ஓவியர் கங்காதரன், ஒரே நாளில் தந்தை பெரியாரின் தத்ரூபமான படத்தை வரைந்தார். அந்தப் படத்தைப் பார்த்தோர் வியந் தனர்.

அத்தகைய திறமை சான்ற ஓவியர் சாமி-கங்காதரன் அவர்களின் 9ஆம் ஆண்டு நினைவு நாள் 1.12.2018இல் வருவதை முன்னிட்டு, அன்னாரின் துணைவியார் சரோசா மற்றும் குடும்பத்தினர் ரூ.500 சிந்தனையாளன் வளர்ச்சி நிதியாக அளித்தனர்.

செய்தி : **இரா. கலியபெருமாள்**, உறையூர், திருச்சி

# சட்டம் யார் கையில்?

இராமியா

**ஒரு** மக்கள் நாயகச் சமூகத்தை இயக்கும் சட்டங்களை இயற்றுவது மக்கள் பிரதிநிதிகளின் கடமை. சமூகமாற்றத்தைக் கணக்கில் கொண்டு அவ்வப்போது சட்டத்திருத்தங்கள் செய்யவேண்டும் என்றாலும், புதியசட்டங்களை இயற்றவேண்டும் என்றாலும், பழைய சட்டங்களை நீக்கவேண்டும் என்றாலும், அதுமக்களிடம் விரிவாக விவாதிக்கப்பட்ட பிறகு, மக்களின் கருத்துப்படி தான், மக்களின் பிரதிநிதிகள் அதைச் செய்யவேண்டும். இந்தியாவில் இவ்வழிமுறைதான் பின்பற்றப்படுகிறது என்று சொல்லப்பட்டாலும், நடைமுறையில் பரிதாபத் திற்கு உரிய செய்திகள் நிறையவே உள்ளன.

முதலாவதாக மக்கள் பிரதிநிதிகள் பலருக்கு, சட்டம் இயற்றுதல்,சட்டத்திருத்தம் செய்தல், சட்டத்தை நீக்குதல் பற்றிய முழுமையான புரிதல் இருப்பது இல்லை. அதிகாரத்தில் இருக்க ஆசைப்படும் அரசியல் கட்சிகள் அவ்வகையான புரிதல் குறைவானவர்களையே தேர்தலில் நிறுத்தி வெற்றி பெற வைக்கின்றன. தவிர்க்க முடியாதபடி விவரம் புரிந்த மக்கள் நலன் விரும்பிகள் இம்மையத்தில் நுழைய நேரிட்டால், அவர்களைத் தங்கள் அதிகார வலிமையால் அடக்கிவிடுகின்றனர். இதன்மூலம் ஒரு சிறு குழுவினர் தங்கள் விருப்பப்படி எல்லாம் சட்டங்களை இயற்றவும், திருத்தவும், நீக்கவும் செய்து கொள்கின்றனர்.

அதன்பின் மக்களுடன் கலந்து ஆலோசித்தல் என்ற அம்சம் இருக்கிறதே? அது இந்தியாவில் கொடூரமாகக் கேலிக்கூத்தாக்கப்படுகிறது. மிகப் பெரும்பான்மை மக்களுக்கு இதைப்பற்றிய செய்தி சென்று அடைவதே இல்லை. அதிகாரத்தைத் தங்களிடமேயே தக்கவைத்துக் கொள்ள விரும்பும் சிறுகுழுவினரின் பிரதிநிதிகள் தொண்டு நிறுவனங்கள் என்ற பெயரில் உலவிக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் குழுக்களாகப் பிரிந்து கொண்டு சிலர் எதிர்ப்பது போலவும், சிலர் ஆதரிப்பது போலவும் போக்குக்காட்டி, இறுதியில் ஆளும்வர்க்கத்திற்கு ஏற்றபடி அனைத்தும் முடிவதுதான் இங்கு உள்ள நடைமுறை.

இந்தச் சிறு கும்பலே அனைத்து அதிகார வழி முறைகளையும் குவித்து வைத்துக் கொண்டு இருந் தாலும், சில சமயங்களில் சிலசெய்திகள் அவர்களின் கட்டுப்பாட்டை மீறி மக்களின் கவனத்திற்குச் சென்று விடு கின்றன. அப்பொழுது அதிகாரவர்க்கத்தினர் விரும்பியபடி சட்டங்களை இயற்றவும், திருத்தவும், நீக்கவும் தடை களைச் சந்திக்க வேண்டி உள்ளது. இதுபோன்ற தடை களைப் புறங்காண அதிகார வர்க்கத்தினர் ஒருவழியைக் கண்டுபிடித்து உள்ளனர். அதுதான் நீதிமன்றத் தீர்ப்பு.

நீதிமன்றங்களின் பொறுப்பு நாட்டில் நடக்கும் நடவடிக்கைகள் சட்டப்படி நடக்கின்றனவா என்று பார்ப்பதும், சட்டத்தை மீறி யாரேனும் நடந்தால் அவர் களுக்குச் சட்டத்தில் குறித்து உள்ளபடி தண்டனையை விதிப்பதும் தான். இந்த நடைமுறையில் வழக்கு விவாதத்தின் போது நீதிபதிகள் வெளிப்படுத்தும் கருத்து களும், தீர்ப்புகளும் வழிகாட்டுதலாக அமைவது இயற்கை தான். ஆகவே இந்தக் கருத்துகளும், தீர்ப்புகளும் சட்டங்களுக்கு உட்பட்டுத்தான் இருக்கவேண்டும். ஆனால் சில சமயங்களில் அவை சட்டங்களின் நீட்சியாக அமைந்து விடுகின்றன. அப்படி அமையும் போது அதன் பின்னால் வரும் வழக்குகளுக்கு அவை சட்டங்களாகவே ஆகிவிடுகின்றன.

அவ்வாறு நீதிமன்றங்களால் பல சட்டங்கள் உருவாக்கப்பட்டு / திருத்தப்பட்டு / நீக்கப்பட்டு உள்ளன. ''தீபாவளி அன்று இரவு எட்டு மணி முதல் பத்து மணி வரை தான் பட்டாசுகளை வெடிக்க வேண்டும்; ஒரு குறிப்பிட்ட ரக டீசல் வண்டியைக் குறிப்பிட்ட காலத்திற்குப் பின் விற்கக்கூடாது; மண உறவைத் தாண்டிய ஆண் பெண் உறவைக் கிரிமினல் குற்றமாகக் கருதக்கூடாது;'' இன்னும் இவை போல் பல சட்டப்பிரிவுகள் நீதிமன்றங் களால் இயற்றப்பட்டு / திருத்தப்பட்டு / நீக்கப்பட்டு உள்ளன. இவை எல்லாம் நன்மை பயக்குமா என்பது ஒருபுறம் இருக்கட்டும். ஆனால் இவை மக்கள் நாயக மாண்புக்குப் பொருந்துமா? இவ்வாறு சட்டப் பிரிவுகளை இயற்றிய, திருத்திய, நீக்கிய நீதிமன்றங்களே அவ்வாறு செய்வது நாடாளுமன்றத்தின், சட்டமன்றங்களின் பணி என்றும் பலமுறை தீர்ப்பு அளித்து உள்ளன. அவ்வாறு தாங்கள் அளித்த தீர்ப்புகளைக் கணக்கில் கொள்ளாமல் செயல்படவும் செய்கின்றன.

ஏன் அப்படி நேர்கிறது? சில வழக்குகளை விசாரிக்கும் பொழுது அவற்றின் மீது தீர்ப்பு அளிக்க நடப்பில் உள்ள சட்டங்களில் போதுமான விதிமுறைகள் இல்லாதபோது இவ்வாறு நேர்கிறது என்று சாதாரணமாக விளங்கிக் கொள்ளமுடியும்.

எடுத்துக்காட்டாக, டெல்லி நகரில் காற்று மாசு, அளவு கடந்து உள்ள நிலையில் அது மேலும் மோசமாகிவிடக் கூடாது என்பதற்காக, பட்டாசு வெடிக்கும் கால அளவை நிர்ணயம் செய்தும், அதிகமாகப் புகை உமிழும் வண்டி களின் விற்பனையைத் தடைசெய்தும் நீதிமன்றங்கள் தீர்ப்பை வழங்கி உள்ளன. இத்தீர்ப்புகளினால் பொதுவில் நன்மை விளையும் என்ற வாதம் இருந்தாலும், இந்த வழிமுறை சரியா? தனிமனிதர்களுக்கு (அதாவது மக்கள் பிரதிநிதிகள் அல்லாத நீதிபதிகளுக்கு) இத்தகைய அதிகாரம் இருப்பது மக்கள் நாயகமுறைக்கு எதிரானது அல்லவா?

அப்படி என்றால் இத்தகைய சூழல்களில் நீதிமன்றங்

கள் என்ன செய்யவேண்டும்? சட்டவிதிகளில் உள்ள போதாமையைச் சுட்டிக்காட்டி, நாடாளு மன்றத்திற்கும், சட்டமன்றங்களுக்கும் உரிய விதிமுறைகளை இயற்றும் படியோ, திருத்தும்படியோ, நீக்கும்படியோ பரிந்துரைக் கலாம் அல்லது அறிவுறுத்தலாம். அதன் பேரில் நாடாளுமன்றமோ/ சட்டமன்றங்களோ அவ்விதிமுறை களை இயற்றவோ, திருத்தவோ, நீக்கவோ செய்யலாம். அதன்பின் அவ்வழக்குகளில் தீர்ப்பு வழங்கலாம். ஆனால் நீதிமன்றங்கள் அப்படிச் செய்வது இல்லை. அவ்வப்போது தீர்ப்பு என்ற வடிவத்தில் சட்டவிதிமுறை களைஇயற்றவும், திருத்தவும், நீக்கவும் செய்கின்றன. இடைஇடையே "அப்படிச்செய்யக்கூடாது; சட்டவிதிகளை இயற்றும், திருத்தும், நீக்கும் அதிகாரம் நாடாளுமன்றத் திற்கும், சட்டமன்றங்களுக்கும்தான் இருக்கிறது; நீதிமன்றங்கள் வரம்புமீறக் கூடாது" என்றுகருத்துகளைக் கூறியும், தீர்ப்புகளை அளித்தும் தங்கள் பொறுப்பு உணர்வையும் வெளிப்படுத்திக் கொள்கின்றன. ஏன்?

இந்திய, பார்ப்பன அதிகாரவர்க்கம் தான் நினைத் ததைச் சாதித்துக் கொள்வதிலும், அதேசமயம் நியாய மாகவே நடந்து கொள்வதாகக் காட்டிக் கொள்வதிலும் குறியாக இருக்கிறது. அண்ணல் அம்பேத்கர் எழுதிய அரசியல் நிர்ணயச் சட்டத்தில் கல்வியிலும், வேலை யிலும், இடஒதுக்கீட்டுக்கு உச்சவரம்பு விதிக்கப்படவே இல்லை. ஆகவேதான் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் இடஒதுக்கீட்டின் மொத்த அளவை 69க்கு உயர்த்தி விதிமுறைகளைப் புகுத்த முடிந்தது. அதை எதிர்த்து யாரும் வழக்குப்போட முடியவில்லை. ஆனால் மண்டல் குழு அறிக்கையின் சிறுபகுதி வி.பி.சிங் அரசினால் அமலாக்கப்பட்ட பொழுது, அதற்கு எதிராகத் தொடுக்கப் பட்ட வழக்கில் தீர்ப்பு அளித்த உச்சநீதிமன்றம் "இடஒதுக் கீடு 50 விழுக்காட்டுக்கு மேல் இருக்கக்கூடாது" என உச்சவரம்பு விதித்தது. உடனே 69 இடஒதுக்கீட்டுக்கு எதிராக வழக்குகள் தொடுக்கப்பட்டன. மக்களின் உணர்வுகளுக்கு எதிராகத் தீர்ப்பு அளிக்க முடியாத நிலையில் 19 இடங்களைக் கூடுதலாக உருவாக்க வேண்டும் என்றெல்லாம் ஆணையிட்டன. (அப்படி உயர்த்துவதினால் ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களே பயன் அடைவதையும், உயர்சாதிக்கும் பலினரால் பயன் ஈட்டிக் கொள்ளமுடியவில்லை என்பதை யும் கண்ட அவாள் அம்முயற்சியைத் தொடராமல் விட்டுவிட்டனர்). தமிழ்நாடு சட்டமன்றமும் 69 இடஒதுக் கீட்டைப் பாதுகாக்க வேண்டும் என்று சட்டம் இயற்றியது. இதுசரியான முறையில் இயற்றப்பட்டு உள்ளதா; செல்லுமா என்ற ஐயப்பாடு இருக்கிறது. அதுஒருபுறம் இருக்கட்டும்.

நீதிமன்றங்களிடம் இவ்வாறு சட்டவிதிமுறைகளை இயற்றும், திருத்தும், நீக்கும் அதிகாரம் இருப்பது சரியா? காற்று மாசு போன்ற விவகாரங்களில் உடனடித் தீர்வு கிடைக்கிறது என்ற நினைப்பில் சரி என்று நினைத்தால் அதுமக்கள் நாயக மாண்புக்கு எதிரானதாகும். (காற்றின் மாசு குறைவதற்கான உண்மையான தீர்வு /தீர்ப்பு பெரு முதலாளிகளின் கோபத்தைக் கிளறும் என்பதால் நீதிமன்றங்கள் அதை எல்லாம் செய்யாது என்பது ஒருபுறம் இருக்கட்டும்)

இவ்வாறு நீதிபதிகளுக்கு அதிகாரம் இருப்பதானது, இடஒதுக்கீடு போன்ற மக்கள் உரிமை விவகாரங்களில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். ஆகவே சட்டம் இயற்றும் / திருத்தும் / நீக்கும் அதிகாரம் மக்கள் பிரதி நிதிகளுக்குத்தான் இருக்கவேண்டும் என்றும், ஒருவழக் கில் தீர்ப்புக் கூற, அதன் தொடர்பான சட்டங்களில் போதிய விதிமுறைகள் இல்லை என்றால் அதை எடுத்துக்காட்டி மேல் நடவடிக்கை எடுக்கும்படி நாடாளுமன்றத்திற்கும், சட்டமன்றங்களுக்கும் தாக்கீது அனுப்பவேண்டுமே ஒழிய, நீதிமன்றங்கள் தாமாகவே விதிமுறைகளை உருவாக்கிக் கொள்ளக் கூடாது என்றும் மக்கள்புரிந்து கொள்ளவேண்டும். அதன்படி உடனடியாகச் சட்டத்திருத் தம் செய்ய ஆவன செய்யவேண்டும்.

## பெரியாரின் தனி உதவியாளர் திருச்சி. தி.மகாலிங்கம் மறைவு



திருச்சி பெரியார் பெருந் தொண்டர் தி.மகாலிங்கம் (89) அவர்கள். தந்தை பெரியாரின் தனி உதவியாளராகவும். பெரி யாரின் பேச்சுக்களை எழுதி அவற்றை பெரியாரிடம் காட்டி அவரிடம் கையெழுத்துப் பெற்று விடுதலை ஏட்டிற்கு அனுப்பி வைப்பார். பெரியார் மறைவிற்கு பின், பெரியார் மாளிகையில் புத்தக விற்பனை நடத்தி வந்தார். 9.1.1972இல் திருச்சி உறையூரில் திருச்சி சிந்தனையாளர் கழகப் பொது கூட்டமேடையில். பெரியார் மாளிகையில் பணியாற்றிய திராவிட ராணியை, பெரியார் முன்னிலையில் வாழ்க்கை ஒப்பந்தம் செய்து கொண்டவர். வயது முதிர்வின் காரணமாக 25.11.2018அன்று காலை 11.45.மணி அளவில் மறைவுற்றார். 26.11.20.18.அன்று திருச்சி அரசு மருத்துவகல்லூரிக்கு அவர் உடல் கொடையாக வழங்கப்பட்டன. அவரது மனைவி திராவிட ராணி, மகன் பெரியார் செல்வம் ஆகியோர்க்கு திருச்சி சிந்தனையாளர் கழகம் மற்றும் மார்க்சியப் பெரியாரிய பொதுடைமைக்கட்சி ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித் துக்கொள்கிறது. உறையூர் மு.வெங்கடேசன். இரா.கலிய பெருமாள், ந.கருணாகரன், இரா.தமிழ்ச்சுடர், வன.கோவிந்தசாமி ஆகியோர் நேரில் சென்று இறுதி அஞ்சலி செலுத்தினர்.

செய்தி. திருச்சி **ந. கருணாகரன்**

# அ.தி.மு.க.வினர் மூவரை விடுதலை செய்த தமிழக ஆளுநர் எழுவரை விடுதலை செய்யாதது ஏன்?

- க. முகிலன்

உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி சதாசிவம் தலைமையிலான அமர்வு 18.2.2014 அன்று முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய மூவரின் மரணதண்ட னையை வாழ்நாள் தண்டனையாகக் குறைத்தது. மேலும் குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவு 435-இன்படி "உரிய அரசு" இராசிவ் காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்ட ஏழு பேரையும் விடுதலை செய்யலாம் என்றும் தீர்ப்பளித்தது.

அப்போது முதலமைச்சராக இருந்த செயலலிதா எழுவரையும் விடுதலை செய்வதாக அறிவித்தார். உடனடியாக நடுவண் அரசு, இந்த வழக்கு மத்தியப் புலனாய்வுத் துறையால் விசாரிக்கப்பட்டதால் இவர் களை நடுவண் அரசின் ஒப்புதல் பெறாமல் விடுதலை செய்யக்கூடாது என்று உச்சநீதிமன்றத்தில் தடை ஆணை பெற்றது. 2015 திசம்பர் 2 அன்று இந்த வழக்கில் தீர்ப்பளித்த உச்சநீதிமன்றம் இதே கருத்தை உறுதி செய்தது. இத்தீர்ப்பை மறுஆய்வு செய்யுமாறு தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் விண்ணப்பித்தது. இதன்மீது 7-2-2017 அன்று தீர்ப்பளித்த உச்சநீதி மன்றம் முன்னைய தீர்ப்பையே உறுதி செய்தது.

அந்நிலையில், இருபது ஆண்டுகளுக்குமேல் சிறையில் இருக்கும் எழுவரை விடுதலை செய்யக்கோரி ஆளு நருக்கு அனுப்பிய விண்ணப்பத்தின் மீது எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று கூறி பேரறிவாளன் உச்ச நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கின் மீதான தீர்ப்பு 6-9-2018 அன்று வழங்கப்பட்டது. இத்தீர்ப்பை வழங்கிய நீதிபதிகள் ரஞ்சன்கோகாய், நவீன் சின்கா, கே.எம். ஜோசப் ஆகியோர் "இராசீவ் காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்டு 27 ஆண்டுகளாக சிறையில் இருக்கும் முருகன், சாந்தன், பேரறிவாளன், இராபர்ட் பயாஸ், நளினி, இரவிச்சந்திரன், செயக்குமார் ஆகிய ஏழு பேர் விடுதலை குறித்துத் தமிழக அரசு ஆளுநருக்குப் பரிந்துரை செய்யலாம்; அதை ஆய்வு செய்து முடிவெடுக் கும் அதிகாரம் ஆளுநருக்கு உண்டு" என்று கூறினர்.

இத்தீர்ப்பின் அடிப்படையில் தமிழக அமைச்சரவை 9-9-2018 அன்று கூடி, இந்திய அரசமைப்புச் சட்டத் தின் 161ஆவது பிரிவின்கீழ் எழுவரையும் விடுதலை செய்யுமாறு ஆளுநருக்குப் பரிந்துரை செய்வது என்று தீர்மானித்தது. அத்தீர்மானத்தை ஆளுநருக்கு அனுப் பியது. 161ஆவது பிரிவு என்பது கூட்டாட்சி அரசமைப் பில் மாநில என்பது அரசுக்கு வழங்கப்பட்டுள்ள இறை யாண்மை கொண்ட அதிகாரமாகும். எனவே தமிழக அமைச்சரவையின் முடிவுக்கு ஆளுநர் உடனடியாக ஒப்புதல் வழங்க வேண்டும் என்று உச்சநீதிமன்றத் தின் முன்னாள் நீதிபதி மார்க்கண்டேய கட்சுவும் மற்ற சட்ட வல்லநர்களும் கருத்துரைத்தனர்.



கோகிலாவாணி ஹேமலதா காயத்ரி

எழுவர் விடுதலை குறித்து ஆளுநர் மாளிகை யிலிருந்து செய்தி வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டி ருந்த வேளையில், 161ஆவது பிரிவின்கீழ் அ.தி.மு.க. வினர் மூவரின் விடுதலைக்கு ஆளுநர் ஒப்புதல் அளித் திருப்பது தமிழர்களை அதிர்ச்சியடையச் செய்துள்ளது.

கொடைக்கானல் 'பிளசன்ட் ஸ்டே' விடுதி வழக்கில் சிறப்பு நீதிமன்றம் 2002 பிப்பிரவரி 2 அன்று செயலலித வுக்குச் சிறைத் தண்டனை விதித்தது. இதைக் கண்டித்து, தமிழகம் முழுவதும் அ.தி.மு.க. வினர் பெரும் கலவரத்தில் ஈடுபட்டனர். அப்போது தருமபுரியில் இலக்கியம்பட்டியில் கோவை வேளாண் பல்கலைக்கழகப் பேருந்தைப் பெட்ரோல் ஊற்றி தாக்கி எரித்தனர். பேருந்தில் இருந்த மூன்று மாணவி கள் தீயில் கருகி மாண்டனர். பல மாணவியர் காய மடைந்தனர். இது தொடர்பாக, தருமபுரி நகர அ.தி.மு.க. செயலாளர் நெடுஞ்செழியன், எம்.ஜி.ஆர். மன்ற நிர்வாகி இரவீந்திரன், ஊராட்சி மன்றத் தலைவர் முனியப்பன் உள்ளிட்ட 31 பேர் கைது செய்யப்பட்டனர். இந்த வழக்கில் நெடுஞ்செழியன், இரவிச்சந்திரன், முனியப்பன் ஆகிய மூவருக்கு மரண தண்டனையும் 24 பேருக்கு ஏழு ஆண்டுகள் சிறைத் தண்டனையும் விதிக்கப் பட்டது. 2016இல் இம்மூவரின் மரண தண்டனை வாழ்நாள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.

திண்டுக்கல்லில் 31-12-2017 அன்று நடைபெற்ற எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் முதலமைச்சர் பழனிசாமி பத்து ஆண்டுகளுக்குமேல் சிறையில் இருக்கும் கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள் என்று அறிவித்தார். இதற்கான அரசாணை 1-2-2018இல் வெளியிடப்பட்டது.



ஆளுநரால் பிரிவு 161இன் கீழ் விடுதலை செய்யப்பட்ட முனியப்பன், நெடுஞ்செழியன், இரவீந்தரன்

எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 1,858 வாழ்நாள் கைதிகளை அரசமைப்புச் சட்டம் 161ஆவது பிரிவின்படி விடுவிக்க முடிவு இருப்பதாகத் தெரிவித்து, தமிழக அரசு அப்பட்டியலை ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பியது. இவர்களில் 1,627 கைதிகளின் விடுதலைக்கு ஆளுநர் ஒப்புதல் அளித்தார். ஆனால் தருமபுரி பேருந்து வழக்கில் தண்டிக்கப்பட்ட நெடுஞ்செழியன், இரவீந்திரன் முனியப்பன் ஆகியோரின் விடுதலையை மறுஆய்வு செய்யுமாறு அக்கோப்புகளை ஆளுநர் தமிழக அரசுக்குத் திருப்பி அனுப்பினார்.

தமிழக அரசு 25-10-18 அன்று இந்த மூவரின் விடுதலையை ஆளுநரின் மறுஆய்வுக்கு அனுப்பியது. 31-10-2018 அன்று தலைமைச் செயலாளர், தமிழக அரசின் தலைமை வழக்குரைஞர், உள்துறைச் செயலாளர் ஆகியோர் ஆளுநரைச் சந்தித்தனர். அப்போது, சிறையில் இருக்கும் 3 பேருக்கும் அந்த மாணவிகளைக் கொலை செய்யும் நோக்கம் இருக்கவில்லை என்றும், கும்பலாகச் சேர்ந்து அவசரமாக மேற்கொண்ட நடவடிக்கையால் அப்படி நடந்துவிட்டது என்றும் விளக்கம் அளித்தனர். அதன்பின் ஆளுநர் இம்மூவரின் விடுதலைக்கு ஒப்புதல் அளித்தார்.

இவர்களின் விடுதலையைத் தமிழக அரசு கமுக்கமாகச் செய்தது. 19-11-18 அன்று வேலூர் சிறையிலிருந்து நெடுஞ்செழியன், இரவீந்திரன், முனியப்பன் ஆகிய மூவரையும் விடுதலை செய்து, அவரவர் ஊர்களுக்கு அனுப்பி வைத்த பிறகே சிறையதிகாரிகள் செய்தியாளர்களை அழைத்து இம்மூவரின் விடுதலை குறித்து தெரிவித்தனர்.

இதே வேலூர் சிறையில் இராசிவ் காந்தி கொலை வழக்கில் 27 ஆண்டுகளாக இருக்கும் எழுவர் விடுதலை குறித்து முடிவு எடுக்காமல், மூன்று அ.தி.மு.க.வினரை விடுதலை செய்த ஆளுநரின் செயலைத் தலைவர்கள் பலரும் கண்டித்தனர். அதனால் மூவர் விடுதலை குறித்து ஆளுநர் மாளிகை 20-11-18 அன்று நீண்ட விளக்க அறிக்கையை வெளியிட்டது. அந்த அறிக்கை மூலம்தான் எடப்பாடி பழனிச்சாமி ஆட்சி அ.தி.மு.க.வினர் மூவரின் விடுதலைக்காக எந்த அளவுக்கு முயன்று இருக்கிறது என்பது அம்பலமானது.

இந்நிலையில், 27-11-18 நாளிட்ட 'தி இந்து' ஆங்கில நாளேட்டில் எஸ், விஜய்குமார் என்பவர் பேரறிவாளன் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்கீழ் நடுவண் அரசின் உள்துறை அமைச்சகத்திடம் போராடிப் பெற்ற தகவல் குறித்து எழுதியுள்ளார்.




பேரறிவாளன் 2016 சனவரி 8 அன்று உள்துறை அமைச்சகத்துக்கு ஒரு விண்ணப்பம் அனுப்பினார். முருகன் என்கிற ஸ்ரீதரன் எதிர் ஒன்றிய அரசு வழக்கில் 2015 திசம்பர் 2 அன்று அளிக்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் நடுவண் அரசு உருவாக்கிய தண்டனைக் குறைப்பு விதிகள் படியை அளிக்குமாறு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்கீழ் கேட்டிருந்தார். மேலும், தண்டனைக் குறைப்பு அதிகாரம் நடுவண் அரசிடம் உள்ளது என்று உச்சநீதிமன்றத்தால் சுட்டிக்காட்டிடப்பட்டுள்ள வழக்குகளில், தண்டனைக் குறைப்பு அல்லது விடுதலை செய்தல் போன்றவற்றில் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று நடுவண் அரசு மாநிலங்களுக்கு சுற்றறிக்கையோ, ஆணையோ அனுப்பியிருந்தால் அவற்றின் படிகளை அளிக்க வேண்டும் என்றும் பேரறிவாளன் கேட்டிருந்தார்.

நடுவண் அரசின் உள்துறை அமைச்சகம், இந்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் இருப்பதால் பேரறிவாளன் கேட்ட தகவல்களைத் தரமுடியாது என்று கூறியது. அதன்பின் பேரறிவாளன் தகவல் பெறும் உரிமை ஆணையத்திடம் முறையீடு செய்தார். தலைமை தகவல் ஆணையர் யசோவர்தன் ஆசாத் 2018 ஆகத்து 14 அன்று உள்துறை அமைச்சகத்தின் தகவல் பிரிவு அலுவலருக்கு ஒரு மடல் அனுப்பினார்.

"நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது என்ற காரணத்தைக் கூறி எந்தத் தகவலையும் தரமுடியாது என்று கூறுவதை ஏற்க இயலாது. தகவல் பெறும் உரிமைச் சட்டத்தில் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையிலிருந்த போதிலும் எந்தெந்த தகவல்களை அளிக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர் (பேறறிவாளன்) தண்டிக்கப்பட்டவர்களின் தண்டனைக் குறைப்பு பற்றிய அரசின் கொள்கை, விதிகள் ஆகியவற்றின் படிகளைத் தான் கேட்கிறார். அவற்றை அவருக்கு அளிக்க வேண்டும். மேலும் விண்ணப்பதாரர் கேட்டுள்ளவாறு இந்தியாவில் நடுவண் அரசால் தண்டனைக் குறைப்பு செய்யப்பட்ட ஆணைகளின் நகல்களையும் 30-9-2018-க்குள் அளிக்கவேண்டும்" என்று தலைமை தகவல் ஆணையர் அறிவுறுத்தினார்.

இதன்படி உள்துறை அமைச்சகம் 8-11-2018 அன்று தற்போது புழல் சிறையில் இருக்கும் பேரறிவாளனுக்கு மடல் அனுப்பியது. அதில், "2015 திசம்பர் 2 அன்று உச்சநீதிமன்ற அமர்வு அளித்த தீர்ப்பில் அறிவுறுத்தியுள்ளவாறு, உள்துறை அமைச்சகம் அரசமைப்புச் சட்டப் பிரிவு 72-73 அல்லது குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவுகள் 432-435 ஆகியவற்றின் கீழ் தண்டனைக் குறைப்புக்கான விதிகளை இன்னும் உருவாக்கவில்லை, தண்டனைக் குறைப்புச் செய்யப்பட்ட அரசின் ஆணைகளைத் தற்போது கேட்கப்பட்டுள்ள படிவத்தில் தர இயலாது. அவற்றைத் திரட்டிய பிறகு வழங்கப்படும்" என்று அம்மடலில் கூறப்பட்டுள்ளது.


இராசிவ் காந்தி கொலை வழக்கை மத்தியப் புலனாய்வுத் துறை விசாரித்ததால் குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவு 435-இன்படி அவர்களை விடுதலை செய்யும் அதிகாரம் தனக்கே உண்டு என்று உரிமை கொண்டாடும் நடுவண் அரசு, 2015 திசம்பரில் உச்சநீதிமன்றம் அறிவுறுத்திய பின்னும் தண்டனைக் குறைப்புக்கான விதிகளை உருவாக்கவில்லை என்பது நடுவண் அரசின் அதிகார ஆணவப் போக்கையே காட்டுகிறது.

பேரறிவாளன் தொடர்ந்து நடத்திவரும் பல்வேறு சட்டப் போராட்டங்களுக்கு நடுவண் அரசு உரிய பதில் தராமல் வஞ்சித்து வருகிறது. எனவேதான் விடுதலை செய்ய வேண்டும் என்கிற எழுவரின் விண்ணப்பத்தைக் குடியரசுத் தலைவருக்கு அனுப்பாமலேயே, அவர்களின் விண்ணப்பங்களைக் குடியரசுத் தலைவர் தள்ளுபடி செய்துவிட்டார் என்று பொய் சொன்னது. இந்த உண்மை பிறகுதான் அம்பலமானது. நடுவண் அரசின் உயர் அதிகாரப் பதவிகளில் இருக்கும் பார்ப்பன-பனியா கும்பல் தமிழினப் பகை உணர்ச்சியுடன் இருப்பதால் இராசிவ் கொலை வழக்கை ஒரு கருவியாகக் கொண்டு தமிழர்களைத் தண்டிக்கப் பார்க்கிறது.

6-9-2018 அன்று உச்சநீதிமன்றம் அரசமைப்புச் சட்டப் பிரிவு 161-இன்கீழ் தமிழக அரசே ஆளுநர் ஒப்பதலைப் பெற்று எழுவரை விடுதலை செய்யலாம் என்று கூறிவிட்டது. அ.தி.மு.க.வினர் மூன்று பேரை 161ஆவது பிரிவின்கீழ் விடுதலை செய்த தமிழக ஆளுநர் தமிழக மக்களின் பிரதிநியாக உள்ள அமைச்சரவையின் முடிவை ஏற்று எழுவர் விடுதலைக்கு ஒப்புதல் அளிக்காமல் இருப்பது அநீதியல்லவா! ஏழு கோடித் தமிழர்களின் உணர்வுகளை மதிக்காத ஆணவப் போக்கே இது! காந்தியைக் கொன்ற கோபால் கோட்சேவை மகாராட்சி அரசு 16 ஆண்டுகளில் விடுதலை செய்தபோது, 27 ஆண்டுகளாகச் சிறையில் இருக்கும் எழுவரை விடுதலை செய்யாமல் இருப்பது திட்டமிட்ட சூழ்ச்சியா?

அ.தி.மு.க.வினர் மூவரை விடுதலை செய்ததுபோல் 27 ஆண்டுகளாகச் சிறையில் இருக்கும் எழுவரையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று அரசியல் கட்சிகளும், இயக்கங்களும், இளைஞர்களும், பொது மக்களும், ஆளுநருக்குக் கடுமையான அழுத்தம் தரும் வகையில் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும். எழுவரின் விடுதலை என்பது தமிழர்களின் தன்னுரிமையை-சுயமரியாதையை வென்றெடுப்பதாகும்.

## தமிழ்மொழி-தமிழரின் வரலாற்றுத் தொன்மையைத் தன் ஆய்வுகள் மூலம் செழுமைப்படுத்திய அறிஞர் ஐராவதம் மகாதேவன் மறைந்தார்



ஐராவதம் மகாதேவன் தன் 88ஆம் அகவையில் 26-11-2018 அன்று சென்னையில் மறைவுற்றார். 1930ஆம் ஆண்டு பிறந்தார். 27 ஆண்டுகள் இந்திய ஆட்சிப் பணியில் இருந்து பின் விருப்ப ஓய்வு பெற்றுக் கொண்டு தமிழாய்வுப் பணியில் முழுமையாக ஈடுபட்டார். 1987 முதல் 1991 வரை 'தினமணி' நாளேட்டின் ஆசிரியராக இருந்தார். பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தத்தை தினமணி ஏட்டில் நடைமுறைப்படுத்தினர். அதன்பிறகே பிற நாளேடுகள் இதைப் பின்பற்றின. ('விடுதலை' நாளேடு அதற்கு முன்பிருந்தே நீண்டகாலமாக, பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தத்தைப் பின்பற்றி வந்தது)

தமிழ் பிராமிக் கல்வெட்டுகள் மூலமாகத் தமிழ் எழுத்தின் கொள்கையை நிறுவியது மட்டுமல்லாமல், அந்த எழுத்துக்களின் அடிப்படையில், அப்போது இருந்த சமூகத்தில் இந்து மதத்தின் தடயம் எதுவும் இல்லை என்பதைச் சான்றுகளுடன் நிறுவியவர்.

அரப்பா நாகரிக மக்கள் திராவிடர்கள். தனித்த பண்பாடும், சமயமும் கொண்டிருந்தனர். அரப்பா நாகரிகம் அழியும் நிலையில் இருந்தபோது ஆரியர்கள் இந்தியாவுக்குள் வந்தனர். அப்போது ஆரியரிடம் அரப்பா நாகரிகத்தின் சமயம் மற்றும் பண்பாட்டுக் கூறுகள் கலந்தன. இதற்கான சான்று வேதங்களில் உள்ளன என்பதை நிறுவியர் ஐராவதம் மகாதேவன். ஐராவதம் மகாதேவன் மறைவு தமிழ் ஆராய்ச்சி உலகிற்குப் பேரிழப்பாகும்.

## மகாத்மா புலே நினைவுநாள்




இராணிப்பேட்டை பாரதமிகுமின் நிறுவனத்தின் இதர பிற்படுத்தப்பட்ட ஊழியர் நலச் சங்கத்தின் சார்பில் 2018 நவம்பர் 28ஆம் நாள் மாலை சங்க அலுவலகத்தில் மகாத்மா ஜோதிராவ் புலே நினைவு நாள் கூட்டம் சங்கத்தலைவர் சு.கருப்பசாமி தலைமையில் செயலாளர் க. சக்கரவர்த்தியின் வரவேற்புரையுடன் நடைபெற்றது. மேற்படி நிறுவனத்தின் பட்டியல் வகுப்பு ஊழியர் நலச் சங்கத்தின் தலைவர் கே.சேகர், அம்பேத்கர் இசைக்குழுவின் மு.தங்கவேல் ஆகிய இருவரும் நிகழ்ச்சிக்கு வருகை தந்து சிறப்பித்தனர். ஒடுக்கப்பட்டோர் பேரவையின் பொதுச் செயலாளர் கலசம் புலேவும் இடஒதுக்கீடு வரலாறும் என்னும் தலைப்பில் சிறப்புரை நிகழ்த்தினர். இணைச் செயலாளர் அரங்க பெருமான் நன்றி கூறினார்.

# இரு நூல்கள் தரும் பெரும் விளக்கங்கள்

- குட்டுவன்

2018 நவம்பர் திங்களில் இரண்டு நூல்களை வாங்கிப் படித்தேன். பகுத்தறிவுதான் உலகில் மிகச்சிறந்த ஆயுதம் என்பதை வலியுறுத்தும் நூல்கள். இவை இயற்பியல் வானியல் பேரறிஞரான மறைந்த ஸ்டீபன் ஹாகிங் 'பெரிய கேள்விகளுக்கு சுருக்கமான விடைகள்' (Brief Answers to the Big Questions by Stephen Hawking, 2018) என்ற அருமையான நூலைப் படைத்துள்ளார். இந்நூல் பத்துப் பகுதிகளையும் 221 பக்கங்க ளையும் கொண்டுள்ளது.

இரண்டாவது நூலை இந்துமத வெறியர்களால் சுட்டுக்கொல்லப்பட்ட நரேந்தர தபோல்கர் 'பகுத்தறிவிற் காக' (The Case for Reason by Narendra Dabholkar, 2018) என்ற தலைப்பில் எழுதியுள்ளார். இது நரேந்தர தபோல்கர் மராத்திய மொழியில் எழுதிய நூலாகும். இந்நூலைச் சுமன் ஒக் என்ற ஆய்வாளர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இந்நூல் 29 பகுதிகளையும் 298 பக்கங்களையும் கொண்டுள்ளது. இந்த இருபெரும் பகுத்தறிவாளர்கள் மறைந்துவிட்டாலும் அவர்களின் படைப்புகளால் உலகெங்கும் வாழும் பகுத்தறிவாளர்கள் நெஞ்சில் வாழ்கிறார்கள் என்றால் அது மிகையாகாது.

ஸ்டீபன் ஹாகிங்கை வெறும் அறிவியல் எல்லைக்குள் சுருக்கிவிட முடியாது. வெகு சில அறிவியல் அறிஞர்கள்தான் மக்களுக்குத் தங்களுடைய படைப்புகளை எடுத்துச் செல்ல வேண்டும் என்று பேரார்வம் காட்டினர். அறிவியல் அறிஞர் ஐன்ஸ்டீன் அண்டத்தைப் பற்றி ஒரு புரட்சியான ஆய்வை நடத்தினார். அதுமட்டுமல்ல பொது மக்களின் பிரச்சினைகளை அடிக்கடி பேசினார். உலகை அழிக்கும் போர் ஆயுதங்கள் தேவையில்லை என்று வலியுறுத்தினார். ஸ்டீபன் ஹாகிங்கும் ஐன்ஸ்டின் வழியிலேயே இயற்பியல் வானியலில் பல புதுப்புதுக் கண்டுபிடிப்புகளைக் கண்டார். ஹாகிங்கை வாழும் காலத்தில் நாம் காணும் ஐன்ஸ்டீன் என அறிவியல் அறிஞர்கள் போற்றினார்கள்.

அண்மையில் சில நிமிடங்களே ஓடும் ஒரு செய்திப் படத்தைக் காண வாய்ப்பு கிடைத்தது. 1925ஆம் ஆண்டு இங்கிலாந்தில் ஐன்ஸ்டீனுக்கு ஒரு பாராட்டு விழா நடைபெற்றது. அதில் அறிஞர் பெர்னார்ட்ஷா கலந்து கொண்டு பாராட்டுரையை வழங்கினார். அவ்வுரையில் "எப்போதும் பலவற்றை மறைக்க வேண்டிய நிலை உள்ளது. பெரும் வரலாற்று நாயகர்களாகப் போற்றப்படுபவர்கள் குறிப்பாக நெப்போலியனைப் பற்றிப் பேச வேண்டும் என்றால் சில கருத்துகளைக் கூறியாக வேண்டும். சந்தேகத்திற்கு இடமின்றி நெப்போலியனைப் பற்றிப் பல புகழுரைகள் உள்ளன. நான் ஒரு முக்கியமான கருத்தை ஒருகால் குறிப்பிடாமல் இருக்க வேண்டு மென்றால், அது மிகவும் முதன்மையானதாகும். நெப்போலியன் பிறக்காமலிருந்தால் மானுடத்திற்கு நன்மை கிட்டியிருக்கும். நெப்போலியனும் மற்றவர்களும் பெரும் பேரரசுகளை உருவாக்கியவர்கள். இந்த வரிசையில் இதைத் தாண்டிய பெரிய மனிதர்கள் உள்ளனர். அவர்கள் பேரரசுகளை உருவாக்கியவர்கள் அல்ல. அண்டங் களை உருவாக்கியவர்கள். அவர்கள் இந்த அண்டங்களைக் கண்டுபிடிக்கும் போது அவர்களது கைகளில் எந்த மனிதனுடைய இரத்தக் கறையும் படியவில்லை. தாலமி கண்டறிந்த அண்டம் 1400 ஆண்டுகள் நிலைத்தது. நியுட்டனின் கண்டுபிடிப்பும் 300 ஆண்டுகள் தொடர்ந்தது. ஐன்ஸ்டீன் கண்டுபிடித்த அண்டம் எவ்வளவு காலம் நிலைத்திருக்கும் என்று என்னால் கூற முடியாது" (There is always a great deal to conceal. If you take the typical great man of our historic epoch, and suppose that I had to rise here tonight to propose a toast of Napoleon. Well, undoubtedly I could say many very flattering things about Napoleon. But the one thing which I should not be able to say about him would be perhaps the most important thing. And that was that it would perhaps have been better for the human race if he had never been born. Napoleon, and other great men of his type, they were makers of empire. But there's an order of men who get beyond that. They are not makers of empire but they are makers of universe. And when they have made those universes, their hands are unstained by the blood of any human being on earth. Ptolemy made a universe which lasted 1400 years. Newton also made a universe which has lasted 300 years. Einstein has made a universe and I can't tell you how long that will last) என்று குறிப்பிட்டார்.

பெர்னார்ட்ஷா குறிப்பிட்ட வரிசையில் அறிஞர் ஹாகிங் தனிச்சிறப்போடு வலம் வருகிறார். காரணம் மற்ற வானியல் அறிஞர்களைப் போல இவர் உடல் நலம் பெற்றிருக்கவில்லை. இந்த அறிவியல் மேதை சந்தித்த உடல் ரீதியான இடர்கள் என்ன? அவர் எப்படி அவற்றை எதிர்கொண்டார்? நோயுடன் கூடிய வாழ்க்கை போராட்டங்களுக்கு இடையில் அறிவியல் திறனை எப்படி வளர்த்துக் கொண்டார்? அவரைத் தாக்கிய நோயினுடைய கொடூரத்தின் தன்மைகள் என்ன? பகுத்தறிவு வாதியான ஹாகிங் மலை போன்ற மன உறுதியால் அக்கொடூரத்தை வென்று அவர் தொடர்ந்து படைத்த சாதனைகள்தான் என்ன? இது போன்ற வினாக்களுக்கு ஹாகிங் வாழ்க்கையும் அவரது படைப்புகளும் விடையாக அமைகின்றன. வள்ளுவர் சுட்டிய ஆள்வினையுடைமையை ஹாகிங் வாழ்வில் காண முடிகிறது.

ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர் – குறள் 620

என்ற குறளுக்கு அவர் ஓவியமாகவே வாழ்ந்து மறைந்தார். ஸ்டீபன் ஹாகிங் 1942ஆம் ஆண்டில் சனவரி 8ஆம் நாள் கலிலியோ மறைந்த 300வது ஆண்டு நினைவு நாளில் இங்கிலாந்தில் ஆக்ஸ்போர்ட் நகரில் பிறந்தார். பள்ளிப் படிப்பு முடித்து ஆக்ஸ்போட் கல்லூரியில் 17ஆம் வயதில் இயற்பியல் பட்டப்படிப்பைத் தொடங்கினார். கல்லூரியில் படிக்கும் போது படகு ஓட்டும் விளையாட்டில் ஆர்வம் கொண்டு பல போட்டிகளிலும் கலந்து கொண்டார்.

21ஆவது வயதில் அவரது உருவத் தோற்றத்தில் திடீரென்று மாறுதல்கள் தென்பட்டன. எவ்விதக் காரண மின்றியும் அவர்

அடிக்கடி கீழே விழுகின்ற நிலைக்குத் தள்ளப்பட்டார். மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். அவரது தோள்பட்டை தண்டுவடம் பகுதிகளில் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அந்தச் சோகமான நிகழ்வுகளை ஹாகிங் பின்வருமாறு தனது படைப்பு களில் வர்ணித்துள்ளார். மிகக்கொடுமையான நரம்புத் தளர்ச்சி நோயினால் தாக்கப்பட்டேன். இனி அன்றாட வாழ்வை எல்லோ ரையும் போல் தொடர முடியாது என்பதை அறிந்து அதிர்ச்சிய டைந்தேன். சில ஆண்டுகளில் நான் இறந்து விடலாம் என்று மருத்துவர்கள் கூறினார்கள். வாழ்க்கையின்மீது எனக்குச் சலிப்பு ஏற்பட்டுவிட்டது. மருத்துவமனையில் இருந்து வெளியே வந்த வுடன் நான் தூக்கிலிடப்படுவது போல ஒரு கனவு கண்டேன். பிறரின் வாழ்வைக் காப்பாற்றுவதற்காக நான் என் வாழ்வைத் தியாகம் செய்வதாக மற்றொரு கனவு கண்டேன். இச்சூழ்நிலை யில்தான் எனது ஆய்வினை மேற்கொள்ள முடிவு செய்தேன்.

என் வாழ்க்கைப் போராட்டத்தில் மனைவி குழந்தைகள் மாணவர்கள் பெரும் ஆறுதலாகவும் உதவியாகவும் இருந் தார்கள். உணவு உண்பதிலிருந்து மற்ற இயற்கை கடமை களைச் செய்து கொள்வதற்கு 24 மணி நேரமும் மருத்துவத் துணை எனக்குத் தேவைப்பட்டது. 1985இல் நிமோனியா நோயால் தாக்கப்பட்டு தொண்டைக்குழாய் அறுவை சிகிச்சை செய்து கொண்டேன். இதனால் பேசும் திறனை முற்றும் இழந்தேன். கலிபோர்னியாவைச் சார்ந்த ஒரு நிறுவனம் ஒரு கருவியை எனக்கு வழங்கியது. கணினி வழியாகவே பேச்சை இணைக் கும் ஆற்றல் பெற்ற இக்கருவியையும் கணினியையும் என்னு டைய சக்கர நாற்காலியில் பொருத்திக் கொடுத்தனர்.

வாழ்வில் ஏற்பட்ட சோதனைகளை முறியடித்து உயர் ஆய்வினை மேற்கொண்டு முனைவர் பட்டத்தை முடித்து கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் புகழ்மிக்க அறிவியல் அறிஞர் ஐசக் நியுட்டன் 1663 ஆம் ஆண்டில் அமர்ந்த அதே பேராசிரியர் இருக்கையில் அறிவியல் ஆய்வுப் பணியைத் தொடங்கினார் அறிஞர் ஹாகிங். அறிவியல் மேதைகளான நியூட்டன், ஐன்ஸ்டினின் வரிசையில் இயற்பியல் துறையில் மேதையாக விளங்கிய ஹாகிங் படைத்த காலத்தின் சுருக்கமான வரலாறு (A Brief History of Time) என்ற நூல் விற்பனையில் உலக சாதனை படைத்தது. அறிவியல் பயிற்சி இல்லாதவர்களும் படித்துப் புரிந்து கொள்வதற்கு ஏற்ப எளிமையான ஆங்கிலத்தில் எழுதப்பட்ட இந்நூல் தமிழ் உட்பட உலகின் 65 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டது.

இத்தகைய அறிஞர் மார்ச் 18 2018 அன்று மறைந்தார். மறைந்த பிறகு அவருடைய இறுதிக் கால கருத்துகள் நூலாக வெளிவந்துள்ளது. இந்நூலும் விரைவில் தமிழ் உட்பட உலக மொழிகளில் மொழிப்பெயர்க்கப்படும். இந்த நூலுக்கு முன்னு ரையை எட்டி ரெட்மைன் வழங்கியுள்ளார். இவர் ஹாகிங் உயிரோடு இருக்கும் போது அவரைப் பற்றிய குறும்படத்தை உருவாக்கியவர். அப்போது அறிஞர் ஹாகிங்கிடம் நேரடியாக நெருக்கமாகப் பழகும் வாய்ப்பினைப் பெற்றவர். குறிப்பாக எட்டி பேராசிரியர் அவர்களே பிறந்தநாளைப் பற்றிக் குறிப்பிட்டு எந்த நட்சத்திரத்தில் பிறந்தீர்கள் என்று கேட்டுள்ளார். உடனடியாக ஹாகிங் நான் ஒரு சோதிடன் அல்ல. நான் ஒரு வானியல் அறிஞர். என்னைப் பேராசிரியர் என்று அழைப்பதை நிறுத்துங்கள். ஹாகிங் என்று பெயரிட்டு அழையுங்கள் என்று கூறினாராம். இதைக் கண்டு வியந்த எட்டி ரெட்மைன் தனது முன்னுரையில் மிகவும் வலிமை மிக்க மனிதர். தன்னுடைய உடல் உறுப்புகளின் செயல்பாடுகளை இழந்தும் மற்ற மனிதர் களுக்கு வழிகாட்டியாக வாழ்ந்தவர். நாம் ஒரு நகைச்சுவை யாளரை வியப்பிற்குரிய ஓர் அறிவியல் அறிஞரை உண் மையில் அழகான மன ஆற்றலைப் பெற்றவரை இழந்துள் ளோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்நூலில் ஸ்டீபன் ஹாகிங் குறிப்பிடுவது: அண்டம் வெடிப்பு (Big Bang) உலகிற்குப் பல அறிவியல் உண்மைகளை அளித்தது. மதவாதத்தில் மூழ்கியிருக்கும் பல கோடி மக்கள் விடுதலை பெற-அறிவு பெற பல கேள்விகளுக்கு அறிவியல் சிறந்த பதில்களைக் காலந்தோறும் அளித்துள்ளது. எனக்குக் கடவுளின் மீது வெறுப்பு கிடையாது. எனது படைப்புகள் கடவுள் இருக்கிறாரா? இல்லையா? என்பதற்காக எழுதப்பட்டவையல்ல. நம்மைச் சுற்றியுள்ள அண்டத்தைப் பற்றி பகுத்தறிவோடு நாம் புரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான் கருத்துகளைத் தெரிவித்தேன்.

பூமி தட்டையானது என்ற கருத்தியல் மேலோங்கி யிருந்தது. கிறிஸ்து பிறப்பதற்கு 300 ஆண்டுகளுக்கு முன்பு அரிஸ்டார்கஸ் (Aristarchus) என்ற மெய்யியல் அறிஞர், பூமி சந்திரனை மறைப்பதனால் சந்திர கிரகணம் ஏற்படுகிறது என்றும் உலகம் உருண்டையானது சூரியன் சந்திரனை மறைக்கும் போது சூரிய கிரகணம் ஏற்படுகிறது என்ற கருத்தைத் தெரிவித்தார். இத்தகைய அறிஞர்கள் தான் மெய்ப்பொருளை உலகிற்கு அறிவித்தார்கள் என்றார்.

உலகை யார் உருவாக்கினார்கள? அண்டங்களை யார் இயக்குகிறார்கள்? என்ற கேள்விகளுக்கு எல்லாம் அறிவியல் பதிலளித்துள்ளது. இவைகள் எல்லாம் கடவுள் சொல்லி நடப்பது இல்லை என்ற உண்மையும் வெளி வந்தது. இது போன்ற எண்ணற்ற அறிவியல் சார்ந்த பகுத்தறிவுக் கருத்துகளை மிக எளிய முறையில் பதித்துள்ளார் ஹாகிங். இவர் இந்த நூலில் மற்ற கோள்களுக்கு மனிதன் செல்ல முடியுமா? உயிரினங்கள் வாழ்கின்ற கோள்களைக் கண்டுபிடிக்க முடியுமா? என்பன போன்ற கேள்விகளை எழுப்பி அதற்கு முயற்சி செய்தால் மனிதன் எதையும் உருவாக்கலாம் என்பதை நமக்கு அறிவியல் வரலாறு சுட்டுகிறது என்று கூறியுள்ளார். மக்கள் தொகை தற்போது வளர் கின்ற விகிதத்தில் வளர்ந்தால் 27ஆம் நூற்றாண்டில் மனிதனுக்கு இப்பூமியில் நிற்பதற்குத்தான் இடம் இருக்கும் என்றும் கூறியுள்ளார்.

உலகம் வெப்பமயமாதலால் அழியும் தாவரங்கள் உயிரினங்கள் ஆகியவற்றால் பூமி பெரும் பாதிப்புக்கு உள்ளாகும் என்றும் குறிப்பிடுகிறார். நாம் தற்காலத்தில் அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவதை நிறுத்த வேண்டும். அணு உலைகளால் ஏற்படும் தீமைகளையும் விளக்கியுள்ளார். ஒரு வேளை அணு ஆயுதப் போர் நடைபெற்றால் மக்கள் தொகை உலகில் குறையும் வாய்ப்பும் உள்ளது என்றும் குறிப்பிட் டுள்ளார். இவ்வாறு உலகம் தொடங்கி அண்டங்கள் வரை

உள்ள அனைத்துப் பிரச்சினைகளுக்கும் அறிவியல் ஆய்வு மனப்பான்மையில் கருத்துகளை வழங்கியுள்ளார். பெரு வெடிப் பிற்குப் பிறகுதான் நேரமே தொடங்கியது. அப்படி என்றால் எந்த நேரத்தில் கடவுள் தோன்றியிருப்பார் என்று நகைச்சுவையோடு குறிப்பிட்டுள்ளார். இந்நூலை உரிய அனுமதியோடு நல்ல இயற்பியல் வானியல் துறையில் நன்கு பயிற்சி பெற்ற மொழி பெயர்ப்பாளர்கள் தமிழ் உலகிற்கு வழங்க வேண்டும். இது அறிவியலுக்கு ஆற்றும் பணி மட்டுமன்று. அறிவியல் சார்ந்த பகுத்தறிவு வளர்ச்சிக்கும் வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.

இரண்டாவதாக 'பகுத்தறிவிற்காக' என்னும் நூலில் மூடநம்பிக்கைகளைத் தகர்ப்பதற்கான களத்தில் ஆற்றிய பணிகள் பற்றி, நரேந்தர தபோல்கரால் விளக்கப்பட்டுள்ளது. நரேந்திர தபோல்கர் மருத்துவம் பயின்று அத்தொழிலை வணிகமாக மாற்றாமல், தனது வாழ்நாளில் சமூக சேவைக்குப் பெரும்பங்கு அளித்தவர். தபோல்கர் மகாராஷ்டிர அந்தாஸ்ரத்த நிர்மூலன் சமிதி என்ற மூடநம்பிக்கைக்கு எதிரான ஒரு அமைப்பை உருவாக்கி, அவர் கொல்லப்படும் வரை அதன் தலைவராகச் செயல்பட்டார்.

இந்நூலில் அறிவியல், மருத்துவ இயல் சார்ந்த பல பகுத்தறிவுக் கருத்துகள் இடம் பெற்றுள்ளன. குறிப்பாக மூடநம்பிக்கைகள் மராட்டிய மாநிலத்தின் ஊர்ப் பகுதிகளில் பின்பற்றப்பட்டபோது அங்குச் சென்று பகுத்தறிவுக் கருத்துகளை, அறிவியல் கருத்துகளைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். இதன் காரணமாக மராட்டிய மாநிலத்தில் இவரது அமைப்பு நூற்றுக்கு மேற்பட்ட இடங்களில் நிறுவப்பட்டது. இவரது அஞ்சாமையும் கடவுள் மறுப்புக் கொள்கையும் பகுத்தறிவுக் கருத்துகளும் பல மதவாதக் குழுக்களையும் போலிச் சாமியார்களையும் நடுங்கச் செய்தது. இவர் ஒரு தனி மனிதர் அல்ல. ஓர் அமைப்பு என்பதை இந்நூல் பல இடங்களில் சுட்டுகிறது.

இந்நூலில் சாமியார்கள், மந்திரவாதிகள், தந்திரங்களைச் செய்பவர்கள்; வசிய முறை ஆகியவற்றில் மோசடிகள் செய்பவர் களுக்கு எதிராகத் தபோல்கர் கண்ட களங்கள் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன. ஆப்ரகாம் கோவூர், டாக்டர் அம்பேத்கர் ஆகிய அறிஞர்களைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். மராத்திய மாநிலத்திற்கு அப்பால் செயல்படும் பகுத்தறிவு இயக்கங்களைப் பற்றி சில குறிப்புகள் இருப்பினும் தந்தை பெரியாரின் பணிகள் பற்றி அவர் அறிந்திருக்கவில்லை என்பது அவரது உரைகளில் தெளிவாகத் தென்படுகிறது. ஒரு உரையில் மூடநம்பிக்கை உண்மையில் நம்பிக்கை என்னும் வணிகத்தில் நடத்தப்படும் கருப்புச்சந்தை (Superstition is really black marketing in the business of faith) என்று குறிப்பிட்டுள்ளார். மூடநம்பிக்கை என்பது வீட்டிலுள்ள கழிவு அல்லது குப்பை போன்றது அதை அகற்ற வேண்டும் (Superstition is like the trash and litter in a home) என்பதை எனது வாழ்நாள் இலட்சியம் என்றும் குறிப்பிடுகிறார்.

1999இல் பாஜக ஆட்சியின் போது சோதிடத்தைப் பல்கலைக்கழகங்களில் ஒரு பாடத்திட்டமாக அறிமுகப்படுத்த வேண்டும் என்ற ஓர் ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதற்கு எதிராக எல்லாப் பல்கலைக் கழகத் துணை வேந்தர்களுக்கும் சோதிடம் எப்படிப் போலியானது என்பதை விளக்கி ஒரு நீண்ட கடிதம் எழுதியுள்ளார். 1995ஆம் ஆண்டு செப்டம்பர் 21ஆம் நாள் பிள்ளையார் பால் குடித்தார் என்ற செய்தியை இந்துமத வெறியர்கள் பரப்பினார்கள். குறிப்பாக விசுவ இந்து பரிஷத், பஜ்ரங்தள், ஆர்.எஸ்.எஸ். போன்ற தீய சக்திகள் கோயில்களுக்குச் சென்று பிள்ளையார் சிலைகளுக்குப் பாலை ஊற்றிய போது, தபோல்கரே களம் இறங்கி, அது எவ்வளவு பொய்யானது என்பதை நேரடியாகச் சோதனை செய்து மக்களுக்கு விளக்கினார். இக்காலக் கட்டத்திலிருந்து அவரை எப்படியாவது அழித்துவிட வேண்டும் என்று இந்தத் தீய சக்திகள் முயன்றன என்பதைப் பற்றி அவர் கவலைப்படவே இல்லை.

2010இல் மகாராஷ்டிர அரசு மராட்டிய மாநிலத்தின் சிறந்த படைப்புகளுக்கான பரிசினை தபோல்கருக்கு வழங்க முற்பட்டது. அப்போதைய முதல்வர் விலாஸ்ராவ் தேஷ்முக் விருதை ஏற்கும்படி கடிதம் எழுதினார். இதை வாங்க மறுத்த தபோல்கர், மராட்டிய மாநிலத்தில் நிலவும் கொடுமையான மத மூடநம்பிக்கைகளுக்கு எதிராக ஒரு சட்டத்தை இயற்ற வேண்டும்; அதைத்தான் நான் விரும்புகிறேன் என்று பதிலளித்தார்.

இவர் கடவுளை கல் என்றும், கற்பனை என்றும் அடிக்கடி தனது உரையில் குறிப்பிட்டு வந்தார். இதனால் இந்து மதத் தீவிரவாத அமைப்புகள் இவரைத் தாக்கவும் முற்பட்டன. 2008இல் புனேவில் நடந்த பகுத்தறிவாளர் மாநாட்டில் இவர் மீது தொடர்ந்து செருப்புகள் வீசப்பட்டன. அதைப் பொருட்படுத்தாமல் தனது கருத்தைப் பதிவு செய்தார். அப்போது ஊடகங்கள் செருப்பு வீசுவதை முதன்மைப்படுத்திச் செய்தி வெளியிட்டபோது கடுமையான முறையில் ஊடகங்கள் மீது விமர்சனம் வைத்தார். செருப்பு வீசுவது ஒரு சிறு சம்பவம். ஆனால் பகுத்தறிவுத் தொடர்பான மாநாட்டு உரைகளை உரிய முறையில் வெளியிட வில்லை என்பதையும் குறிப்பிட்டுக் கண்டனம் தெரிவித்தார்.

மிகவும் மென்மையான மனிதர். வலிமையான பகுத்தறிவுவாதி என்று அவரது நண்பர்கள் போற்றினர். 2013ஆம் ஆண்டு ஆகஸ்ட் 20ஆம் நாள், காலை நடைபயிற்சி மேற்கொள்ளும் போது மதவெறியர் இருவரால் மிக அருகில் துப்பாக்கியால் தபோல்கர் சுடப்பட்டுக் கொடுமையான முறையில் கொல்லப்பட்டார். இவரது விருப்பம் தனது உடலை மருத்துவக் கல்லூரிக்கு அளிக்க வேண்டும் என்பதாகும். ஆனால் அவர் கொலை செய்யப்பட்டதால் காவல் துறை விதிகளின்படி உடற்கூறு ஆய்வுக்காக மருத்துவ மனைக்குக் கொடையாக இவரது உடல் அளிக்கப்படவில்லை. எவ்வித மதச்சடங்குகள் இன்றி பகுத்தறிவு நெறிக்கேற்ப இவரது மகள்தான் சிதைக்கு நெருப்பூட்டினார்.

இவ்விரு நூல்களைப் படித்தபோது தமிழ்நாட்டில் தந்தை பெரியார் தொலை நோக்கோடு ஆற்றிய மானுடப் பணிகள், அமைத்த பகுத்தறிவுக் களங்களை எண்ணி அவைகள் இன்றும் உயிர்ப்போடு இருப்பது பெருமிதம் தருகிறது.

# சிந்தனையாளன் பொங்கல் மலர் - 2019
# வெளியீட்டு விழா
# மத ஆதிக்க எதிர்ப்பு மாநாடு-தமிழ்வழிக்கல்வி மாநாடு

நாள் : **06-01-2019, ஞாயிறு**

இடம் : **சந்திரசேகர் திருமண மண்டபம்** மேற்கு மாம்பலம், சென்னை-33.

முதல் அமர்வு : முற்பகல் 10.00 மணிமுதல் 11.30 மணிவரை

## சிந்தனையாளன் பொங்கல் மலர் – 2019 வெளியீட்டு விழா

தலைமை :

**தி. துரை சித்தார்த்தன்,** துணைப் பொதுச் செயலாளர், மா.பெ.பொ.க.

வரவேற்புரை :

தாம்பரம் **மா. சுப்பிரமணி,** காஞ்சி மாவட்டத் துணைச் செயலாளர், மா.பெ.பொ.க.

மலரை வெளியிட்டுச் சிறப்புரை :

புலவர் **ந. செந்தலை கவுதமன்,** பாவேந்தர் பேரவை, சூலூர்

முதல்படி பெறுபவர் : மாம்பலம் **ஆ. சந்திரசேகர்**

***மலர் பெறுவோர் :***

வரகூர் **மா. நாராயணசாமி**
பெரம்பலூர் மாவட்டச் செயலாளர்

**ஆ.கு. ஆறுமுகம்**
விழுப்புரம் மாவட்டச் செயலாளர்

**இரா. கலியபெருமாள்**
திருச்சி மாவட்டச் செயலாளர்

**செ. ஆனையப்பன்**
சேலம் மாவட்டச் செயலாளர்

**முத்து அன்பழகன்**
நாகை மாவட்டச் செயலாளர்

**பா.வை. அருண்மொழி**
சென்னை மாவட்டத் துணைச் செயலாளர்

**மு. செயப்பிரகாசு**
காஞ்சி நகரச் செயலாளர்

**கு. தொல்காப்பியன்**
மா.பெ.பொ.க. ஒசூர்

***கருத்துரை :***

**சி. நடராசன்**
காஞ்சி மாவட்டச் செயலாளர்

**பொ. சுப்பிரமணியன்**
திருவண்ணாமலை மாவட்டச் செயலாளர்

**இரா. கலியமூர்த்தி**
அரியலூர் மாவட்டச் செயலாளர்

**நா. மதனகவி**
வாணியம்பாடி நகரச் செயலாளர்

இரண்டாம் அமர்வு : முற்பகல் 11.30 மணிமுதல் 1.30 மணிவரை

## மத ஆதிக்க எதிர்ப்பு மாநாடு

தலைமை : **க. முகிலன்,** தலைமைக்குழு உறுப்பினர், மா.பெ.பொ.க.

வரவேற்புரை : **மோ.சி. சங்கர்,** வேலூர் மாவட்டச் செயலாளர்

மாநாட்டுத் தொடக்க உரை :

தோழர் விடுதலை **க. இராசேந்திரன்,** பொதுச் செயலாளர், திராவிடர் விடுதலைக் கழகம்

**கருத்துரை :**

கவிஞர் **தமிழேந்தி**
மாநிலச் செயலாளர்
புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்றம்

**துரை. கலையரசு**
செயலாளர், பெரியார் ஈ.வெ.ரா.-
நாகம்மை அறக்கட்டளை

**இரா. பகுத்தறிவாளன்**
மா.பெ.பொ.க. மாணவர்-இளைஞரணி

**ந. கருணாகரன்**
புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்றம், திருச்சி

**இரா. திருநாவுக்கரசு**
புதுவை மாநிலச் செயலாளர், மா.பெ.பொ.க.

**சா. குப்பன்**
தொழிலாளரணிச் செயலாளர், மா.பெ.பொ.க.

**மு. சாமிநாதன்**
வேலூர் மாவட்டச் செயலாளர், பு.க.க.இ.ம.

**குறளமிழ்தன்**
புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்றம், காஞ்சி

**தி.ச. குணசேகரன்**
பு.க.க.இ.ம. திருக்கழுக்குன்றம்

**சிறப்புரை :** முனைவர் **ந.மணிமேகலை**
தலைவர், மகளிர் இயல்துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி

**நன்றியுரை : மீ. தில்லிபாபு,** வேலூர் நகரச் செயலாளர், மா.பெ.பொ.க.
(நண்பகல் உணவு : பிற்பகல் 1.30 முதல் 2.30)

மூன்றாம் அமர்வு : பிற்பகல் 3.00 மணிமுதல் இரவு 7.00 மணிவரை

## தமிழ்வழிக்கல்வி மாநாடு

தலைமை : **சி. பெரியசாமி,** துணைப் பொதுச் செயலாளர், மா.பெ.பொ.க.

வரவேற்புரை : **கோ. கோதண்டராமன்,** மா.பெ.பொ.க. வேளாண் அணிச் செயலாளர்

மாநாட்டுத் தொடக்க உரை :
பேராசிரியர் **சோம, இராசேந்திரன்,** நேரு நினைவுக் கல்லூரி, புத்தனாம்பட்டி, திருச்சி

**கருத்துரை :**

**இரா. பச்சமலை**
மா.பெ.பொ.க. சென்னை

**மு. சிவலிங்கம்**
கணித் தமிழ்ச்சங்கம், அய்தராபாத்

**கோ. அறிவழகன்,** மா.பெ.பொ.க. நெய்வேலி

**பா.மோகன்**
கடலூர் மாவட்டச் செயலாளர்

முனைவர் **சி.ரா. இளங்கோவன்** சிதம்பரம்

**கோவி இராமலிங்கம்**
மகளிரணிச் செயலாளர், மா.பெ.பொ.க.

**சிறப்புரை :**

தோழர் **இனாமுல் அசன்,** சமூக நல்லிணக்க ஒருங்கிணைப்பாளர், புதுதில்லி

தோழர் **ஆழி. செந்தில்நாதன்,** ஒருங்கிணைப்பாளர், தன்னாட்சித் தமிழகம்

தோழர் **பொழிலன்,** ஒருங்கிணைப்பாளர், தமிழக மக்கள் முன்னணி

முனைவர் **சந்தீப் பாண்டே,** மேனாள் பேராசிரியர், ஐ.ஐ.டி. வாரணாசி

(**Dr. SANDEEP PANDEY,** Ex. Prof. I.I.T.Varanasi)

**மாநாட்டு நிறைவுரை :** தோழர் **வே. ஆனைமுத்து,** பொதுச் செயலாளர், மா.பெ.பொ.க.

**நன்றியுரை : ப. வடிவேலு,** மா.பெ.பொ.க.

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி**

# ''சிந்தனையாளன்'' - 40 ஆண்டுகளில், நம் அமைப்புகளின் செயல்பாடுகளைப் பற்றி பொது மக்களிடையே பரப்பி வருகிறது! இனியும் நாம் வளர, ''சிந்தனையாளன்'' வேண்டும்!

தந்தை பெரியார் அவர்கள், திருச்சியில் 17.8.1973 இல் என் ''பாவேந்தர் அச்சகத்தினைத்'' திறந்து வைத்தார்; பல அறிவுரைகளையும் வழங்கினார். அவர் 24.12.1973இல் மறைந்தார்.

நான், என் சொந்தப் பொறுப்பில், ''சிந்தனையாளன்'' கிழமை இதழை, 17.8.1974இல் தொடங்கினேன். என் மக்கள் துணைபுரிந்தனர்.

நானும், சில தோழர்களும் 8.8.1976இல், சீர்காழியில் கூடி, ''பெரியார் சம உரிமைக் கழகம்'' என்கிற தனி அமைப்பை நிறுவினோம். அதுவே, ''மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி'' என்று பெயர் மாற்றம் பெற்றது.

அதன் உடனடி வேலைத் திட்டமாகப் பிற்படுத்தப்பட்டோருக்கு இந்திய மத்திய அரசு வேலையிலும், கல்வியிலும் இடஒதுக்கீடு தரப்பட அரசமைப்புச் சட்டத்தில் உள்ள உரிமையை வென்றெடுக்க, வடபுலத்துக்குப் பயணம் சென்றோம்.

பல மாநிலங்களின் பிற்படுத்தப்பட்ட-தாழ்த்தப்பட்ட தலைவர்களை சென்னைக்கு அழைத்து, 1978 சூனில் முதல் முதலாவது இடஒதுக்கீடு மாநாட்டை நடத்தினோம்.

அந்த (24.6.78) மாநாட்டுத் தீர்மானத்தின்படி, 19.8.78இல், ''அனைத்திந்தியப் பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர், மதச் சிறுபான்மையினர் பேரவை'' என்ற இரண்டாவது அமைப்பை நிறுவினோம்.

**நம் கட்சியின் - அப்பேரவையின் செயல்பாடுகளைத் தமிழ் மக்களிடையே பரப்பி விழிப்புணர்வை உண்டாக்கியது, ''சிந்தனையாளன்''.**

1988 மார்ச்சில், அரியலூரில் கூடிப் பேசி, நம் கட்சி மார்க்சியத்தை முதன்மைப்படுத்தியது; ''இந்தியாவை உண்மையான-சமதர்மக் கூட்டாட்சியாக'' மாற்றியமைக்க, பல முயற்சிகளை மேற்கொண்டது.

நானும், நம் தோழர்கள் சிலரும் 1986 நவம்பரில், கல்கத்தாவிலும், 1987இல் பஞ்சாபிலும், 1988இல் அசாமிலும்-இந்தியக் கூட்டாட்சி பற்றிய கருத்தரங்குகளில் பங்குபெற்றோம். ஓரளவு வெளி மாநிலங்களில் பரப்புரை செய்ய முடிவு செய்தோம்.

1991 அக்டோபரில், புதுதில்லியில் நம் கட்சியும் பேரவையும் இணைந்து 18.10.1991இல் மண்டல் பரிந்துரை செயல்பாடு மாநாடு, 19.10.1991இல் ''பெரியார் பிறந்த நாள் பன்மொழி மலர் வெளியீடு'', 20.10.1991 இல் கூட்டாட்சி மாநாடு ஆகிய மூன்று பெரும் நிகழ்ச்சிகளை நடத்தினோம்.

தில்லியில், 21.10.1991இல், பஞ்சாப் உயர்நீதிபதி அஜித் சிங் பெயன்ஸ் தலைமையில் கூடி, ''உண்மையான இந்தியக் கூட்டாட்சிக்கான விவாதக் குழு'' என்கிற அமைப்பை நிறுவினோம்.

**இவ்வளவு நிகழ்ச்சிகளைப் பற்றியும் தமிழ் நாட்டிலுள்ள-அயல்நாடுகளிலுள்ள தமிழர்களிடையே பரப்பிடத் துணை செய்த ஒரே ஊடகம் ''சிந்தனையாளன்'' ஆகும்.**

1993இல் அம்பத்தூரில், ''பெரியார் ஈ.வெ. இராமசாமி - நாகம்மை கல்வி, ஆராய்ச்சி அறக்கட்டளை'' என்ற தொண்டு நிறுவனத்தை அமைத்தோம்.

இத்தனை அமைப்புகளும் செயல்படுவது இந்தியாவில், 90 விழுக்காடு மக்களாக உள்ள கீழ்ச்சாதி - உழைப்பாளி மக்களின் முழு விடுதலைக்காகவே.

இவற்றின் வளர்ச்சிக்கும் ''சிந்தனையாளன்'' தமிழ் திங்கள் ஏடும், "PERIYAR ERA" என்ற ஆங்கில ஏடும், நம் நூல் வெளியீடுகளும் பயன்பட்டன.

**''சிந்தனையாளன்'' தொடர்ந்து வெளியிடப்பட-கடந்த 20 ஆண்டு மூச்சுக்காற்றாகவும், நீராகவும், எருவாகவும் பயன்தருவது ''சிந்தனையாளன்'' பொங்கல் மலரே.**

**''சிந்தனையாளன் பொங்கல் மலர்'' காப்பாளர்களாகவும், புரவலர்களாகவும் தொடர்ந்து விளங்குகிறவர்கள் - நம் செயல்பாடுகளினால் ஈர்க்கப்பட்ட வணிகப் பெருமக்களும், தொழிலதிபர்களும், பேராசிரியர்களும், ஆசிரியர்களும், மருத்துவர்களும், வழக்குரைஞர்களுமே, தமிழ் மக்களுமே ஆவர்.**

**இப்பெருமக்களை நம் தோழர்கள் இடைவிடாது அணுகி, இன்னும் 30 நாள்களுக்குள் விளம்பரங்களும், நன்கொடைகளும் பெற்றுத்தந்து உதவ வேண்டுகிறேன்.**

**அன்புகூர்ந்து, விளம்பரச் செய்திகள், 25.12.2018க்குள், அம்பத்தூர் ''சிந்தனையாளன்'' அலுவலகத்தில் கிடைக்கும்படி நேரிலோ, தூது அஞ்சல் வழியாகவோ விடுத்து உதவ அன்புடன் வேண்டுகிறேன்.**

அனைவர்க்கும் நன்றி!

தோழமையுள்ள,
**வே. ஆனைமுத்து**
ஆசிரியர்
''சிந்தனையாளன்''

# மா.பெ.பொ.க. பொதுக்குழுக் கூட்டத் தீர்மானங்கள்

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் பொதுக்குழுக் கூட்டம், 11-11-2018 ஞாயிறு முற்பகல் 11 மணிக்கு, அம்பத்தூரில் "சிந்தனையாளன்" அலுவலகத்தில் நடைபெற்றது. பொதுச் செயலாளர் வே.ஆனைமுத்து தலைமை தாங்கினார். வருகை தந்த தோழர்களில் பலர் உரையாற்றிய பின்னர், கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒருமுகமாக நிறை வேற்றப்பட்டன.

**தீர்மானங்கள்**

1. "2019 சிந்தனையாளன் பொங்கல் மலர்" வெளியீட்டுக்கான விளம்பர அறிக்கை, பற்றுச்சீட்டு ஆகியவை 16.11.18 அன்று மாவட்டச் செயலாளர்கள் நகரச் செயலாளர் மற்றும் கடந்த ஆண்டு விளம்பரம்-நன்கொடை பெற்றுத்தந்த தோழர்கள் ஆகியோர்க்கு தூது அஞ்சல், விரைவு அஞ்சல் வழியாக அனுப்பி வைக்கப்படும். பொங்கல் மலருக்கு விளம்பரம், நன்கொடை வழியாக நல்ல தொகை திரட்டவும், மாநாடு சிறப்புற நடைபெறவும் கட்சிப் பொறுப்பாளர்களும், தோழர்களும் முழுமூச்சுடன் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது.
2. தமிழ் காப்பு-தமிழ் உரிமைக் காப்பு-ஈழத் தமிழர் விடுதலை இவற்றில் பெரும் ஈடுபாடு கொண்டவரும், இவை தொடர்பான களப்போராட்டங்களில் முன் வரிசையில் நின்று அளப்பரிய உழைப்பை நல்கியவருமான புலவர் கி.த. பச்சையப்பன் தம் 85ஆம் அகவையில் 20.9.18 அன்று மறைவுற்றார். அன்னாரை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கும், தமிழ் நெஞ்சங்களுக்கும் இப்பொதுக் குழு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.
3. கட்சியின் தூண்களில் ஒருவராக விளங்கிய தோழர் து. தில்லைவனம் அவர்களின் துணைவியாரும், தோழர் தி. துரைசித்தார்த்தனின் தாயாருமாகிய தில்லை நாயகி அவர்கள், 5.10.2018 அன்று மறைவுற்றார். அவர் இழப்பால் துயருறும் அவர்தம் மகள்கள், மகன் மற்றும் குடும்பத்தினர்க்கு மா.பெ.பொ.க. பொதுக்குழு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.
4. சென்னையில், 6.1.2019 ஞாயிறு முற்பகல் சிந்தனையாளன் 2019 பொங்கல் மலர் வெளியீட்டு விழாவும் மத ஆதிக்க எதிர்ப்பு மாநாடும் பகல் உணவுக்குப் பின் பிற்பகல் 2.30 மணிக்குத் தமிழ்வழிக்கல்வி மாநாடும் ஆகிய நிகழ்ச்சிகளை நடத்துவது என்று ஒருமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.
5. மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக் காக, "சிந்தனையாளன்" தமிழ் மாத இதழை வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும், ஆசியராகவும் இருந்து செயல்பட, "சிந்தனையாளன்" நிறுவனர் வே.ஆனைமுத்து ஒப்புதல் அளிக்க வேண்டுமாய், இப்பொதுக்குழு வேண்டிக் கொள்கிறது.

**11-11-2018** **வே. ஆனைமுத்து**
பொதுச் செயலாளர்

# தேச பக்தி

**- பாவலர் வையவன்**

எல்லாரையும் ஏமாற்று

ஏழைகளின்
வயிற்றிலடி

மாதச் சம்பளக்காரனுக்கு
மரணவரி கொடு

உழவர்களின்
நிலத்தைப் பிடுங்கு

திருடிப்போக வசதியாய்
சாலை அமை

போராடுவோரைச்
சிறையிலிடு

உரக்கப் பேசுவோரின்
நாக்கை அறு

அறிவிக்கப்படாத
அடக்குமுறை செய்

பாலியல் கொடுமைகளா...
பரவாயில்லை நடக்கட்டும்

குழந்தைகள் கொலையா...
அதனாலென்ன
அவர்கள் வரி
செலுத்துவதில்லை
வாக்கும் அளிப்பதில்லை

எங்கெங்கும் கொடுமைகளா...
அதை சாலை நடுவே
கட்டியுள்ள
கோவில்கள்
பார்த்துக்கொள்ளும்

பொருளாதார வளர்ச்சி
நாட்டு வருமானம்
தனிநபர் வருமானம்
பண மதிப்பு

எதைப் பற்றியும்
கவலைப் படாதே

இந்த உலகம்
எக்கேடு கெட்டாலும்
உனக்கென்ன...
மூக்கில் கைவைத்துப் பார்
சுவாசம் ஓடுகிறதா
சந்தோசப் பட்டுக்கொள்!

யாரோ செத்தால் உனக்கென்ன
கார்ப்பரேட்கள்தான்
நாட்டின் உயிராதாரம்

காலையில் வெளியில்போய்
இரவு வீடு வந்துவிட்டாயா
நிம்மதிப் பெருமூச்சிடு

அடுத்தவேளை
கஞ்சியைப் பற்றியெல்லாம்
சதா நினைத்துக்கொண்டிருக்காதே

இந்தியாவில் பிறந்ததைவிட
வேறென்ன பெருமைவேண்டும்
உனக்கு?

நன்கு கவனத்தில் வை
எந்தச் சூழ்நிலையிலும்
உன் உடலிலும் உயிரிலும்
ரத்தத்திலும் ஓடவேண்டிய
'ஒரே உணர்வு'

தேச பக்தி!
தேச பக்தி!!

# பறிக்கப்படும் தொழிலாளர் உரிமைகள்

- க. முகிலன்

ஏரிசக்தியால் இயக்கப்படும் இயந்திரங்கள் மூலம் தொழிலாளர்களின் உழைப்பைக் கொண்டு பொருள்களை உற்பத்தி செய்வது என்பது 1760களில் அய்ரோப்பாவில் தொடங்கியது. இதுவே முதலாளிய உற்பத்தி முறை எனப்படுகிறது. தொழில் முதலாளியத்தின் தோற்றம் என்பதும் இதுவே ஆகும்.

தொழிற்சாலைகளில் உடல்நலத்துக்குக் கேடு தரும் கொடுமையான பணிச்சூழலில் குறைந்த கூலிக்கு 14 முதல் 18 மணி நேரம் உழைக்குமாறு தொழிலாளர்கள் கட்டாயப்படுத்தப்பட்டனர். வேலை நேரத்தைப் பத்து மணி நேரமாகக் குறைக்க வேண்டும் என்று தொழிலாளர்கள் போராடினர். அமெரிக்காவில் பிலடெல்பியாவில் 1806இல் உலகின் முதலாவது தொழிற்சங்கம் அமைக்கப்பட்டது. உலகம் முழுவதும் உருவாக்கப்பட்ட தொழிற்சங்கங்களை ஒருங்கிணைக்கும் நோக்குடன் 1864 செப்டம்பர் 28 அன்று இலண்டனில் "சர்வதேசத் தொழிலாளர் சங்கம்" (International Working Men's Association) என்பது தொடங்கப்பட்டது. இது 'முதல் அகிலம்' என்று அழைக்கப்பட்டது. இதில் காரல்மார்க்சு முதன்மையான பங்களிப்புச் செய்தார்.

அதன்பின், வேலை நேரத்தை 8 மணிநேரமாகக் குறைக்கக் கோரி பல நாடுகளிலும் தொழிலாளர்கள் சங்கம் அமைத்துப் போராடி வந்தனர். இக்கோரிக்கையை முன்னிறுத்தி 1886 மே முதல் நாள் சிகாகோ நகரில் தொழிலாளர்கள் போர்க் குணத்துடன் நடத்திய வேலை நிறுத்தப் போராட்டத்தைக் காவல்துறை கொடுமையாகத் தாக்கியதில் தொழிலாளர்கள் சிந்திய குருதியே 1890 முதல் 'மே நாளாகத்'-தொழிலாளர்களின் உரிமை நாளாக உலகம் முழுவதும் கடைபிடிக்கப்படுவதற்கு மூலகாரணமாயிற்று.

1917இல் சோவியத் நாட்டில் சோசலிசப் புரட்சி வெற்றி பெற்ற பின் அங்கு தொழிலாளர்களின் உரிமைகளும் வாழ்க்கைத்தரமும் வியத்தகு முறையில் உயர்ந்தன. இது முதலாளிய நாடுகளில் தொழிலாளர்களின் போராட்டங்களுக்கு ஓர் உந்து விசையாக விளங்கியது. முதலாளிய நாடுகளின் ஆட்சியாளர்கள் தங்கள் நாடுகளிலும் சோசலிசப் புரட்சி வெடிக்குமோ என்ற அச்சத்தால் தொழிலாளர்களின் பல கோரிக்கைகளை ஏற்க முன் வந்தனர். குறிப்பாக இரண்டாம் உலகப் போருக்குப் பின் தொழிலாளர்களுக்குப் பல பாதுகாப்புகளும், நலத் திட்டங்களும் உறுதி செய்யப்பட்டன.

1990இல் சோவியத் நாட்டிலும் கிழக்கு அய்ரோப்பிய நாடுகளிலும் சோசலிச ஆட்சி முறை வீழ்ந்தது. முதலாளியம், 'தனக்கு மாற்றே இல்லை' என்று மார்தட்டிக் கொண்டு, தன் ஏகாதிபத்தியப் பிடியை மேலும் இறுக்கியது.

1991 முதல் இந்தியாவில் தாராள மயம், தனியார் மயம், உலக மயம் என்கிற கொள்கையை நடுவண் அரசும், மாநில அரசுகளும் முழு வீச்சுடன் செயல் படுத்தத் தொடங்கின. அதனால் பன்னாட்டு முதலாளிய நிறுவனங்களும் அவற்றின் மூலதனமும் தங்குதடையின்றி இந்தியாவுக்குள் நுழைந்தன.

"இந்தியாவில் தொழிலாளர் சட்டங்கள் உலகமயச் சூழலின் உயர்தொழில் நுட்பத்தை அடிப்படையாகக்



2012-இல் மனேசரில் மாருதி சுசுகி தொழிலாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டம்

கொண்ட தொழில் வளர்ச்சிக்குத் தடையாக உள்ளன. இவற்றை மாற்ற வேண்டும். அப்போதுதான் மூலதனம் அதிக அளவில் இந்தியாவுக்குக் கிடைக்கும். உலகத் தரத்திலான பொருள்களை உற்பத்தி செய்ய முடியும். அதன்மூலம் ஏற்றுமதி அதிகரிக்கும். புதிய வேலை வாய்ப்புகள் உருவாகும்'' என்று, பெரு முதலாளிய நிறுவனங்கள் தொடர்ந்து அரசை வலியுறுத்தி வருகின்றன. பெரு முதலாளிகளின் நோக்கம் தங்கள் தேவைக்கு ஏற்ப வேலைகளில் ஆட்களைச் சேர்க்கவும், நீக்கவும் (Hire and Fire) தங்குதடையற்ற உரிமை வேண்டும்; தாங்கள் தருகின்ற கூலியை வாய்ப் பொத்தி வாங்கிக் கொள்ளும் ஆட்கள் தேவை என்பதே ஆகும். இதைச் செயல்படுத்துவதற்காகத் தொழிற்சாலைகளில் ஒப்பந்தத் தொழிலாளர் எண்ணிக்கை அதிகரிக்கப்படுகிறது. நிரந்தரத் தொழிலாளர்கள் தங்களுக்கான-சுதந்தரமான தொழிற்சங்கம் அமைப்பதை ஆட்சியாளர்களின்-காவல் துறையின் துணையுடன் முதலாளிய நிறுவனங்கள் ஒடுக்கி வருகின்றன.



யமகா தொழிலாளர்கள் தம் குடும்பத்தினருடன் நடத்திய மனிதச் சங்கிலிப் போராட்டம்

**மாருதி சுகி தொழிலாளர் போராட்டம்**

தில்லியை அடுத்துள்ள அரியானாவில் ஒக்லா - பரிதாபாத் - குர்கான் - மனேசர் ஆகிய பகுதிகளில் பன்னாட்டு மற்றும் உள்நாட்டுப் பெரு முதலாளிய நிறுவனங்களின் மகிழுந்து, சரக்குந்து, இருசக்கர வாகனங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் உள்ளன. இவற்றுள் ஒன்று மாருதி சுசுகி நிறுவனம். தொடக்கத்தில் இந்திய நிர்வாகத்தின் கீழ் இருந்த இந்நிறுவனம் 1990 -2000 காலத்தில் சப்பான் நிர்வாகத்தின்கீழ் சென்று விட்டது.

மாருதி சுகி தொழிற்சாலையில் 50 நொடிக்கு ஒரு மகிழுந்து தயாராகிறது. தானியங்கி வாகனத் தயாரிப் பில் இந்தியச் சந்தையில் 50 விழுக்காட்டிற்குமேல் மாருதி சுசுகியிடம் இருக்கிறது. இந்தியாவின் உற்பத்தித் துறையில் 22 விழுக்காடு இதனிடம் உள்ளது (EPW சூன் 16, 2018). மனேசரில் உள்ள மாருதி சுகி தொழிற்சாலையில் நிர்வாகத்திற்கு வாலாட்டும் சில தொழிற்சங்கங்கள் இருந்தன. 2011ஆம் ஆண்டில் தொழிலாளர்கள் தமக்கான -சுதந்தரமான தொழிற்சங்கம் அமைக்க உரிமை கோரிப் போராட்டங்கள் நடத்தினர். மூன்று தடவைகள் வேலை நிறுத்தம் செய்தனர். இறுதியாக 2012 சனவரியில் மாருதி சுகி நிறுவனம் தொழிலாளர்களின் சங்கத்தை அங்கீகரித்தது. ஒப்பந்தத் தொழிலாளர்கள் என்ற பெயரில் சுகி நிர்வாகம் தொழிற்சாலையில் குண்டர் படையை வைத்திருந்தது.

2012 சூலை 14 அன்று தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையில் அவர்களின் கோரிக்கைகளில் ஒன்றைக்கூட ஏற்க மறுத்தது நிர்வாகம். இதனால் தொழிலாளர்கள் மனக்கொதிப்படைந்தனர். அந்தச் சூழலில் 2012 சூலை 18 அன்று தொழிலாளி ஒருவருக்கும் கண்காணிப்பாளர் ஒருவருக்கும் இடையே நடந்த தகராறு காரணமாக, அத்தொழிலாளி பணியிடை நீக்கம் செய்யப்பட்டார். அதுகுறித்து சங்கப் பொறுப்பாளர்கள் நிர்வாகத்துடன் பேசிய போது, நிருவாகத்தின் குண்டர்களால் தொழிற்சங்கத் தலைவர்கள் தாக்கப் பட்டனர். இதையறிந்த தொழிலாளர்கள் நிர்வாகத்தின் குண்டர்களுடன் கைகலப்பில் ஈடுபட்டனர். அப்போது ஒரு பகுதியில் தீப்பற்றியது. ஒப்பந்தத் தொழிலாளர்கள் தொடர்பான மேலாளர் அவனிஷ்தேவ் என்பவர் தீயில் சிக்கி இறந்தார். குண்டர்களின் தாக்குதலால் நாற்பது தொழிலாளர்கள் காயமடைந்தனர். நிர்வாகத்தின் தரப்பில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

மாருதி சுசுகி நிர்வாகம் 148 தொழிலாளர்களின் பெயரைக் காவல் துறையிடம் அளித்தது. அவர்கள் மீது கொலைக்குற்ற வழக்குப் பதிவு செய்யப்பட்டது. காவல் துறையினர் தொழிலாளர்களின் வீடுகளுக்குள் புகுந்து கொடுமையாகத் தாக்கினர். மாருதி சுசுகி நிர்வாகம் தொழிற்சங்கத்தை ஒடுக்குவதற்காக 546 நிரந்தரத் தொழிலாளர்களையும், 1800 ஒப்பந்தத் தொழிலாளர்களையும் பணியிலிருந்து நீக்கியது. அப்போது ஆட்சியில் இருந்த காங்கிரசுக் கட்சி இக்கொடுஞ்செயலை ஆதரித்தது. கைது செய்யப்பட்ட 148 தொழிலாளர்களில் ஒருவருக்கும் பிணை வழங்க நீதிமன்றம் மறுத்துவிட்டது.

இந்த வழக்கில் குர்கான் மாவட்ட நீதிபதி இராஜேந்தர் பால் கோயல் 2017 மார்ச்சு 10 அன்று தீர்ப்பளித்தார். குற்றம் சாட்டப்பட்ட 148 பேரில் 117 பேர் விடுதலை செய்யப்பட்டனர். 31 பேருக்கு வாழ்நாள் தண்டனை விதிக்கப்பட்டது. 117 பேர் மீது எந்தக் குற்றமும் நிரூபிக் கப்படவில்லை என்று தீர்ப்பில் கூறப்பட்ட போதிலும்



2018இல் ஓரடகத்தில் ஆட்டோ-மொபைல் தொழிலாளர்கள் போராட்டம்

பிணை மறுக்கப்பட்டதால் அவர்கள் இரண்டு ஆண்டுகள் முதல் நான்கு ஆண்டுகள் வரையில் சிறையில் இருந்தனர். வாழ்நாள் தண்டனை வழங்கப்பட்டவர்களில் 30 பேர் தொழிற்சங்கத்தின் பொறுப்புகளில் இருந்தவர்கள். மேலும் இந்த வழக்கு விசாரணையின் போது தொழி லாளர்கள் சாட்சியம் அளிக்க முன்வந்ததை நீதிபதி ஏற்க மறுத்துவிட்டார். நிர்வாகத்தின் சார்பிலான சாட்சி களை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு அநீதியான இத்தீர்ப்பு வழங்கப்பட்டது. நிர்வாகத்தின் சாட்சியாளர் களில் எவரும் தீ வைத்தது யார் என்று கூறவில்லை. நீதிமன்றம் மாருதி சுசுகி நிர்வாகத்திற்கு ஆதரவாகச் செயல்பட்டது என்பதை இத்தீர்ப்பு அப்பட்டமாகக் காட்டுகிறது.

இத்தீர்ப்பின் நோக்கம், மாருதி சுசுகி தொழிலாளர்களுக்கு மட்டுமின்றி, இந்தியா முழுவதும் உள்ள தொழிலாளர் களுக்கும் ஆளும் வர்க்கத்தின் சார்பில் எச்சரிக்கை விடுப்பதாகும். சங்கம் அமைக்க வேண்டும் என்றோ, பெருமுதலாளிய நிறுவனங்களின் சர்வாதிகாரப் போக்கைத் தட்டிக் கேட்க வேண்டும் என்றோ முயல்கின்ற தொழி லாளர்களுக்கு இது ஓர் அச்சுறுத்தலாகும்.

அத்துடன் நிற்காமல், தற்போது அரியானாவில் ஆட்சியில் இருக்கும் பா.ச.க. அரசு, 2018இல் பஞ்சாப்-அரியானா உயர்நீதிமன்றத்தில் 13 பேரின் வாழ்நாள் தண்டனையை மரணதண்டனையாக மாற்ற வேண்டும் என்று விண்ணப்பித்தது. உயர்நீதிமன்ற நீதிபதி, அரியானா அரசின் வழக்குரைஞரிடம், ‘மரண தண்ட னையாக மாற்ற வேண்டும் என்று ஏன் கேட்கிறீர்கள்?’ என்று கேட்டார். அதற்கு ‘‘இந்தியாவின் தொழில் வளர்ச்சி சரிவடைந்துவிட்டது. அயல்நாட்டு மூலதன வரவு வற்றிவிட்டது. பிரதமர் நரேந்திர மோடி ‘இந்தியா வில் தயாரிப்போம்’ என்று முழங்கி வருகிறார். மாருதி சுசுகி நிறுவனத்தில் தொழிலாளர்கள் நடத்திய தாக்குதல் பெரும் களங்கமாகும்’’ என்று அரசு வழக்குரைஞர் கூறினார்.

பா.ச.க. ஆட்சியாக இருந்தாலும், காங்கிரசுக் கட்சியின் ஆட்சியாக இருந்தாலும் பெரு முதலாளிய நிறுவனங் களின் கொள்ளை இலாபத்திற்காகத் தொழிலாளர்களின் உரிமைகளை-நலன்களை மட்டுமின்றி, அவர்களின் உயிர்களையும் பலியிடத் தயாராக இருக்கின்றன என்பதை அரியானா அரசு வழக்குரைஞரின் கூற்று மெய்ப்பிக்கிறது.

மாருதி சுசுகி நிறுவனம் அரசு மற்றும் நீதிமன்றத்தின் துணையுடன் தொழிலாளர்களைப் பழிவாங்குவதற் கான காரணம், தொழிற்சங்கம் நிரந்தரத் தொழிலாளர் களுக்காக மட்டுமல்லாமல், ஒப்பந்தத் தொழிலாளர் களுக்காகவும் போராடியதே ஆகும். 148 தொழிலாளர் களைச் சிறைக்கு அனுப்பிய பின் 2015இல் எஞ்சி யிருந்த நிரந்தரத் தொழிலாளர்களுக்கு மூன்று ஆண்டு களுக்கும் சேர்த்து ரூ.16,800 ஊதிய உயர்வு அளித்தது. ஒப்பந்தத் தொழிலாளர்களும் இதுபோன்ற ஊதிய உயர்வு கேட்டனர். இதற்காகப் போராடினர். ஆனால் நிரந்தரத் தொழிலாளர்கள் ஒப்பந்தத் தொழிலாளர் களின் கோரிக்கையை ஆதரிக்கவில்லை. மாருதி சுசுகி நிறுவனத்தின் தொழிலாளர்களைப் பிரித்தாளும் சூழ்ச்சி வெற்றி பெற்றது. மாருதி சுசுகியில் 2013இல் 6,578 பேராக இருந்த ஒப்பந்தத் தொழிலாளர்களின் எண் ணிக்கை 2018இல் 10,626ஆக உயர்ந்துள்ளது. ஒப்பந்தத் தொழிலாளர் முறை உழைப்புச் சுரண்டலின் கொடிய வடிவமாகும்.

### ஓரகடம் யமகா தொழிலாளர் போராட்டம்

சென்னையை அடுத்துள்ள திருப்பெரும்புதூர், மறைமலை நகர், ஒரகடம் பகுதிகளில் மகிழுந்து,

இருசக்கர வாகனங்கள், சரக்கு உந்துகள் தயாரிக்கும் பல தொழிற்சாலைகள் உள்ளன. ஃபோர்டு, ஹுண்டாய் மோட்டார், பி.எம்.டபிள்யு., தய்ம்லர், ரினாலட் - நிசான், மிட்சுபுசி மோட்டார்ஸ், யமகா மோட்டார்ஸ், ராயல் என்ஃபீல்டு, அப்பல்லோ டயர்ஸ், மியாங் சின் ஆட்டோ முதலான பெருமுதலாளிய நிறுவனங்கள் அமைந்துள்ளன. உலகில் தானியங்கி வாகனங்கள் தயாரிக்கும் முதன்மையான பத்து பகுதிகளில் (Auto Hubs) இதுவும் ஒன்றாக இருக்கிறது.

**இப்பகுதியில் 6 நொடிக்கு 1 மோட்டார் சைக்கிள், 20 நொடிகளில் ஒரு மகிழுந்து, 90 நொடிகளில் ஒரு சரக்கு உந்து தயாரிக்கப்படுகிறது. இந்தியாவில் தானியங்கி வாகன உற்பத்தியில் தமிழ்நாட்டில் 35 விழுக்காடு உற்பத்தியாகிறது. டயர் உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்கு 40 விழுக்காடு ஆகும். 2017-18இல் தமிழ்நாட்டிலிருந்து 40 இலட்சம் தானியங்கி வாகனங்கள் ஏற்றுமதியாயின.**

மேலே குறிப்பிட்டுள்ள பெருமுதலாளிய நிறுவனங்களில் கடந்த சில ஆண்டுகளாகத் தொழிலாளர்கள் அவ்வப்போது போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இப்போராட்டங்களின் முதன்மையான நோக்கம் 1. சுதந்தரமான தொழிற்சங்கம் அமைக்கும் உரிமை, 2. மற்ற மாநிலங்களில் இருப்பது போன்ற ஊதியம் தரவேண்டும் என்பனவாகும்.

தானியங்கி வாகன உற்பத்தித் தொழிற்சாலையில் தொழிலாளர்களின் ஒருநாள் ஊதிய விவரம் - தமிழ்நாடு ரூ.241, ஆந்திரம் ரூ.233, குசராத் ரூ.322, மகாராட்டிரம் ரூ.312, அரியானா ரூ.368, மத்தியப் பிரதேசம் ரூ.312, கர்நாடகம் ரூ.314.

ஒரகடத்தில் இருசக்கர வாகனம் தயாரிக்கும் யமகா தொழிற்சாலையில் தொழிலாளர்கள் தமக்கான தொழிற்சங்கத்தை அமைத்தனர். இச்சங்கத்தை சி.ஐ.டி.யு. மத்திய தொழிற்சங்கத்துடன் இணைத்தனர். அதனால் யமகா நிர்வாகம் சங்கத்தின் செயலாளர் பிரகாஷ், பொருளாளர் இராசமணிகண்டன் ஆகிய இருவரையும் பணியிலிருந்து நீக்கியது. இவர்களின் பணிநீக்கத்தை இரத்துச் செய்ய வேண்டும் என்று கோரி 21.9.18 முதல் 500க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

மனிதச் சங்கிலி, உண்ணாநோன்பு, ஆர்ப்பாட்டங்கள் என்று பலவகையான போராட்டங்களை யமகா தொழிலாளர்கள் நடத்தினர். இப்போராட்டங்களில் மியாங்சின் ஆட்டோ தொழிற்சாலை, ராயல் என்ஃபீல்டு தொழிற்சாலை ஆகியவற்றின் தொழிலாளர்களும் பங்கேற்றனர். பல கட்ட பேச்சுவார்த்தைக்குப் பின்



ராயல் என்ஃபீல்டு தொழிலாளர் போராட்டம்

14.11.2018 அன்று காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் சி.ஐ.டி.யு. மாநிலச் செயலாளர் அ. சவுந்தரராசன் தலைமையில் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் யமகா நிர்வாகம் நடத்திய பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டது. அதுவரை 500 தொழிலாளர்கள் தொடர்ந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வந்தனர்.

பேச்சுவார்த்தையில் எட்டப்பட்ட முடிவுகள் : பணிநீக்கம் செய்யப்பட்ட இரண்டு தொழிலாளர்கள் மீதான ஆணை பணியிடை நீக்கமாக மாற்றப்படும். அவர்கள் மீது துறை விசாரணை நடத்தப்படும். விசாரணை முடியும் வரையில் அவர்களுக்கு ஊதியம் வழங்கப்படும். எக்காரணத்தைக் கொண்டும் அவர்கள் பணியிலிருந்து நீக்கப்படமாட்டார்கள். 55 நாள்களாக வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்ட தொழிலாளர்கள் மீது எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படாது. அதே சமயம் 55 நாள்களுக்கான சம்பளம் தரப்படாது. இவர்கள் பணியில் சேர்ந்ததும் இவர்களுக்கான போனசு வழங்கப்படும். தொழிலாளர் நீதிமன்றத்தின் வழக்குகளும், காவல்துறையின் வழக்குகளும் திரும்பப் பெறப்படும்.

**இன்று தொழிலாளர்கள் பெற்றுள்ள சங்கம் அமைக்கும் உரிமை, எட்டு மணிநேர வேலை, உறுதி செய்யப்பட்ட ஊதியம், போனசு, ஊதியத்துடனான விடுமுறை, குறைந்த கட்டணத்தில் உணவு, மருத்துவ வசதிகள், இழப்பீடு முதலானவை நீண்ட போராட்டங்களின் விளைவாக ஏற்பட்டனவாகும். தாராள மயம், தனியார் மயம், உலக மயச் சூழலிலும் அய்ரோப்பிய நாடுகளில் இந்த உரிமைகளை - பாதுகாப்பைத் தொழிலாளர்கள் கட்டிக்காத்து வருகின்றனர். ஆனால் இந்தியாவில் 1991 முதல் ஆட்சி செய்த - ஆட்சியில் இருக்கும் எல்லாக் கட்சிகளும் தொழிலாளர்களின் உரிமைகள்,**

**நலன்கள் முதலாளிய நிறுவனங்களால் பறிக்கப் படுவதற்கு உறுதுணையாக இருந்து வருகின்றன. ஏனெனில் இக்கட்சிகள் முதலாளிய நிறுவனங் களிடம் கோடிக்கணக்கில் தேர்தல் நிதி பெறுகின்றன.**

பெருமுதலாளிய நிறுவனங்கள் தொழிற்சங்கம் என்பதே இல்லாமல் செய்திடும் நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றன. இதற்காக, நிரந்தரத் தொழிலாளர் எண்ணிக்கையை வேகமாகக் குறைத்து, ஒப்பந்தத் தொழிலாளர் எண்ணிக்கையை அதிகரித்து வருகின்றனர். தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களில் வேலை செய்வோர் நல்ல சம்பளம் பெறுகின்ற போதிலும் சங்கம் அமைக்க முடியாது. ஏனெனில் எவரையும் ஒரே நாளில் வேலையிலிருந்து நீக்குகின்ற அதிகாரம் இவற்றுக்கு இருக்கிறது. இதே நிலையைப் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளிலும் நடைமுறைப் படுத்திட முதலாளிய நிறுவனங்கள் முயல்கின்றன. ஒப்பந்தத் தொழிலாளர் முறை மூலம் இதில் பெரு மளவில் வெற்றி பெற்றுள்ளனர்.

பெருமுதலாளிய நிறுவனங்களில் மொத்தத் தொழி லாளர்களில் 75 விழுக்காட்டினர் ஒப்பந்தத் தொழிலா ளர்களாகவே இருக்கின்றனர். குர்கானில் ஹோண்டா மோட்டார் நிறுவனத்தில் 3000 தொழிலாளர்களில் 466 பேர் மட்டுமே நிரந்தரத் தொழிலாளர்கள், நடுவண் அரசின் பொதுத் துறை நிறுவனமான நெய்வேலி என்.எல்.சி. போன்ற நிறுவனங்களிலும் 75 விழுக் காட்டினர் ஒப்பந்தத் தொழிலாளர்களாகவே இருக்கின் றனர். எனவே பெருமுதலாளிய நிறுவனங்களில் ஒப்பந்தத் தொழிலாளர்களின் உழைப்புச் சுரண்டல் பற்றி எந்த அரசும் வாய் திறப்பதில்லை.

2018 ஏப்பிரல் மாதம் நடுவண் அரசின் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் பண்டாரு தத்தாத்ரேயா, ஒப்பந்தத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் ரூ.10,000 என்று உயர்த்துவதற்கான ஆணை பிறப்பிக்கப்படும் என்று அறிவித்தார். இந்த அறிவிப்பை முதலாளிய நிறுவனங்கள் எதிர்த்தன. எனவே அமைச்சரின் அறிவிப்பு ஆணையாக வரவேயில்லை.

**இன்றைய ஆட்சிமுறை முதலாளிகளுக்கும் பெரு வணிகர்களுக்கும் ஏவல் செய்து, உழைக்கும் மக்களைச் சுரண்டி ஒடுக்குவதாகவே இருக்கிறது என்கிற உண்மையை மக்களுக்குப் புரிய வைத்து, அவர்களை அணிதிரட்டி, இந்த ஆட்சியமைப்பை மாற்றுவதே உழைக்கும் மக்களுக்கு உண்மை யான விடுதலையாகும்.**

## மார்க்சிய-லெனியத் தோழர்
## ஏ.எம்.கோதண்டராமன் மறைந்தார்



வேலூர் மாவட்டம் ஆர்க்காடு அடுத்த ஆனைமல்லூரில் பிறந்த ஏ.கே.கோதண்டராமன் வழக்கறி ஞருக்குப் படித்தார். இந்திய பொது வுடைமைக் கட்சி, இந்திய பொது வுடைமைக் கட்சி (மார்க்சிஸ்ட்) ஆகியவற்றில் செயல்பட்டு 1970இல் தமிழகத்தில் மா.லெ.இயக்கத் தீவிரச் செயல்பாட்டாளராகச் செயல் பட்டார். அரசின் அடக்குமுறைக்கு ஆளாகி பலமுறை சிறை வாழ்க்கையும், தலைமறைவு வாழ்க்கையும் வாழ்ந்தார். 'சமரன்' இதழின் ஆசிரியராக இருந்து ம.லெ.இயக்கத்தை வழிநடத்தினார். 25.11.18 அன்று மறைவுற்ற தோழரின் இறுதி நிகழவு காட்டுப்பாடியில் அவர் மகள் வீட்டில் நடை பெற்றது. ம.பெ.பொ.க. சார்பில் வாணியம்பாடி நகரச் செயலாளர் நா.மதனகவி நேரில் சென்று இறுதி மரியாதை செலுத்தினார். ம.பெ.பொ.க. சார்பில் வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

## 'எட்ட இயலும் இலக்குகள்'
### நூல் அறிமுக விழா



திரு. கா.சிவசுப்ரமணி ..., அவர்கள் எழுதிய எட்ட இயலும் இலக்குகள், என்ற கிராமப்புற இளைஞர்கள் பயனடையும் வகையிலான மத்திய மற்றும் மாநில அரசுப் போட்டித் தேர்வுக்கான வழிகாட்டி புத்தகத்தை ஊடகவியலாளர்கள் முன்னிலையில் 25-11-2018, ஞாயிற்றுக்கிழமை அன்று மார்க்சிய - பெரியாரிய அறிஞர் திரு. வே. ஆனைமுத்து வெளியிட திரு. சங்கர் கணேஷ் , (துணை ஆணையர், இந்திய வருமானவரி துறை) மற்றும் ஏ. இரமேஷ் (), (இயக்குநர், நுழைபுலம் போட்டித் தேர்வு மற்றும் திறனூக்க பயிற்சி மையம் பெற்றுக் கொண்டனர். நிகழ்ச்சியில் திரு. சுந்தர்ராஜன் (வணிகவரி துறை இணை ஆணையர்) கலந்து கொண்டார். திரு. சிவ சங்கர் பாண்டியன் (ஒருங்கிணைப்பாளர், நுழைபுலம் போட்டித் தேர்வு மற்றும் திறனூக்க பயிற்சி மையம்) நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். தமக்கென முயலா நோன்தாள் உள்ளம் படைத்த வாழும் பெரியார் அய்யா வே. ஆனைமுத்து அவர்களுக்கு இந்நூலை சமர்ப்பணம் செய்தார் ஆசிரியர் கா. சிவசுப்ரமணி. வெளியீடு: தடாகம்.

# மறக்க முடியாத மாமனிதர்
# பண்பாளர் பனகல் அரசர்

- மரு. க. சோமாஸ் கந்தன்,



பனங்கன்டி இராமராயநிங்கார் என்னும் இயற்பெயர் கொண்ட பனகல் அரசர் நீதிக்கட்சியின் புகழ்பூத்த தலைவர்களுள் ஒருவர். சென்னை மாகாணத்தின் இரண்டாவது முதன்மை அமைச்சர்.

**குடும்பத்தினர் பண்பாடு**

இராமராயநிங்கார் வேளமா சமூகத்தைச் சேர்ந்த நிலச்சுவான்தார்கள் குடும்பத்தில் 1866 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 9ஆம் நாள் பிறந்தார். ஜமீன் குடும்பத்தில் கல்வி கற்பதில் எவருக்கும் ஆர்வம் இருந்ததில்லை. செல்வமொன்றே வாழ்வாங்கு வாழ்வதற்குப் போதுமென்ற எண்ணத்தோடு வாழ்ந்துள்ளனர். கல்வியின் அருமை அறியாதாராய் இருந்துள்ளனர். ஆனால் பனகல் அரசர் குடும்பத்திலிருந்த அவரது முன்னோர்கள் கல்வியின் பயனறிந்து நன்கு கற்றறிந்த அறிவாளர்களாக இருந்துள்ளனர் என்பதோடு மக்களனை வரிடமும் அன்போடும் பண்போடும், ஒப்புரவோடும் பழகும் தன்மையுடையவர்களாயும் விளங்கினர்.

**கல்வி**

பனகல் அரசர், இளமையில் இல்லத்தில் இருந்தவாறே தெலுங்கு மொழியினையும், சமஸ்கிருத மொழியையும் பயின்று தேர்ந்தார்.பின் அகவை 18-இல் சென்னை போந்து, திருவல்லிக்கேணியில் இருந்த இந்து உயர் நிலைப் பள்ளியில் பள்ளிக் கல்வியை முடித்தபின்னர் மாநிலக்கல்லூரியில் சேர்ந்து பயின்று இளங்கலைப்பட்டம் பெற்றார்.1889ஆம் ஆண்டு முதுகலைப் பட்டமும்(எம்.ஏ) பெற்றார். முதுகலையில் சமஸ்கிருதத்தை விரும்பித் தேர்வுசெய்து பயின்று சம்ஸ்கிருத புலமை மிக்கவராகத் திகழ்ந்தார். சட்டப்படிப்பையும் படித்துப் பட்டம் பெற்றார். பனகல் அரசர் முது கலைப்பட்டம் பெற்றதற்காக இராம நாதபுரம் ராஜாவின் உயர்ந்த தங்கக் கடிகாரத்தைப் பரிசாகப் பெற்றார்.

மாநிலக்கல்லூரியில் பயிலுங்காலத்தே பொது நலத் தொண்டாற்றுவதில் விருப்பங்கொன்டு பல பொது நல அமைப்புகளில் சேர்ந்து தொண்டறம் புரிந்தார். கல்வி அறிவிலும் பண்பிலும் சிறந்து விளங்கிய பனகல் அரசர், ஏழை எளிய மக்கள் கல்வி அறிவின்றி அறியாமை இருளில் மூழ்கி அல்லற் பட்டு ஆற்றாது அழுத கண்ணீருடன் வாழ்ந்து வருதலைக் கண்டு அந்த ஏழை மக்களுக்கு அறிவொளி வழங்கிட உறுதி கொண்டார்.

**அரசியல் பிரவேசம்**

1912 ஆம் ஆண்டு இந்தியாவின் மத்திய நாடாளுமன்றத் திற்கான நில உரிமையாளர்கள், உறுப்பினர்களுக்கான தேர்தலில் போட்டியிட்டு வெற்றியடைந்து தனதுஅரசியல் வாழ்வைத் தொடங்கினார். மூன்றாண்டுகள்-1915 ஆம் ஆண்டு வரை அப்பதவியில் நீடித்த பனகல் அரசர், தனது சொல் வன்மையால் ஆங்கிலேயரை வியக்கவைத்தார். இவருடைய சொல்லாற்றல் வைஸ்ராய் ஹார்டிங்கை வெகுவாகக் கவர்ந்தது.

1914 ஆம் ஆண்டு சி.நடேச முதலியார் தொடங்கிய சென்னை திராவிடர் சங்கத்தில் இணைந்து தொண்டாற்றினார். கோல்காபூர் ஷாகு மகாராஜ் தொடங்கிய பிராமணரல்லாதார் இயக்கத்திலும் இணைந்து செயல்பட்டார்.

**நீதிக் கட்சியில் பங்கேற்பு**

1916 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 20 ஆம் நாளன்று சென்னை பூந்தமல்லி நெடுஞ்சாலையிலுள்ள உயர் நீதிமன்ற வழக்குறைஞர் டி.எத்திராஜ் இல்லத்தில், சி. நடேசனார், சர்.பிட்டி.தியாகராயர், டாக்டர்.டி.எம். நாயர் உட்பட ஏறத்தாழ 30 பார்ப்பனரல்லாத பெருங்குடி மக்கள் நாடெங்கிலுமிருந்து வந்து கலந்து கொண்டு ஆலோசனை நடத்தினர்.(விக்டோரியா பொது அரங்கில் கூடியதாக ஒரு கருத்து உள்ளது). இந்தக் கூட்டம் தென்னிந்திய நல உரிமைச் சங்கம்(நீதிக் கட்சி) தோற்றம் பெறுவதற்குக் காரணமாக இருந்த வரலாற்றுச் சிறப்புமிக்கக் கூட்டமாகும்இக்கூட்டத்தில் பனகல் அரசர் திவான்பகதூர் பி.இராமராய நிங்காரும் கலந்துகொண்டார்.

இந்தக் கூட்டத்தின் நீட்சியாக 1917 அக்டோபர் திங்களில் தென்னிந்திய நல உரிமைச் சங்கம் (S.I.L.F) என்ற நீதிக்கட்சி பிட்டி.தியாகராயர், டி.எம். நாயர், சி,நடேசனார் ஆகியோரால் தோற்றம் கண்டது. கருத்து ஒற்றுமையின் அடிப்படையில் அதில், பனகல்அரசர் தன்னை இணைத்துக் கொண்டார்.

## கோவையில் பனகல் அரசர் தலைமையில் நீதிக்கட்சியின் முதல் மாநாடு

முதல் பார்ப்பனரல்லாதார் மாநாடு நீதிக்கட்சியின் சார்பில் கோவையில் ஒப்பனக்கார வீதியிலிருந்த ஒரு திரையரங்கில் 1917 ஆம் ஆண்டு ஆகஸ்டு 19,20 ஆகியஇருநாள்கள், நடைபெற்றது. மாநாட்டின் வரவேற்புக் குழுத்தலைவர் ஊத்துக்குளி ஜமீந்தார் ராவ்பகதூர். எம்.ஆர்.காளிங்கராயர் எழுச்சிமிகு வரவேற்புரை நிகழ்த்தினார். பனகல் அரசர் மாநாட்டின் தலைவர். தலைவர் பனகல் அரசரின் தலைமையுரை சிறப்பாகவும்,விரிவாகவும் கொள்கை விளக்கப் பேருரையாகவும் அமைந்திருந்தது.அவரது உரையிலிருந்து சிலபகுதிகள் கீழே:

இந்திய நாட்டின் சார்பாகப் பேசும் உரிமை தமக்கே உண்டெனப்பேசும் நமது எதிரிகள் (பிராமணர்கள்) நம்மை வகுப்புவாதிக ளென்றும். பிரிவினைவாதிகளென்றும் புறம் பேசுகின்றனர். தாங்களே இந்திய நாடென்றும், தங்கள் நலன்களே இந்தியாவின் நலன்கள் என்றும் கருதுவதையும் வழக்கமாகக் கொண்டுள்ளனர். அதனால் இந்த மாகாண மக்கள் பெரும்பாலானோரின்,சார்பாக இந்த மாநாடு நடத்தப்படுகிறது என்பதைக் காண முடியாத குருடர்களாக அவர்கள் (பிராமணர்கள்) உள்ளனர்.

தாமே இந்திய மக்களனைவருக்குமான பிரதிநிதிகள் என்று நம்மை ஏமாற்றிவந்துள்ளனர். அவர்களின் இத்தகைய ஏமாற்று வேலைகள் பற்றி நம்மில் எவரும் எந்தக் கேள்வியும் கேட்காமல் அமைதியாக இருந்தகாலம் மாறிவிட்டது. அவ்வாறு அமைதியாக இருந்ததற்காக நாமெல்லாம் துன்பப்பட நேர்ந்தது. பார்ப்பன ரல்லாத சமூகத்தினர் எந்த ஒரு சமூக ஒழுங்கு முறைஅமைப்பின் கீழும் இருந்ததில்லை. எந்தவித ரகசிய அரசியல் நோக்கம் கொண்ட உறவுகளும் இருந்ததில்லை. அதன் விளைவால் அவர்களது நிலைக்கும் நலங்களுக்கும் பேரழிவு நேர்ந்தது.

வழிவழி வந்த புரோகிதக் கூட்டத்தின் இரும்புப் பிடியின் கீழ் மூட நம்பிக்கை, பழக்கவழக்கங்களில் நம்மவர் மூழ்கிக்கிடந் தனர். பெரும்பாலோர்க்கு வேறு எதுவும் தெரிந்திருக்கவில்லை.

பிராமணரல்லாதோருக்குக் கல்வி அறிவினைப் பெறுவதற் கான உரிமையும், வாய்ப்பும் வாய்த்திருக்கவில்லை. பிராம ணரல்லாத மக்கள், தங்களுக்கு (பிராமணர்க்கு) நிரந்தர அடிமைகளாக இருக்கும் வண்ணம் பழைய வேத, சாஸ்திர, புராணங்களுக்கான விளக்கம் அளித்து வந்துள்ளனர்,

### கல்வி நிதி அமைக்க வற்புறுத்தல்

பிராமணர்களுக்குக் கிடைத்த வாய்ப்புகள் பிராமணரல்லாத மாணவர்களுக்கும் கிடைத்திருக்குமானால், அவர்களும் கல்வியறிவில் சிறந்திருப்பர். அவர்களோடு (பிராமணர்களோடு) போட்டியிடும் அளவிற்கு அறிவு வளம் பெற்றவர்களாக பிராம ணரல்லாத மாணவர்கள் வளர்ந்திருப்பர். ஆகவே அந்த மாணவர்கள் கல்வி பெறுவதற்கான வசதிகளை ஏற்படுத்தித் தருதல் நமது முதற் கடமையாகும். இதற்காக நமது சமூகத் தலைவர்கள்,பொருள் வசதியற்ற மாணவர்கள் கற்பதற்கு உதவுவதற் கென்றே ஒரு கல்வி நிதியம் ஏற்படுத்திடவேண்டும்.

பிராமணரல்லாதார் ஹோம் ரூல் இயக்கத்தை எதிர்க் கின்றனர். ஏன்?:-இப்போதே ஹோம்ரூல் அளிக்கப்பட்டால் ஆங்கிலேயர் இந்நாட்டுக்கு வருமுன்னர் பிராமணரல்லாதார் எத்தகைய கீழ் நிலையில் இருந்தார்களோ அதே பின்தங்கிய நிலையில் சுதந்திரமாகச் செயல்பட முடியாதவர்களாக அடிமை நிலைக்கே மீண்டும் தள்ளப்படுவார்கள். வருணாசிரம தர்ம இயக்கமும் அத்துடன் இணைந்த மனுதர்மத்தின் அடிப்படை யிலான தேசியக் கல்வி இயக்கமும் முன்னிலைப் படுத்தப்படும் (இன்றும் அதே நிலைதான் உள்ளது.) இந்த ஆட்சியில் பிராமணர்களே உயர்அதிகார நிலை பெற்றவராக இருப்பர் என்பதாலேயே எல்லாச் சமூகங்களும் சமநிலை எய்தியபின்னரே ஹோம்ரூல் பற்றிச் சிந்தித்தல் கூடும். என்றும் பனகல் அரசர் அம்மாநாட்டில் உரையாற்றினார்.

தொடர்ந்து பல மாவட்டங்களிலும் பார்ப்பனர்ல்லாதார் மாநாடுகளை நீதிக்கட்சியினர் நடத்திவந்தனர். முதல் சென்னை மாகாண ஜஸ்டிஸ்கட்சி மா நாடு 1917 டிசம்பர் 28, 29 தேதிகளில் சென்னையில், வெலிங்டன் திரையரங்கில் கூடியது.

இந்தக் காலக் கட்டத்தில் இந்தியாவில் பலபகுதிகளில் பிரிட்டிஷாருக்கு எதிரான கிளர்ச்சிகள் நடைபெற்றன. இதன் விளைவாக பிரிட்டிஷ் இந்தியாவின் நிருவாகத்தில் சங்கடங்கள் அதிகரித்து வந்தன. இதனைப் பிரிட்டிஷ் அரசு புதியபோக்கில் எதிர்கொள்ளத் தலைப்பட்டது. அதன் விளைவாக இந்திய மந்திரி எட்வின் மாண்டேகு 1917ஆம் ஆண்டு ஆகஸ்டு 20ஆம் நாள் ஒரு அறிக்கையை வெளியிட்டார், ‘‘இங்கிலாந்து நாடாளுமன்றத் தில். நிர்வாகத்தில் பெருமளவில் இந்தியர்களை இணைத்துக் கொண்டு சுய ஆட்சி அமைப்புகளை வலுப்படுத்தி இந்திய மக்களைப் பொறுப்பாட்சிக்குத் தயார்படுத்துவதே மேன்மை தங்கிய மன்னர்பிரான் ஆட்சியின் நோக்கம். அவ்வாறு பொறுப்பாட்சி பெற்ற இந்தியா ஆங்கில சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாகவே இயங்கும்’’ இந்த அறிவிப்பு இந்திய அரசின் விசேஷ கெஜட்டில் வெளியாயிற்று. இந்த அறிக்கையைக் குறித்து மக்களின் எண்ணங்களை அறிய, இந்தியத் துணைக் கண்டம் முழுதும் சுற்றிய மாண்டேகுவும், செம்ஸ்போர்டும் சென்னை வந்தனர், 1917, டிசம்பர் 14 அன்று. அரசமைப்புச் சட்டச் சீர்திருத்தங்கள் குறித்த தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கப் பல குழுக்கள் அவர்களைச் சந்திக்கக் காத்திருந்தனர். அவர்களைச் சந்தித்தக் குழுக்களில் 4 குழுக்கள் பார்ப்பனரல்லாதார் குழுக் களாகும். அவை: 1. சென்னை மாகாணச் சங்கம். 2.தென்னிந்திய நல உரிமைச் சங்கம்,3.சென்னைதிராவிடர் சங்கம்,4.சென்னை பார்ப்பனரல்லாதார் சங்கம் ஆகியவையாகும்.

விரிவான விளக்கமான அறிக்கை ஒன்றைத் தென்னிந்திய நல உரிமைச் சங்கம் அளித்தது. அரசின் நிர்வாகத் துறைகள் அனைத்திலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ அடிப்படையில் பதவி ஒதுக்கீடுகள் முறைப்படிச் செய்யப்படவேண்டும். சட்டமன்றத்தில் எல்லாச் சமூகத்தினரின் நலன்களும் உரிமைகளும் பாதுகாக்கப் படத்தக்க வகையில் உறுப்பினர்கள் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று அவ்வறிக் கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

**திராவிடர் சங்கத்தின் சார்பில் பி.இராமராய நிங்கார் (பனகல் அரசர்) அறிக்கையைப் படித்தார். அவ்வறிக் கையின் சில பகுதிகள்**

பார்ப்பனரல்லாத சமூகத்தினர் பெரும்பான்மையினர்; பொருளீட்டி அரசுக்கு வரி கட்டுபவர்களாக, இருந்தும் அவர்கள் அரசின் நிர்வாகக் கொள்கைகளை வடிவமைப்பதில் தங்களுக் குரிய பங்கினைப் பெற்றிருக்கவில்லை. அரசு அளித்த கல்வி கற்கும் வாய்ப்புகள் அவர்களுக்குக் கிட்டவில்லை பார்ப்பனரல் லாதார் கல்வி கற்பதற்கு உள்ள தடைகள்-பல பள்ளிகளில் பார்ப்பனரல்லாத சமூகத்தினரின் பிள்ளைகளை அனுமதிப்ப தில்லை. மேலும் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் நியமிக்கப்படும் இந்திய ஆசிரியர்கள் பல்வேறுபட்ட சமூகங்களைச் சேர்ந்தவர் களாகவும், ஒரே சமூகத்தைச் சேராதவர்களாகவும் இருக்க வேண்டும். குறிப்பாக மற்ற பிரிவு மாணவர்களைத் தங்களின் குழந்தைகளை விட மேலாகப் பார்க்கும் ஆசிரியர்களாக இருக்கவேண்டும்.

தற்போது மற்ற சமூகங்களைச் சேர்ந்த மாணவர்களிடம் மிகுந்த பாகுபாடு காட்டுபவர்களாக உயர் ஜாதி ஆசிரியர்கள் உள்ளனர். ஒடுக்கப்பட்ட பிரிவு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதைத் தடை செய்துள்ள பள்ளிகள் சில இருக்கின்றன. இந்த சமத்துவமின்மைக்கு முற்றுப் புள்ளி வைக்கவேண்டும். அத்தகைய பள்ளிகளுக்கு அரசு நிதி எதுவும் வழங்கப்படக்கூடாது. சமூகத்தில் இதைவிட மிக மோசமான சமூக அநீதி என்ன வென்றால், பொது நிதியிலிருந்து உருவாக்கப்பட்ட கிணறுகள், குளங்கள், சாலைகள் ஆகியவற்றை ஒடுக்கப்பட்ட,தாழ்த்தப்பட்ட மக்கள் பயன்படுத்துவதைத் தடை செய்திருப்பதுதான். இந்த மாகாணத்திலுள்ள பார்ப்பன அமைப்பான தர்ம ரட்சக சபா என்ற அமைப்பில் இது போன்று, சமூக விதிகள் திரித்துக் கூறப்படு கின்றன. என்று குறிப்பிட்டார்.

இங்கிலாந்து சென்ற தூதுக் குழு, 1919 இல் பிராமணரல் லாதாருக்கு வகுப்புவாரிப் பிரதி நிதித்துவம் கோரி பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் வாதாட இங்கிலாந்து சென்ற நீதிக்கட்சிக் குழுவில் பி.இராமராய நிங்கார் (பனகல் அரசர்) அங்கம் வகித்தார்.

**முதல் பொதுத் தேர்தல்**

மாண்டேகு-செம்ஸ்போர்டு அறிக்கையின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட அரசியல் சீர்திருத்தம் ''மாண்டேகு-செம்ஸ் போர்டு சீர்திருத்தம்'' என அழைக்கப்பட்டது. அச்சீர்திருத்தத்தின் மூலம் இந்திய மாகாணங்களில் 1920இல் இரட்டையாட்சி முறை (Diarchy) நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது.

மாண்ட்போர்டு சீர்திருத்தத்தின்படி முதல் பொதுத் தேர்தல், 1920 நவம்பர் திங்கள் 30 ஆம் நாள் நடைபெற்றது.

புதிய அரசமைப்பு முறை ஏற்பாட்டில் நீதிக்கட்சியினருக்கு முழுமையான மன நிறைவு ஏற்படவில்லை என்ற போதிலும், கிடைத்த வாய்ப்பினைப்பயன்படுத்திக்கொள்வது சாலச்சிறந்தது என்ற எண்ணத்துடன் தேர்தல் களத்தில் முழுமனதுடன் முனைந்து ஈடுபடுவது என்று நீதிக்கட்சியினர் முடிவு செய்தனர். நீதிக்கட்சியினர், மிகுந்த உணர்ச்சியோடும் ஊக்கத்தோடும் தேர்தல் பணிகளில் ஈடுபட்டனர். அதன் விளைவாக மொத்த மிருந்த 98 தொகுதிகளில் 63 தொகுதிகளைக் கைப்பற்றினர். ஆளுநரால் நியமிக்கப்பட்ட 18 உறுப்பினர்கள் நீதிக்கட்சியின் ஆதரவாளராக அமைந்திருந்தனர்..ஆக 127 உறுப்பினர்களைக் கொண்டிருந்த சட்டமன்றத்தில்,81 பேர் நீதிக்கட்சியினராக அமர்ந்திருந்தனர்.

**நீதிக்கட்சியின் மகத்தான வெற்றிக்கான காரணங்கள்**

1. முதல் தேர்தலில் காங்கிரஸ் இயக்கத்தினர் ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டதால் தேர்தலைப் புறக்கணித்தனர். ஆனால் காங்கிரஸார் பிராமண வேட்பாளர்களையே ஆதரித்தனர்.

   தேர்தலைச் சந்தித்தவர்கள், நீதிக்கட்சியினரும், மிதவாதக் கட்சி ஹோம்ரூல் இயக்கத்தைச் சேர்ந்த பிராமணர்களும், சென்னை மாகாணச் சங்கத்தினரும், முஸ்லிம் லீக்கினரும் ஆவர். கட்சியின் பெயர்கள் சொல்லப்பட்டனவே தவிர, தேர்தலில் பார்ப்பனரல்லாதர்-பார்ப்பனர் என்ற இருபிரிவின ராகவே களம் ஆடினர். அங்கே கட்சிகளின் பெயர்கள் எடுபடவில்லை.

2. பார்ப்பனரல்லாதத் தலைவர்கள், சிறப்பாகப் பரப்புரையில் ஈடுபட்டு மக்கள் ஆதரவைத் திரட்டினர். தீவிரப் பரப்புரையில் ஈடுபட்டவர்களில் மிகவும் குறிப்பிடத்தக்கவர்களாக, பனகல் அரசர் இராமராய நிங்கார், கே.வி.ரெட்டி நாயுடு, ஏ.இராமசாமி முதலியார், டாக்டர் சி. நடேசனார், சர்.ஏ.டி.பன்னீர் செல்வம் ஆகியோர் விளங்கினர்.

3. நீதிக்கட்சியின் பெருந்தலைவரான திரு.பிட்டி. தியாகராயர், நீதிக்கட்சியை மிகக் கட்டுக்கோப்போடு மிகத் திறமையாக வழிநடத்திச் சென்றதால் ஏற்பட்ட செல்வாக்கு தேர்தலில் ஆதரவாக மாறியது..

4. வாக்காளர்களில், பெரும்பான்மையினராகப் பார்ப்பனரல்லா தார் இருந்தனர். அதுவும் வெற்றிக்கான காரணங்களில் ஒன்றாய் அமைந்திருந்தது.

5. பார்ப்பனரல்லாதார்க்கு 98 தொகுதிகள் தனித் தொகுதிகளாக அமைக்கப்பட்டிருந்ததும் வெற்றிக்கான காரணங்களில் ஒன்றாகும்.

6. நீதிக்கட்சியினர் தந்த தேர்தல் வாக்குறுதிகளும், வெற்றிக்கு முக்கியக் காரணமாக அமைந்திருந்தன.

**நீதிக்கட்சியின் முதல் அமைச்சரவை**

வெற்றிபெற்ற நீதிக்கட்சியின் தலைவர் திரு.பிட்டி.தியாகரா யரை அமைச்சரவை அமைக்க சென்னை ஆளுநர் வெல்லிங்டன் பிரபு அழைப்பு விடுத்தார். ஆளுநரின் அழைப்பை ஏற்றுக் கொள்ள மறுத்த தலைவர் தியாகராயர், தனக்குப் பதிலாகக் கடலூர் வழக்குறைஞர் ஏ.சுப்பராயலு ரெட்டியார் முதல் அமைச்சராகப் பதவியேற்றுக் கொள்வார், என்று அறிவித்தார். அதனைக் கடிதம் மூலமாகவும் ஆளுநருக்குத் தெரிவித்தார்.

1920 ஆம் ஆண்டு டிசம்பர் 17 ஆம் நாள் ஏ. சுப்பராயலு செட்டியார் முதல் அமைச்சராகவும்,.பனகல் அரசர் இராமராய நிங்கார் இரண்டாவது அமைச்சராகவும், கே.வேங்கட்டரெட்டி நாயுடு மூன்றாவது அமைச்சராகவும் பதவியேற்றனர். முதலமைச்சருக்குக் கல்வி, பொதுப்பணி,ஆயத்தீர்வு, பதிவு ஆகிய துறைகள் ஒதுக்கப்பட்டன இரண்டாம் அமைச்சரான பனகல் அரசரிடம் உள்ளாட்சித் துறையும், மக்கள் நல்வாழ்வுத் துறையும், ஒதுக்கப்பட்டன.

மூன்றாம் அமைச்சர் கே.வி.ரெட்டி நாயுடுவிடம் தொழில் துறை ஒப்படைக்கப்பட்டது.

மாகாண சட்டமன்றத் தலைவராக பி.ராஜகோபாலாச்சாரியை ஆளுநர் வெல்லிங்டன் பிரபு நியமித்தார். சட்டமன்றத் துணைத் தலைவராக கேசவப்பிள்ளையையும், அட்வகேட் ஜெனரலாக சர்.சி.பி.இராமசாமி ஐயரையும் ஆளுநர் நியமனம் செய்தார். ஆர்.கே சண்முகம் செட்டியார், சர்.ஏ.இராமசாமி முதலியார், பாரிஸ்டர். தங்கவேலு ஆகிய மூவரும் அமைச்சரவைக் குழுவின் செயலாளர்களாக ஆளுநரால் நியமிக்கப்பட்டனர். .

சென்னை மாகாணத்தில் 17-12-1920 முதல் இரட்டை ஆட்சிமுறை தொடங்கி வைக்கப்பட்டது. முதல் சட்டமன்றக் கூட்டத்தை 1921 ஆம் ஆண்டு ஜனவரி 12 ஆம் நாள் கன்னாட் பிரபு தொடங்கிவைத்துப் பேசினார். அவர் பேசும்போது, நல்ல நிர்வாகத்திறனும் நல்ல வழிவழித் தலைமைச் சிறப்பும் கொண்ட இந்த நாட்டிற்கு உரியவர்கள் கையில் அதிகாரத்தை ஒப்புவிப்பதில் பெருமையும் பூரிப்பும் அடைகின்றேன். இது இந்த நாட்டின் சனநாயக வரலாற்றின் தொடக்கக் கூட்டம் என்றாலும் எதிர்காலத்தில் முக்கியத் திருப்பங்களுக்கு வழிகோலும் என்று உறுதி கொள்கிறேன் என்று குறிப்பிட்டார்.

இரண்டாவது கூட்டம் 1921, பிப்ரவரி 14 இல் கூடிற்று. அடுத்து மார்ச் திங்களில் கூடிய கூட்டத்தில் 1921-1922 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை சட்டமன்ற உறுப்பினர்களின் விவாதத்திற்கு வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. இந்நிலையில் முதலமைச்சர் சுப்பராயலு ரெட்டியார் உடல் நிலை பெரிதும் பாதிக்கப்பட்டதால் 1921 ஜுலை 11 இல் பதவியிலிருந்து விலகினார். டிசம்பர் இறுதியில் அவர் இயற்கை எய்தினார்.

**முதல்வராக பனகல் அரசர்**

உடல் நிலை பாதிப்புக் காரணமாக முதல்வர் சுப்பராயலு ரெட்டியார் பதவி விலகிய பின்னர், பனகல் அரசர் இராமராய நிங்கார் முதல்வர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். இரண்டாவது அமைச்சராக கே.வி.ரெட்டி நாயுடுவும், மூன்றாவது அமைச்சராக ஏ.பி.பாத்ரோவும் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

**முதல் சமூகநீதி ஆணை**

நீதிக்கட்சியின் உயிர் நாடிக் கொள்கை பிராமணர் அல்லாத மக்களுக்குக் கல்வித்துறையிலும் வேலை வாய்ப்புகளிலும் ஆட்சி அதிகாரத்திலும் வகுப்பு வாரிப் பிரதி நிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்பதே. ஆதலால் 1921 ஆகஸ்டு 16 ஆம் நாள் எல்லாச் சமூகத்தினர்க்கும் அரசுப் பணிகளில் வாய்ப்பு அளிக்க வேண்டும் எனும் ஆணையைப் பிறப்பித்தார் முதல்வர் பனகல் அரசர்.

இதற்காக ஒரு மசோதாவையும் ஆகஸ்டு 5-,1921 இல் ஓ.தணிகாசலம் செட்டியார்(நீதிக்கட்சி)சட்டமன்றத்தில் தாக்கல் செய்தார்.

உத்தியோகத் துறையில் குறிப்பிட்ட வகுப்பினர் ஆதிக்கம் செலுத்தும் நிலையிருக்குமானால் அது நாட்டுக்குப் பெரும் தீங்கை விளைவிக்கும். எல்லாச் சமூகத்தினரும் ஏற்றம் பெறும் வகையில்,மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டு உத்தியோகங்களை வழங்க வேண்டும் என்று அம்மசோதாவில் குறிப்பிட்டு இருந்தார்.

வேலை வாய்ப்பில் இடஒதுக்கீடு பார்ப்பனரல்லாத மக்களுக்கு என்றதும்-பிராமண உறுப்பினர்கள் உடனடி எதிர்ப்பைப் பதிவு செய்தனர். மசோதாவை நிறைவேற்றக் கூடாதென்று கூச்சலும் குழப்பமும் ஏற்படுத்தினர். எதிர்ப்புகளைத் துச்சமென தூக்கி மூலையில் ஒதுக்கிவிட்டு பனகல் அரசர் சமூக நீதி ஆணையை ஆகஸ்டு 16, 1921 இல் பிறப்பித்தார். ஆனால் அந்தச் சட்டம் செய லற்று இருந்தது-அதிகார நந்திகளின் ஒத்துழைப்பின்மையால்.

**கல்லூரிக் கல்வி**

அரசுப் பணிகளில் ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பார்ப்பன ரல்லாத இளைஞர்களுக்கு இடஒதுக்கீட்டிற்கு ஆணை பிறப்பித்த முதல்வர் பனகல் அரசர் சிந்தனையில் அரசுப் பணியில் நுழைவதற்கான தகுதியை உருவாக்கும் கல்வித்துறையிலும் சமவாய்ப்பளிக்க வேண்டும் என்றஎண்ணம் தோன்றியது..

அந்த நாள்களில் கல்லூரிகளின் தலைவர்களாகப் பெரும் பாலும் பிராமணப் பேராசிரியர்களே இருந்துள்ளனர். அவர்கள் சுயஜாதி அபிமானத்தில் பிராமண மாணவர்களையே தேர்வு செய்து கல்லூரியில் படிக்க அனுமதித்தனர். கல்லூரிக் கனவோடு திரிந்த பிராமணரல்லாத மாணர்கள் கல்லூரியில் சேர்வது என்பது குதிரைக் கொம்பாகவே இருந்தது. இதனை அறிந்திருந்த முதல்வர் பனகல் அரசர் இந்தச் சூழலை மாற்றிட எண்ணினார். அத்தகு கசப்பான சூழலில், கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்ப்பதற்கென்றே ஒவ்வொரு கல்லூரியிலும் குழு ஒன்றை அமைத்து அவர்கள் மாணவர்களைச் சேர்க்க வழிவகை செய்து பார்ப்பனரல்லாதார் கல்விக்கு வழிவகை செய்தார் பனகல் அரசர். அதன் பின் கல்லூரியில் சேர்ந்து படிக்கும் பார்ப்பனரல்லாத மாணவர்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்தது.

**பெண்களுக்கு வாக்குரிமை**

1920 தேர்தலில் பெண்களுக்கு வாக்குரிமை இல்லை. பெண்களுக்கு வாக்குரிமை வேண்டுமா வேண்டாமா என்பதைத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகள் தீர்மானித்துக் கொள்ளட்டும் என்று பிரிட்டிஷ் அரசு கூறியது. அதனைக் கருத்தில் கொண்டு,1921-ஆம் ஆண்டு ஏப்ரலில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட வேண்டும் என்று மசோதா கொண்டுவரப்பட்டு. வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது ஆதரவாக 44 வாக்குகளும் எதிராக 13 வாக்குகளும் கிடைக்கப்பெற்று, மசோதா நிறை வேறியது. அதன்படி ஆணையும் பிறப்பிக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டது.

### தாழ்த்தப்பட்டோரை "ஆதிதிராவிடர்" என அழைக்கச் சட்டம்

1921 இல் சென்னை மாகாணத்தில் மக்கள் தொகை கணக்கெடுக்கப்பட்டது. தாழ்த்தப்பட்டோரைப் பஞ்சமர், பறையர் என்ற சொற்களால் அழைப்பதற்குப் பதிலாக, நீதிக்கட்சியின் வேண்டுகோளின்படி "ஆதித் திராவிடர்" என்றே அழைக்கவும், ஆவணங்களில் பதிவு செய்யவும் அறிவுறுத்தப்பட்டது. இதையொட்டி ஆதித் திராவிடர் என்னும் பெயரைப் பயன்படுத்த வேண்டும் என்று சென்னை மாகாண சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. 1922 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 25 ஆம் நாள் ஆதித் திராவிடர் எனப் பெயர் மாற்றத்திற்கான ஆணையை பனகல்அரசர் வெளியிட்டார்.

தாழ்த்தப்பட்ட மக்களின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கென்று தனி அலுவலர்கள் பணியில் அமர்த்தப் பட்டனர். தனி அலுவலரின் ஆலோசனைப்படி பனகல் அரசர் அரசு, தாழ்த்தப்பட்டவர்களுக்கு வீட்டுமனை வழங்கல், கடனுதவி செய்தல், குடியிருப்புகளுக்குச் சாலைகள் அமைத்தல், குடி நீர் வசதிகள் ஏற்படுத்துதல், பள்ளிகள் நிர்மானித்தல், நிலவரி நீர்வரி ரத்து, உள்ளாட்சி மன்றங்களில் பிரதி நிதித்துவம் வழங்கல் என தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வு மேம்பட அக்கறையோடு செயலாற்றியது.

### இந்து அற நிலையப் பாதுகாப்பு மசோதா

இந்து கோயில்களும்மடங்களும் பிராமணர்களின் வேட்டைக் காடாக இருந்ததைத் தடுத்திடவும், இந்நிறுவனங்களில் இருந்த செலவுபோக மிஞ்சிய நிதியை மக்கள் நல்வாழ்வு கருதி பொது நலக்காரியங்களுக்குச் செலவிட வகை செய்யும் நோக்கத்துடனும் "இந்து அறநிலையப்பாதுகாப்பு சட்ட வரைவு" 1922 டிசம்பர் 6-இல் கொண்டுவரப்பட்டது. 1923 ஏப்ரல் திங்களில் சட்டமன்றத்தில் முன்மொழியப்பட்டு இம் மசோதா நிறைவேற்றப்பட்டது. இம்மசோதாவை நிறைவேற்ற பலத்த எதிர்ப்புகள் இருந்தன. எனவே இதனைச் சட்டமாக்குவதற்கு வைசிராயின் ரீடிங் ஒப்புதல் கிடைக்கவில்லை. காலம் கடத்தினார். வைசிராய். சென்னை மாகாண ஆளுநர் வெல்லிங்டன் பிரபு, வைசிராயிடம் இந்த மசோதாவின் நியாயங்களை விளக்கி இதற்கு அனுமதி அளிக்க வலியுறுத்தினார்.

எனினும் மிகப் பெரிய முயற்சியை மேற்கொண்டு 1924 ஏப்ரலில் உரிய அனுமதியுடன், சட்டமன்றத்தில் இரண்டாம் முறையாக நிறைவேற்றப்பட்டு சட்டமாகியது.1925 சனவரி யிலிருந்து வைஸ்ராய் ஒப்புதல் பெற்று நடைமுறைக்கு வந்தது.

இத்தகைய சாதனைகளோடு நீதிக்கட்சியின்(பனகல் அரசரின்) முதல் அமைச்சரவையின் (1920-1923) செயல் பாடுகள் முடிவுற்றன.

### இரண்டாவது பொதுத் தேர்தல்

சென்னை மாகாண சட்டமன்றத்திற்கான இரண்டாவது பொதுத் தேர்தல், 1923 செப்டம்பர் 11 அன்று நடைபெற்றது. நீதிக்கட்சியின் உட்கட்சிப் பூசலினால் முதல் பொதுத் தேர்தலைக் காட்டிலும் குறைவான இடங்களே நீதிக்கட்சிக்குக் கிடைத்தன. எனினும் ஆட்சி அமைக்கத் தேவையான பெரும்பான்மை நீதிக்கட்சிக்கு அமைந்திருந்தது.

### நீதிக்கட்சியின் இரண்டாவது அமைச்சரவை

நீதிக்கட்சியின் இரண்டாவது அமைச்சரவை 1923 ஆம் ஆண்டு நவம்பர் 19 ஆம் நாள் பதவியேற்றது. முதல் அமைச்சராகப் பனகல் அரசர் பொறுப்பேற்றார். சர்.ஏ.பி. பாத்ரோ இரண்டாவது அமைச்சராகவும், மூன்றாவது அமைச்சராக டி.என்.சிவஞானம் பிள்ளையும் பொறுப்பேற்றார்கள். நீதிக் கட்சியிலிருந்த அதிருப்தியாளர்கள் 1923 நவம்பர் 23-இல் அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தார்கள். அதனை அஞ்சாமையுடன் முதல்வர் பனகல்அரசர் எதிர்கொண்டு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் தோற்கடித்து வெற்றிபெற்றார்.

### சமஸ்கிருதத் மாநாட்டில் பங்கேற்பு

சமஸ்கிருதம் அறிந்த பண்டிதர்கள் முயற்சியில் மதுரையில் சமஸ்கிருத மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டிற்கு அன்றைய முதல்வர் பனகல் அரசரை விருந்தினராக அழைத்திருந்தனர். அவர்களின் அழைப்பையேற்று மாநாட்டில் சிறப்பு விருந்தி னராகப் பனகல் அரசர் கலந்து கொண்டார். நிகழ்ச்சிகள் அனைத்தும் சமஸ்கிருதத்திலேயே நடைபெற்றன. தமிழில் பேசுவதை எல்லோரும் திட்டமிட்டே தவிர்த்தனர், அமைச்சருக்கு சமஸ்கிருதம் தெரியாது என்று கருதினர் சொற்பொழிவாளர்களில் சிலர் பனகல் அரசரையும் அவரது ஆட்சியையும் விமர்சித்துப் பேசினர்.

நிறைவாக முதல்வர் பேசுவார் என்று அறிவிக்கப்பட்டது. பனகல் அரசர் பேசத்தொடங்கினார் தெளிவான சமஸ்கிருததில். அதுவரைப் பேசியவர் களைவிடச் சிறப்பாக இலக்கியச் செறிவோடு பேசினார். மாநாட்டு அமைப்பாளர்களுக்கு அவர் எம்.ஏ பட்டம் பயிலுங்கால் சமஸ்கிருதம் பயின்றவர் என்பதை உணராமல் பிழை புரிந்துவிட்டோமே என்று வருந்தினர். அவரை அவமானப்படுத்த எண்ணியவர்கள் அவமானப்பட்டு நின்றனர்.

### மருத்துவம் பயில சமஸ்கிருதம் தேவையா?

அந்த மாநாடு முடிந்த சில நாள்களில் ஓராணையைப் பிறப் பித்தார் முதல்வர்-பனகல் அரசர். அதுவரை மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து பயில சமஸ்கிருதமொழி தெரிந்திருத்தல் அவசியம் என்றிருந்த விதியை நீக்கி ஆணை பிறப்பித்தார்,.

ஆங்கிலத்தில் படிக்கும் மருத்துவக் கல்விக்கு சமஸ்கிருதம் எவ்வகையில் துணைபுரியும்? இலத்தீன் அல்லது கிரேக்க மொழிகளில் கலைச்சொற்கள் மிகுதியாக உள்ளன. அந்த மொழிகள் அறிந்திருந்தால் பயனுண்டு ஆனால் மருத்துவம் பயில சமஸ்கிருதம் கட்டாயம் தேவை என்று கூறுவதேன்,என்று முதல்வர் சிந்திக்கலானார்

சமஸ்கிருதம் அறிந்தவர்கள் மட்டும்தான் மருத்துவக் கல்வி படிக்கவேண்டும், மற்றவர்கள் படிக்கக்கூடாது என்ற வன்ம உணர்வே அதற்குக் காரணம் என்பதை அறிந்து கொண்டார் முதல்வர். அதனால் மருத்துவக் கல்லூரியில் பயில மாணவர்க்கு

சமஸ்கிருதம் மொழி அறிந்திருக்க வேண்டியதில்லை என்ற முடிவினை எடுத்தார். முதல்வரின் இந்த முடிவிற்கு அவாள் சார்பில் எதிர்ப்புகள் எழுந்தன. மருத்துவத் துறையில் தகுதி திறமை குறைந்து மருத்துவத்துறை பாழ்பட்டுப் போய்விடும் என்று கூப்பாடு போட்டனர். எதிர்ப்புகளைக் கண்டு அஞ்சாது சமஸ்கிருதமொழி பாடத்தினை மருத்துவக்கல்வியிலிருந்து விலக்கும் ஆணையைப் பிறப்பித்தார். அதன் விளைவாக, பிற்படுத்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், முஸ்லிம்கள், கிறித்தவர்கள் என அனைவரும் மருத்துவக் கல்வி பயிலும் வாய்ப்பினைப் பெற்றனர்.

### இந்திய மருத்துவப் பள்ளி

1-7-1924 இல் கான்பகதூர் முகமது உஸ்மான் சாயபு அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைத்தார் பனகல் அரசர். அக் குழு உஸ்மான் கமிட்டி என்றே அறியப்பட்டது. அதில் அன்னிபெசண்டு அம்மையாருக்கு உதவியாளராகவும் உற்றவராகவும் இருந்த சிறந்த மருத்துவர் கேப்டன் ஸ்ரீனிவாசமூர்த்தி (கன்னடர்) செயலாளராக இருக்க, வேறு சிலரும்குழுவில் உறுப்பினர்களாக இருந்தனர். இந்தக் குழு இந்தியா முழுதும் சுற்றி இந்தியமருத்துவ முறைகளைக் குறித்து ஆய்ந்தனர், கும்பகோணம் சிகாமணிப்பண்டிதர் வி.பொன்னு சாமிப்பிள்ளை, பண்டிதர் வேலுசாமிப் பிள்ளை, பண்டிதர் ஆனந்தம் ஆகியோர் சித்தமருத்துவம் குறித்து விளக்கம் தந்தனர், எழும்பூர் பாந்தியன் சாலையில் இந்திய மருத்துவப்பள்ளி தொடங்கப்பட்டது. சித்தமருத்துவ ஆசிரியராக சி.எஸ். முருகேச முதலியாரும், ஆயுர்வேதத் துறைக்கு .சங்குண்ணிமேனனும்(சமஸ்கிருதம், தெலுங்கில் வல்லவர்), மாதவமேனனும் ஆசிரியராக நியமிக்கப்பெற்றனர். கேப்டன் சீனிவாசமூர்த்தியே பள்ளியின் தலைவராக இருந்தார். இவ்வாறு1924 இல் இந்திய மருத்துவப் பள்ளி பனகல் அரசர் முயற்சியால் எழும்பூர் பாந்தியன் சாலையில் தொடங்கப்பெற்றது. பின் 1926இல் பனகல் அரசர்இந்திய மருத்துவப் பள்ளியை எழும்பூரிலிருந்து சென்னை, கீழ்பாக்கம், பூந்தமல்லிச் சாலையி லிருந்த அவரது சொந்த இடத்திற்கு மாற்றினார். இந்தப் பள்ளி, 1947 இல் கல்லூரியாகத் தரம் உயர்த்தப்பட்டு இந்திய மருத்துவக் கல்லூரி எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது, 1949 இல் இந்திய மருத்துவக் கல்லூரி என்ற பெயர், இணைப்பு மருத்துவக் கல்லூரி என்று பெயர் மாற்றபபட்டது.

**முதன்முதலாக சென்னையில் இந்திய மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்தி, அதற்காகக் கீழ்ப்பாக்கத்தில் இருந்த தனது சொந்த நிலமான ஹைட்பார்க் தோட்டத் தை இலவசமாகத் தந்தார் பனகல் அரசர். இன்று நாம் காணும் கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி அமைந்துள்ள வளாகம் முழுவதும், பனகல் அரசர் இலவசமாக தந்ததுதான்.**

### மருத்துவத் துறையில் மறுமலர்ச்சி

சென்னை மாகாண மருத்துவத் துறை ஆங்கிலேயர் ஆளுமையின் கீழ் இருந்தது. இந்தியர்கள் எவரும் நுழைந்திட வாய்ப்பில்லை என்ற நிலையில் பனகல் அரசர் ஒரு சட்டத்தை இயற்றி ஆங்கிலேயர் ஆதிக்கத்தை அகற்றி, இந்தியர்களை மருத்துவத்துறையில் பங்குபெறச் செய்தார். இதற்கான மசோதாவைச் சட்டமன்றத்தில் தாக்கல் செய்தார். அப்போது ஐரோப்பியர்களும் மற்ற எதிர்க்கட்சியினரும் எதிர்ப்புகளை வெளிப்படுத்தினர்.

"எதிர்ப்பு எங்கிருந்து வந்தாலும் அது இந்த நாட்டிற்கு நன்மை பயக்குமானால் எதிர்ப்பை வரவேற்கத் தயாராயுள் ளேன், தீமை விளைவிக்குமானால் அந்த எதிர்ப்பினை எதிர்த்து முறியடிப்பேன்", என்று பனகல் அரசர் மசோதாவின் மீது பேசினார். மருத்துவத் துறைக்கான மறுமலர்ச்சி மசோதா சட்டமாகியது.

### சென்னை பல்கலைக் கழகச் சட்டம்

சென்னைப் பல்கலைக் கழகம் 1857 ஆம் ஆண்டில் உருவாக்கப்படது. அப்பல்கலைக் கழகம் 1904 முதல் 1920 வரை பார்ப்பனிய ஆதிக்கத்தில் இருந்துள்ளது சமஸ்கிருதமொழி செம்மொழி அந்தஸ்தோடு மாணவர்க்குக் கற்பிக்க வழி செய்யப்பட்டிருந்தது. மற்ற இந்திய மொழிகள் கற்பிக்கவும்-திராவிட மொழிகளில் தமிழ் மொழி தவிர மற்ற மொழிகளைக் கற்பிக்கவும் வசதிகள் செய்யப்பட்டிருந்தன. ஆனால் தமிழ் மொழி கற்பிக்க வழியில்லை. தமிழ் மொழி, பல்கலைக்கழகத்தால் புறக்கணிக்கப்பட்டிருந்தது. டாக்டர் உ.வே.சாமி நாத ஐயர், தாய்மொழிக்குச் சிறப்பிடம் பெறுவதற்காக அதிக விலை கொடுக்க வேண்டிய அளவு முறைகேடு நடந்து இருக்கிறது,என்று வருத்தம் தோய்ந்த குரலில் குறிப்பிட்டுள்ளார்.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக்குழு தமிழ் மொழிப் பாடத்தைக் கட்டாயப் பாடமாக வைக்க மறுத்தது. இதனை எதிர்த்து நீதிக்கட்சி உறுப்பினர் இராஜரத்தின முதலியார் தீர்மானம் நிறைவேற்றிக் கண்டனம் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, செனட் உறுப்பினர்களை அதிகப் படுத்தியும், எல்லா வகுப்பினருக்கும்,பொது நிறுவனங்களுக்கும், கல்வி நிறுவனங்களுக்கும் பிரதிநிதித்துவம் இருக்கும்படியும், சென்னைப் பல்கலைக்கழகச் சட்டம் 1923 ஆம் ஆண்டு பனகல் அரசரால் நிறைவேற்றப்பட்டது. இதன் மூலம் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பிராமணர் ஆதிக்கத்திற்கு கடிவாளம் போடப்பட்டது.

ஆர்.வேங்கட ரத்தினம் நாயுடு, டி.என். சிவஞானம் பிள்ளை, எஸ்.முத்தையா முதலியார், டாக்டர். இலட்சுமணசாமி முதலியார் போன்ற பார்ப்பனரல்லாத அறிஞர்கள் செனட் உறுப்பினர் களாகிப் போராடித்தான் தமிழ் மொழி கற்பிப்பதற்கு வழிவகுத்தார்கள். 1927-1928 ஆம் ஆண்டிற்குப் பின்னர்தான் தமிழ் மாணவர் வித்வான் பட்டம் பெற முடிந்தது.

### அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தோற்றம் பெற்றது

1924-ஆம் ஆண்டில் ஆந்திரப் பல்கலைக் கழகச் சட்டம் நிறைவேறியது. அதனடிப்படையில் ஆந்திராவில் பல்கலைக் கழகம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, தமிழ்ப் பகுதிகளுக்கும் ஒரு பல்கலைக் கழகம் தேவை என்று உணரப்பட்டது. இதைப் பற்றி ஆராய்வதற்கு இராமநாதபுரம் ராஜாவின் தலைமையில் ஒரு

குழுவை அமைத்தார் பனகல் அரசர். பி.டி.இராசன் இக்குழுவின் செயலாளராகச் செயல்பட்டார். இக்குழுவின் பரிந்துரைப்படி அண்ணாமலைப் பல்கலைக் கழகம் உருவாயிற்று. இப்பணி பனகல் அரசர் ஆட்சிக்காலத்தில் தொடங்கி, பி.சுப்பராயன் ஆட்சிக்காலத்தில் 1929-1930 கல்வியாண்டில் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தோற்றம் பெற்றது.

### அற நிலையப் பாதுகாப்புச் சட்டம்

பனகல் அரசர் மிகத் துணிவுடன் செய்த செயல் அற நிலையப் பாதுகாப்புச் சட்டத்தை இயற்றியது ஆகும். இந்து மதத்திற்குச் சொந்தமான கோயில்களுக்கு நிலையான சொத்துக்களும் தினசரி பல கோடி வருமானமும் இருந்து கொண்டிருந்தன. இந்த வருமானங்கள் முழுக்க கோயிலில் உள்ள கோயில் பெருச்சாளி களுக்கு ஏகபோகச் சொத்தாக இருந்துள்ளன. அவர்களின் சுகபோக, ஆடம்பரங்களுக்கு இச்சொத்துகள் பயன்பட்டன. ஆக இவ்வண்ணம் கோயில் சொத்துக்கள் விரயமாவதைத் தடுத்திட பனகல் அரசர், அறநிலையப்பாதுகாப்பு சட்ட வரைவு 1922 டிசம்பரில் வெளியிடப்பட்டு, 1923 ஏப்ரலில் சட்டமன்றத்தில் முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்டது எனினும் சட்டமன்றத் தில் கடும் எதிர்ப்பு இருந்ததால் வைசிராயின் ஒப்புதல் கிட்ட வில்லை; சட்டம் இயற்றினாலும் செயல்படுத்த இயலவில்லை. ஆகவே மீண்டும் 1924 ஏப்ரலில் அறநிலையப் பாதுகாப்புச் சட்ட மசோதா கொண்டு வரப்பட்டபோது, சட்டமன்றத்தில் கடும் எதிர்ப்புக் கிளம்பியது. பிராமணத் தலைவர்கள் அனைவரும் ஒன்றுபட்டு மதத்தில் தலையிடுவதாகக் கூக்குரலிட்டனர். இந்து, சுதேசமித்திரன் ஏடுகள் இந்தச் சட்டத்தை எதிர்த்துத் தலையங்கங்கள் எழுதின. சட்டமன்றத்தில் சத்தியமூர்த்தி ஐயர் ஆவேசத்தோடு பேசினார். ''நீதிக்கட்சியினர் பிராமணர்களை மட்டும் எதிர்க்கவில்லை. கடவுளையும் எதிர்க்கக் கிளம்பி விட்டார்கள். மதத்தை அழிக்க முனைந்துவிட்டார்கள். ஆண்ட வனையே சட்டம் போட்டுக் கட்டுப்படுத்தும் அடாத செயலை எவரும் ஆதரிக்க மாட்டார்கள். மதத்தின் புனிதத் தன்மையைக் கெடுக்கும் இம்மசோதாவை சாதி, மத வித்தியாசமின்றி - கட்சிப் பாகுபாடு இன்றி ஒரு மனதாக எதிர்க்க வேண்டும்''. சத்திய மூர்த்தியின் பேச்சிற்கு வரவேற்பு இருந்ததாகச் சொல்லமுடியாது. பனகல் அரசர் எதிர்ப்புகளைப் பற்றிக் கவலைப்பட வில்லை. மசோதாவை நிறைவேற்றுவதிலேயே கருத்தாக இருந்தார்.

சட்டமன்றத்தில் இம்மசோதாவை நிறைவேற்றத் தமக்குத் துணையாக என்.கோபாலசாமி ஐயங்காரைச் சிறப்பு உறுப்பினராக நியமித்துக் கொண்டார். பனகல் அரசர் வைசிராய் இர்வினுடன் வாதாடவும் செய்தார். அற நிலையப் பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டுத் துறை அமைக்கப்பட்டவுடன் அதன் முதல் தலைவராக ஓய்வுபெற்ற சென்னை உயர் நீதிமன்றத்தின் நீதிபதியாக இருந்த சர்.டி.சதாசிவ ஐயரை நியமித்தார். இரு ஐயர்கள் துறையை நிர்வகிக்க நியமித்ததும் மதத்திற்கு ஆபத்து என்ற அபவாதத்தைப் போக்கியது. 1925 சனவரி 27 இல் வைஸ்ராய் ஒப்புதல் பெற்று, சட்டம் செயலுருப் பெற்றது.

அறநிலையப் பாதுகாப்புச் சட்டம், இந்து மதவாதிகளின் கடும் எதிர்ப்புகளுடன் நிறைவேறியபின்னர், 1926 நவம்பர் 8ஆம் நாள் மூன்றாவது தேர்தலை சந்தித்தார் பனகல் அரசர்.

ஜஸ்டிஸ் மந்திரிகள் வந்த பிறகு, நமது மாகாணத்தில் இலவசக் கல்வியும், கட்டாயக் கல்வியும் ஏற்பாடு செய்து அநேக இடங்களில் அமலில் கொண்டு வந்திருக்கிறார்கள். 5 வயது முதல் 12 வயது வரை ஒவ்வொரு குழந்தையையும் கண்டிப்பாய்ப் படிக்கவைக்கவேண்டும். இல்லாவிட்டால் பெற்றோர்களுக்குத் தண்டனை என்று சட்டமும் செய்திருக்கிறார்கள். அதன் மூலம் படிக்கும் இலட்சக்கணக்கான பிள்ளைகளில் 100 க்கு 99 பேர் பார்ப்பனரல்லாதார் என்று பனகல் அரசரின்-(நீதிக்கட்சியின்) சாதனைகளைப் பெரியார் வெளியிட்டுப் பரப்புரை ஆற்றிய போதும் நீதிக்கட்சி பெரும்பான்மை பெற இயலவில்லை.

41 இடங்களைப் பெற்றது சுயராஜ்யக் கட்சி. சுயேச்சைகள் 36 இடங்களையும், நீதிக்கட்சியினர் 21 இடங்களையும் பெற்றனர். அரசு அலுவலர்களும், நியமன உறுப்பினர்களுமாக 30 பேர்களும் அவையை அலங்கரித்தனர். தனிப் பெரும்பான்மை எவருக்கும் இல்லை. ஆளுநர் சுயராஜியக் கட்சியினரை ஆட்சியமைக்க அழைத்தார். அவர்கள் மறுத்துவிட்டனர். பின் பனகல் அரசரை அழைத்தார் ஆளுநர். பெரும்பான்மை யில்லாமல் ஆட்சியமைக்கத் தாம் விரும்பவில்லை என்றார். பனகல் அரசர். அதன் பின் சுயராஜியக் கட்சியினர், நீதிக்கட்சி யிலிருந்து பி. சுப்பராயனை விலகச்செய்து, அவர் தலைமையில் சுயேச்சைகள் அமைச்சரவை அமைத்தனர். இந்த அமைச்சரவை சுயராஜியக் கட்சியினரின் எதிர்பார்ப்புக்கு எதிராக நீதிக்கட்சி சார்பாகவே, பனகல் அரசரின் ஆலோசனைகளைப் பெற்று இயங்கியது.

இவ்வண்ணம் நாளும் பார்ப்பனரல்லாதார், பிற்படுத்தப் பட்டோர். ஒடுக்கப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் நலனையே கருத்தில் கொண்டு எந்நாளும் உழைத்துவந்த பெருமகன் பண்பாளர் பனகல் அரசர் 1928 ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள் 16 ஆம் நாள் மண்ணுலக வாழ்வை நீத்தார்.

### பெரியார் இரங்கல்

தந்தை பெரியார், தேடற்கரிய ஒப்புயர்வற்ற நமதருமைத் தலைவர் மறைந்தார்! எனினும் மனமுடைந்து போகாதீர் என்று, பனகல்ஆற்றிய பெரும்பணிகளை நினைவு கூர்ந்தார். போர்க்களத்தில் வெற்றியை நெருங்கிக் கொண்டிருக்கும்போது திடீரென்று படைத்தளபதி இறந்தால் எப்படியிருக்குமோ அதுபோல, பார்ப்பனரல்லாத மக்களுக்கு சிறப்பான முன்னேற்றப் பணிகள் புரிந்து கொண்டிருந்த நேரத்தில் பனகல் அரசரின் இறப்பு நடந்துவிட்டது என்றும், பனகல் அரசர் தனது தனிப்பட்ட திறமையாலும் ராஜதந்திரத்தாலும் பார்ப்பனரல்லாத மக்களுக்கு உழைத்து வந்தார். இனி அவரைப்போல ஒரு தலைவர் கிடைப்பாரா என்பது சந்தேகம் தான். இருப்பினும் நாமெல்லாம் அவர் விட்டுச் சென்ற பணிகளை நிறைவேற்றத் தயாராக வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

**அவர் விட்ட பணியைத் தொடர்வோம் நாம்!**
**வாழ்க பனகல் அரசர் புகழ்!**

# மோடியின் புல்லட் தொடர் வண்டித் திட்டம்

## மோசடித்தனமான ஊதாரித்தனத்தின் உச்சம் தொடும் திட்டம், முற்றிலும் கைவிடப்பட வேண்டும்

இரா. பச்சமலை

ஒரு நாட்டின் வளர்ச்சியில் மிகவும் முதன்மையான பங்குவகிப்பது போக்குவரத்துத் துறை நிலவழியில் சாலைகள் மூலம் பல்வகை உந்துகள், தொடர்வண்டிப் பாதைகள் மூலம் பயணிகள், சரக்குத் தொடர் வண்டிகள், நீர் வழி மூலம் பயணிகள், சரக்குக் கப்பல்கள், வான்வழியில் பயணிகள், சரக்குக்கான வானூர்திகள் என பல்வகைப் போக்குவரத்து முறைகள் உள்ளன. இவற்றுள் தொடர்வண்டித்துறை நாட்டின் அனைத்து மக்களுக்கும் இன்றியமையாத தேவைகளை நிறைவு செய்ய வேண்டிய மிக முக்கியமான ஒன்றாகும். அதாவது குறிப்பாக நாட்டுக்கு அடிப்படைத் தேவையான அனல் மின் உற்பத்திக்குத் தேவையான நிலக்கரி போக்குவரத்தில் பெரும்பங்கு வகிக்கின்றது, விவசாயத்திற்கு வேண்டிய உரங் களை, வேளாண் விளைபொருள் ளை நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு எடுத்துச் செல்வதற்குச் சரக்குத் தொடர் வண்டிகள் தான் பெரும்பாலும் பயன்படுத்தப் படுகின்றன.

இன்னும் பல்வகைச் சரக்குகளை நாடெங்கும் எடுத்துச் செல்வதற்கும் தொடர்வண்டித் துறையின் பங்கு மிகவும் முக்கியமானது. பெரும்பாலான மக்கள் பயணங்கள் மேற் கொள்வதற்கும் தொடர் வண்டிகள் மிகவும் தேவை. இவ்வாறான வெகுமக்கள் தேவைகளை நிறைவு செய்கின்ற வகையில் நம் நாட்டின் தொடர் வண்டித் துறை வளர்ச்சி கண்டிருக்கின்றதா? நாடு விடுதலையடைந்ததிலிருந்து 71 ஆண்டுகளில் பெருகி யுள்ள மக்கள் தொகைக்கு ஈடாக இத்துறை வளர்ச்சி பெற்றுள்ளதா? என்ற பெரு வினாக்களுக்கு எதிர்மறையான விடைதான் என்பதுதான் தொடர்வண்டித் துறையின் தற்போதைய உண்மை நிலை, இன்னும் விரிவாகக் கீழே பார்க்கலாம். இதை உறுதி செய்யும் வகையில் சென்ற நான்காண்டுகளுக்கு முன் நாட்டின் திட்டக்குழுத் துணைத் தலைவராக இருந்த மான்டெக் சிங் அவுவாலியா அனைத்து மாநிலங்களுக்கும் நாட்டின் போக்குவரத்துத் துறை நிலையை பற்றி எழுதிய கடிதத்தின் தொடக்க வரியிலேயே தொடர் வண்டித் துறை வளர்ச்சியைக் குறிப்பிடும் போது அது குறிப்பிடத்தக்க எந்த வளர்ச்சியுமின்றி படுபாதகமான நிலையில் உள்ளது எனச் சுட்டியிருந்தார். அது சென்ற பத்தாண்டு பா.ச.க. ஆட்சியில் இன்னும் மோசமடைந்துவிட்டது.

இந்தப் பின்னணியில் 2016 இறுதிவாக்கில், குசராத்-அகமதாபாத்-மகராட்டிர-மும்பை இருநகரங்களுக்கு இடையி லான 500 கி.மீ. தொலைவுக்கு ரூ.96,000 கோடிச் செல வில் ‘புல்லட் தொடர் வண்டி’ப் பாதை தனியாக அமைக்கப் பட்டு அவ்வழிக்கெனத் தனித் தொடர் வண்டி இயக்கப்படும் என மோடி அறிவித்தார். இதற்குச் சப்பான் நிதி அளிக்கும் என்றும் தெரிவித்தார். அதன் தொடர்ச்சியாக ஓராண்டு கழித்து 2018-19க்கான நடுவணரசு நிதிநிலை அறிக்கை நாடாளு மன்றத்தில் வைக்கப்படும் போது ‘புல்லட்’ திட்டம் ரூ.1.25 இலட்சம் கோடிச் செலவில் மேற்கொள்ளப்படும் என்றும் அதற்கான ஆய்வு கள் விரைவில் தொடங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

ஒரு திட்டம் அறிவிக்கப்படும் போது அதற்கான அடிப்படைத் தேவைகள், அதன் குறிக்கோள்கள் (Object of the Scheme/ Project) பயன்பாடுகள், பலன்கனள் என அடிப்படையான விவரங்கள் குறிப்பிடப்பட வேண்டும். ஆனால் ‘புல்லட்’ திட்டத் திற்கான மதிப்பீடு, நிதிக்கான வழிவகைகள், திட்டத்தின் சிறப்பு இயல்புகள் என பயண நேரம் 2.30-3.00 மணியளவுக்குள்ளாக இருக்கும் என்றும், உயர்ந்த சிறப்பு வசதிகள் வண்டியின் பெட்டிகள் கொண்டிருக்கும் என்றும், பலவாறு பெரிதும் விவரிக்கப்பட்டது. இத்தொடர் வண்டி இணைப்பு வளர்ந்த நாடுகளுக்கு இணையான தன்மையில் அமைக்கப்படும் என்பதாகத்தான் சொல்லப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் தேவை குறித்து விரிவாகப் பேசப்படவில்லை. இது எந்தத் தட்டு மக்களுக்கு எந்தளவுக்கு குறுகிய கால, நெடுங்கால பயன்களை, பலன்களை அளிக்கவல்லதாக திட்டமிடப்பட்டுள்ளது என்ற இன்றியமையா விவரங்கள் விரிவாகச் சொல்லப்படவில்லை. ஆனால் வளத்துடனும், வனப்புடனும் வாழும் மேல்தட்டு மக்களான சில ஆயிரம் மக்களின் பெரும் மகிழ்வான பயணத்திற் கானது இத்திட்டம் என்று மட்டும் வெளிப்படையாகத் தெரிகின்றது.

இந்தப் பின்னணியில் திட்ட மதிப்பீட்டை ஆய்வுக்குட் படுத்த வேண்டும். 2016 அறிவிக்கப்பட்ட போது இது ரூ.96,000 கோடி அளவு எனச் சொல்லப்பட்டு ஓராண்டுக்குள் 2018 தொடக்கத்தில் ரூ.1.25 இலட்சம் கோடி என ஆகியுள்ளது. திட்டக்காலம் குறைந்தளவு 5 அல்லது 6 ஆண்டுகளுக்குக் குறைவாக இருக்க முடியாது. இந்த இடைவெளியில் தொடர் பணவீக்க மிகுதியால் திட்ட மதிப்பு இரண்டு மடங்கு உயர்ந் தாலும் வியப்படைவதற்கில்லை. அந்த நிலையின் திட்ட மதிப்பு ரூ.2.50-3.00 இலட்சம் கோடியைத் தொட்டுவிடும். நடுவணரசின் நடப்பு ஆண்டு வரவு-செலவு மதிப்பு ரூ.22 இலட்சம் கோடியிலிருந்து ரூ.35-40 இலட்சம் கோடியாக உயர்ந்துவிடுவதாகக் கொண்டால், திட்டத்திற்குச் சராசரியாக ஆண்டுச் செலவு திட்டக்கால ஒவ்வொரு ஆண்டு வரவு செலவுத் தொகையில் 1.5 விழுக்காடு வரை ஆகலாம். அப்படியெனில் தற்போது ஆண்டுக்கு 15-20 விழுக்காடு அளவில் பாதுகாப்புக்கு ஒதுக்கீடு செய்யப்படுவது ஒருபோதும் வரும் ஆண்டுகளில் குறையப் போவதில்லை; மேலும் மேலும் உயரத்தான் செய்யும். இந்நிலையில் திட்டக் காலமான அய்ந்தாறு ஆண்டு ஒவ்வொன்றிலும் வெகுமக்கள் சார் மக்கள் நலத் திட்டங்க ளான கல்வி, மருத்துவம் இப்போது பெற்றுவரும் குறைந்த அளவு (உள்நாட்டு மொத்த உற்பத்தி மதிப்பில் முறையே <3%, 1%) ஒதுக்கீடும் மேலும் மேலும் வெட்டப்பட்டு குறைக் கப்படும். இதே நிலைதான் வெகுமக்கள் சார்ந்த வேளாண் நெசவுத் தொழில்களுக்கும் ஏற்படும். மொத்தத்தில் ஏழை,

எளிய மக்கள் நலன்கள் காற்றில் பறக்க விடப்பட்டு இன்னலுக் குள்ளாக்கப்படுவார்கள்.

இத்திட்டம் சப்பானிடமிருந்து மிகக் குறைந்தளவு வட்டிக்கு கடன் உதவித் தொகை பெற்றுத்தான் செயல்படுத்தப்பட விருக்கின்றது என்று இந்துப் பா.ச.க. அரசு சப்பக்கட்டுச் சொல்கிறது. உண்மையிலேயே மக்கள் பற்றுள்ள அரசெனில் வெகுமக்கள் நலம் சார்ந்த திட்டங்களுக்குச் செலவிட வேண்டும். மாறாக வெகுமக்கள் நலன்கள் புறக்கணிக்கப்பட்டு வளமான மேல்தட்டு மக்களுக்காக இந்த ஒரு திட்டத்திற்கு மட்டும் 4 இலக்கம் கோடி ரூபாய்கள் செலவிட முற்படுவது ஒட்டுமொத்த நாட்டு நலனுக்கு விளைவிக்கப்படும் வஞ்சகம் அல்லவா?

இவ்வாறெல்லாம் ஊதாரித்தனமாகத் தொடர் வண்டித் துறைக்கு செலவிட முற்படுகின்ற இத்துறையின் உண்மை நிலையை மான்டேக் சிங் அலுவாலியா சொன்ன கருத்தின் பின்னணியில் பார்ப்போம். ஆங்கிலேயன் 1947இல் வெளி யேறிய போது 60,000 கி.மீ. அளவுக்கு இருந்த தொடர் வண்டிப் பாதை விடுதலை பெற்ற 71 ஆண்டைய இந்தியாவில் வெறும் 10,000 கி.மீ. அளவுக்கு மட்டுமே புதிய பாதைகள் அமைக்கப்பட்டுள்ளது. ஒப்புமையில் சமகாலத்தில் சீனா கிட்டத்தட்ட இரண்டு இலக்கக் கிலோ மீட்டர் அளவுக்குப் பாதைகள் அமைத்து நாட்டின் அனைத்துப் பகுதிகளையும் தொடர்வண்டிப் பாதைகளால் இணைத்துள்ளது. மக்கள் நெருக்கம் அதிகமாகக் கொண்ட நாட்டுக்கு ஏற்ற போக்குவரத்து தொடர் வண்டிப் பாதை தான் என்பதை வெகுமக்கள் நலன் கருதி உணர்ந்து அங்கு இலக்கக் கணக்கு கிலோ மீட்டரில் தொடர் வண்டிப் பாதைகள். ஆனால் தொடர்வண்டிப் பாதை வளர்ச்சியே இல்லாது பெரும் பகுதி தொடர் வண்டி இணைப்பே இல்லாது இந்தியாவில் உள்ள பொருளியல் வல்லுநர்களே, மேம்போக்காக பயணி, சரக்குத் தொடர் வண்டிகள் பெருகியுள்ளன பாதைகள் இருவழிகளாக ஆக்கப்பட்டுள்ளன, மின்மயமாக்கப்பட்டுள்ளன எனத் துதிபாடிக் கொண்டிருப்பது அறியாமை; வெகுமக்கள் மீதான அக்கறையின்மை என்பதைக் காட்டுகிறது. இது கடும் கண்டனத்துக்குரியதாகும்.

இத்திட்டத்தின் தேவையை அரசு விரிவாக, வெளியிடாத நிலையில் இது வெற்றுத் தம்பட்டத்திற்கானதுதான் என்பதுடன், உண்மையில் இது முற்றிலும் தேவையற்றது என்பதற்கான காரணங்கள். கீழே மும்பை, அகமதாபாத் இடையே பற்பல வழிகளில் உயர்தரமான பலவகைச் சாலைகள், பல்லாயிரக் கணக்கில் பல்வகை பேருந்துகள், மகிழுந்துகள் மற்றும் எண்ணி லடங்காத சரக்குந்துகள், பலப்பல சிறப்பு விரைவுத் தொடர் வண்டிகள், சரக்குத் தொடர் வண்டிகள் கணக்கிலடங்கா பல்வேறு வானூர்திகள்.

இவையெல்லாம் அனைத்துத்தர மக்களின் பயணத் தேவைகளை நிறைவு செய்வனவாக உள்ளன. இரு பெரு நகரங்களும் தொழில் மயமானதால் அனைத்து மக்களின் தேவைக்கான உற்பத்திப் பொருள்கள் எடுத்துச் செல்லப்படு கின்றன. ஆனால் புல்லட் வண்டிகள் வெறும் மூன்று, நான்கு நகரங்களில் மட்டும் நிற்பவை. முற்றிலும் குளிரூட்டப்பட்ட சிறப்பு வசதிகள் கொண்டவை. பயணக் கட்டணம் பல ஆயிரம் ரூபாய்கள். நடுத்தர, எளிய மக்கள் எண்ணிப் பார்க்க முடியாத கட்டணம். எனவே அவர்கள் முற்றிலுமாக புறக்கணிக்கப்படும் வகையான திட்டம். ஆனால் இது முழுமையுமாக பெரும் வளம், வசதி படைத்தோர் மட்டும் பயணிப்பதற்கான தொடர் வண்டிகள். எனினும் இவர்களுக்குப் பாய்ச்சலுடன் வளர்ந்து வரும் வானூர்திகள், புல்லட் தொடர் வண்டிகளின் மூன்று மணிநேரப் பயண நேரத்தை வெறும் 45 மணித்துளி நேரத்தில் கடக்கக் கூடிய ஒப்பீட்டளவில் குறைந்த அளவு கட்டணத்தில் கிடைக்கும் ஏற்ற மாற்றுப் பயணமாக இருக்கும். காட்டுக்குச் சொன்னால் சென்ற அக்டோபர் திங்களில் மட்டும் வானூர்திப் பயணம் மேற்கொண்டோர் 1.18 கோடிப்பேர் எனவே இரண்டு, மூன்று இலட்சம் கோடி ரூபாய்கள் எனப் பெரும் செலவில் அமைக்கப்படும் ‘புல்லட்’ திட்டம் மிகப்பெரும் தோல்வியாக முடியும். இது வளர்ந்த மேலை நாடுகள் அமெரிக்கா, சப்பான், சீனா போன்ற நாடுகள் இவ்வாறான சிறப்புத் தொடர் வண்டி களை இயக்குகின்றன என்ற போட்டி மனப்பான்மையில் புலியைப் பார்த்துப் பூனையும் சூடு வைத்துக் கொண்டது என்ற சொற்றொடர்களுக்கு ஒப்ப மோடி ஊதாரித்தனமாக பல இலக்கம் கோடி ரூபாய்களை வீணடிக்கும் வகையில் வெற்றுத் தம்பட்டத்திற்காகவும் பெருமைக்காகவும் இப்‘புல்லட்’ திட்டத்தை முன்மொழிகிறார் மோடி.

இதுபோன்ற திட்டங்களைச் செயல்படுத்தி இந்திய நாடு பொருளாதார வளர்ச்சி பெற்று வருகிறது எனப் பொய்யுரை கூறப்பட்டு வருகிறது. அடிப்படையில் இந்த வளர்ச்சி யாருக் கான வளர்ச்சி என்ற வினா எழுகின்றது. உண்மை நிலை என்ன? நாட்டின் 30% மக்கள் - 35 கோடி மக்களுக்குமேல் வறுமைக்கோட்டுக்குக்கீழ் வைக்கப்பட்டுள்ளனர். இன்னும் கொடுமை இதில் சரி பாதிப்போர் - 15 கோடிப் பேருக்கு நாளுக்கு ஒருவேளை உணவு மட்டுமே என்ற இழிநிலை. மக்கள் மருத்துவத்திற்கு ஆண்டுக்கு உள்நாட்டு மொத்த உற்பத்தி மதிப்பில் வெறும் ஒரு விழுக்காடு அளவில்தான். இதிலும் நாட்டின் 135 கோடி மக்களுக்கான சேவைத் துறையாக விளங்க வேண்டிய மருத்துவம் வணிகமயமாக்கப்பட்டு தனியார் கையில்தான் செல்வம் கொழிக்கும் தொழிலாக மாற்றப்பட்டு நாட்டிலுள்ள 600 மருத்துவக் கல்லூரிகளுள் 200 மட்டுமே அரசுக்கானவை. 400க்கும் மேற்பட்டவை தனி நிதிக் கல்லூரிகள் என்ற நிலை. இதையடுத்து நாட்டின் படிப்பறிவு நிலை-25 விழுக்காடு மக்கள் தற்குறியாகவே வைக்கப்பட்டுள்ளனர். இதில் இன்னும் இழிநிலை என்ன வெனில் 50 விழுக்காடு பெண்கள் தற்குறியாக வைக்கப் பட்டுள்ளனர். குறிப்பாக உத்திரப்பிரதேசத்தில் 80-90 விழுக்காடு பட்டியல்குலப் பெண்கள் படிப்பறிவற்றவர்களாக வைக்கப்பட்டுள்ளனர். இதில் பெரும் அவலம் மக்களுக்கான சேவையாக விளங்க வேண்டிய கல்வி முற்றிலும் தனியாரின் வணிகத் தொழிலாக மாற்றப்பட்டு அரசு கல்வி தருவதிலிருந்து தன்னை முழுமையாக விடுவித்துக் கொண்டு வருகின்றது. இதற்குக் காட்டாக நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகளில் 10 இலட்சத்திற்கும் மேலான அனுமதிக்கப்பட்ட ஆசிரியர் பணி இடங்கள் காலியாக உள்ளன.

இரண்டு கோடி மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும் எனத் தேர்தல் வாக்குறுதியை தந்துவிட்டு சென்ற அய்ந் தாண்டு பாரதிய சனதா கட்சி ஆட்சியில் வேலை வாய்ப்பு வளர்ச்சியே இல்லை என்பதுடன் எதிர்மறையாக அருகிக் கொண்டே வருகின்றது. 70-80 கோடி மக்கள் வேளாண் துறை சார்ந்து வாழும் நாடான இந்தியாவில் வேளாண் தொழில் நசுக்கப்பட்டு உழவர்கள் வதைக்கப்படுகின்றனர். பல இலக்கத்தில் விவசாயிகள் தற்கொலை செய்து கொள்கின்றனர்.

மக்கள் மேம்பாடு அடைவதற்கான எல்லாப் பொறுப்பு களிலிருந்து அரசுப் பங்களிப்பு அற்றுவரும் சூழலில் நாடு வளர்ச்சிப் பாதையில் அதாவது 6-7 விழுக்காடு வளர்ச்சி என ஓலமிடுவது வெறும் வெற்றுக் கூச்சல் என்பதுடன் உலகையும் மக்களையும் மனமறிந்து வஞ்சகமாக ஏமாற்றிக் கொண்டு வருவதுதான் மோடி அரசு. எனவே பல இலக்கம் கோடி ரூபாய்கள் மதிப்பீட்டில் முன்மொழியும் 'புல்லட்' திட்டத்தைக் கைவிட்டுவிட்டு மக்களின் குறிப்பாக அடித்தட்டிலுள்ள ஒடுக்கப் பட்டுள்ள பாட்டாளி, உழைப்பாளி, உழவர்கள், நெசவுத்துறைத் தொழிலாளர் போன்றோரின் மேம்பாடான வாழ்க்கையை உறுதிப்படுத்துவதை அடிப்படையாகக் கொண்ட திட்டங்கள் வகுத்து செயல்படுத்த வேண்டும். அந்த வளர்ச்சியைத்தான் நாட்டின் உண்மையான வளர்ச்சி என்று சொல்ல முடியும். எனவே இவர்கள் வளர்ச்சி எனச் சொல்லிவரும் 'புல்லட்' திட்டம் போன்றவை உண்மையானதல்ல; அது வளமானோரை வளப்படுத்தும் வெறும் பொருளாதார வீக்கமே.

**இந்த ஊதாரித் திட்டத்திற்கு மாற்றாக மக்கள் நலனுக் கான திட்டங்கள்**

வெகுமக்களின் நலன்களைப் புறக்கணித்து ஊதாரித் தனமாக மேற்கொள்ளப்படுவதன்றி கி.மீட்டருக்கு ரூ.300 கோடிக்கு மேல் என 500 கி.மீ. தொலைவிற்கான மும்பை-அகமதாபாத் 'புல்லட்' திட்டம் அய்ந்தாறு ஆண்டுகள் கழிதது நிறைவுறும் நிலையில் ரூ.2.50-3.00 இலக்கம் கோடி செலவு செய்து உருப்படாது போவதற்குப் பதிலாக இத்திட்டத்தைக் கைவிட்டு நாட்டின் பெறும் 70000 கி.மீ. அளவிலேயே உள்ள தொடர்வண்டிப் பாதைகளை விரிவுபடுத்தும் வகையில் கி.மீட்டருக்கு ரூ.30-40 கோடி அளவில் செலவிட்டு கிட்டத் தட்ட 5000-6000 கி.மீட்டருக்கு தொடர்வண்டிப் பாதைகள் அமைத்து குறைந்த அளவிற்கு மாநிலந்தோறும் மாவட்டத் தலைநகர்களை இணைத்திட முடியும். இது முற்றிலம் வெகு மக்களின் நலன் சார்ந்ததாகும். இதனால் பயணிகள், சரக்குத் தொடர்வண்டிகள் போக்குவரத்து பெருகி அனைத்து மக்கள் நலன்களுக்குமாக அமையும்.

இவ்வளவு பெரும் செலவுடன் ஒரே காலக்கட்டத்தில் தொடர்வண்டிப் பாதை மேற்கொள்ளப்படுவதில் இடர்பாடுகள் இடையுறலாம். அதனால் முதல்கட்டமாக இரண்டாயிரம் மூவாயிரம் கி.மீ. தொலைவு பணிக்கான தொகையை ஒதுக்கிவிட்டு வெகுமக்கள் நலன்சார்ந்த ரூ.250-ரூ.350 கோடி செலவே பிடிக்கும் அரசு மருத்துவக் கல்லூரிகள், மருத்துவமனைகள் என 300 முதல் 400 வரை அமைத்து தற்போதுள்ள வெறும் 200 அரசு மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கையைப் பெருக்கலாம்.

பெருமளவு செலவிலான ஒரே வகையான திட்டங்கள் மேற்கொள்வதில் சிக்கல் ஏற்படுமெனக் கருதினால் ஏழை எளிய வெகுமக்களின் கல்வி மேம்பாட்டுக்கென ஒரு பள்ளிக் கூடம் அமைப்பதற்கு 1, 2, 3, 4, 5 (அ) 6 கோடிச் செலவு என்ற அளவில் பல்லாயிரம் அரசு பள்ளிகள் தொடங்கலாம். இதுபோன்ற வெகுமக்கள் நலன் சார்ந்த பணிகளுக் கெனவும் ஒதுக்கீடுகள் செய்யப்படலாம்.

இவ்வாறான பல்வகைத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப் படுவதால் வெறும் 500 கி.மீ. 'புல்லட்', தொடர்வண்டி அமைக்க அந்தப் பகுதிக்கு மட்டும் என்று குவிக்கப்படும் 3-4 இலக்கம் கோடி ரூபாய் விரையமாக்கப்படுவதைத் தவிர்க்கப் படுவதன்றி. இத்திட்டச் செலவுகள் முற்றிலும் பெருந்திரளான பன்னாட்டு நிறுவனங்கள் கொள்ளை கொள்வதற்காக என்றாகிவிடும் என்பதாலவும் பணிகள் மேற்கொள்வதைத் தடுத்தும், வேலை வாய்ப்புகள் ஒரே பகுதியில் குவிந்துவிடும் என்பதையெல்லாம் தவிர்த்து நாடெங்கிலும் பரவலாக வெகு மக்கள் நலன்கள் பேணப்படும் என்பதுடன் அனைத்து தர, வகை மக்களுக்கும் வேலை வாய்ப்புகள் பரவலாக்கப்படும்.

இக்கொடூரமான ஊதாரித்தனத்தின் உச்சம் தொடும் மோடியின் கேடு கெட்ட 'புல்லட்' திட்டம் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அதனை எதிர்த்து எதிர்வினை பெயரளவில்தான் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தென்படுகின்றது. ஆனால் இத்திட்டம் முற்றிலும் ஒழிக்கப்பட்டு கைவிடப்பட வேண்டிய திட்டம் என்பதை ஆழச் சிந்தித்தால் அனைவரும் உணரலாம்.


எனவே வெகுக்களுக்கெதிரான இத்திட்டத்திக்கெதிராகப் பொதுவுடைமைக்கட்சிகள் உள்ளிட்ட அனைத்து இடதுசாரிக் கட்சிகள், அமைப்புகள், இயக்கங்கள், வெகுமக்கள் நலன் நாடும் அரசியல் நோக்கர்கள், அச்சு, காட்சி ஊடகங்கள் என அனைத்தும் ஒரே குடையின் கீழ் ஒன்றிணைந்து இத்திட்டம் ஒழிக்கப்படவேண்டுமென்ற ஒற்றைக் குறிக்கோளை இலக்காகக் கொண்டு போராட்டத் திட்டங்கள் வகுத்து செயல்பட்டு மோடியின் அரசுக்கு கடும் நெருக்கடி தந்து இத்திட்டம் உடனடியாகக் கைவிடப்படுவதற்கு எந்த விலையும் கொடுக்கு மளவுக்கு அனைவரும் அணியமாவோம்.

## வாழ்க்கைத் துணைவர் தேவை

| | | |
|---|---|---|
| பெயர் | : | **த.அ.அருணா** |
| பிறந்தநாள் | : | 30.10.1993 |
| கல்வி | : | எம்.ஏ ஆங்கில இலக்கியம் |
| உயரம் | : | 5 அடி 4 அங்குலம் |
| பணி | : | தனியார்துறை |
| வருவாய் | : | ரூ.25,000/- |
| தந்தை | : | து. தங்கவேல் |
| தாய் | : | மகேசுவரி |
| இருப்பிடம் | : | சென்னை |
| தொடர்பு எண் | : | **9940070451** |

குறிப்பு : பகுத்தறிவாளரகாவும், சுயமரியாதைத் திருமணம் செய்து கொள்பவராகவும் இருத்தல் வேண்டும்.

# என் இளமைக்கால நண்பரும் திரைப்பட இயக்குநர் கௌதமனின் தந்தையுமான பாளையம் அ. வடமலை மறைந்தார்!



தொழுதூரிலிருந்து விருத்தாசலம் போகிற கடலூர் நெடுஞ்சாலையில், தொழுதூருக்குக் கிழக்கே பாளையம் என்கிற சிற்றூர் இருக்கிறது. பாளையத்தில் அரியமுத்து-அலமேலு என்னும் இணையருக்கு 28-10-1934இல் மகனாகத் தோன்றியவர் கௌதமனின் தந்தை வடமலை அவர்கள்.

பாளையத்திலிருந்து நேர் கிழக்கே, அதே சாலையில், ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது இடைச் செருவாய். அவ்வூருக்குப் போக, 10-11-18 சனி அன்று சுமையான பையுடன் நடந்து சென்ற வடமலையை-அவ்வழியே இருசக்கர வண்டியில் சென்றவர் ஏற்றிக்கொண்டார்; ஏறியவுடன் இரண்டு கால்களையும் இரண்டு பக்கமும் போட முயன்றிருக்கிறார் வடமலை; அப்போது நிலைகுலைந்து சாலையில் மல்லாந்து விழுந்து விட்டார்; மண்டையின் பின்புறத்தில் நல்ல அடிபட்டுவிட்டது.

அக்கம் பக்கம் இருந்தவர்கள் திட்டக்குடியில் மருத்துவ மனையில் சேர்த்திருக்கிறார்கள்; பிறகு திருச்சியிலும் அங்கிருந்து புதுச்சேரியில் ஜிப்மர் நேரு மருத்துவ மனையிலும் வைத்தியம் தரப் பெற்றார்.

அந்தோ! எந்த வைத்தியமும் பயன்படாமல், 20-11-2018 செவ்வாய் அன்று வடமலை அவர்கள் மறைவுற்றார். 21-11-2018 அன்று அவர் பிறந்த பாளையத்தில் இறுதி வணக்க நிகழ்ச்சி நடந்தது.

எனக்கும் அவருக்கும் எப்படித் தொடர்பு?

நான் வடக்கலூர் அகரம் என்கிற ஊரில் என் தாய் வழிப் பாட்டி வீட்டில் 1933-1942 வரையில் தங்கிப் படித்தேன். என் பாட்டி பிறந்த ஊர் இடைச்செருவாய்.

1946க்குப் பிறகு, கோடை விடுமுறைதோறும், இடைச்செருவாய்க்குப் போவேன். அங்கிருந்து பாளையம், ஆக்கனூர், அரங்கூர், இராமநத்தம் முதலான ஊர்களுக் கும் போவேன். அப்போது முதல் வடமலையின் வீட்டில் அவருடைய தாயார் அலமேலு எனக்கு உணவு, தின்பண்டம் தருவார்.

பிறகு, அப்பகுதியில் நடக்கும் வன்னியர் சங்கக் கூட்டங்கள், திராவிடர் கழகக் கூட்டங்களில் நான் பேசுவேன். மேலே கண்ட ஊர்களைச் சேர்ந்த என் உறவினர்களும் இளைஞர்களும் என் பேச்சைக் கேட்க வருவார்கள். அவர்களோடு வடமலையும் வருவார்.

1954 ஆகத்தில், நான் கடலூர் ஆ. கோவிந்தசாமி அவர்களின் அண்ணார் சுப்ரமணியம்-தையல் நாயகி இணையரின் மகள் சுசீலா அவர்களை மணந்து கொண் டேன். அத்திருமணம் ஒகளூரில் ராஜா அரியபுத்திர படையாட்சி வீட்டில் நடந்தது. அவ்வீட்டாருக்கு வடமலை உறவினர். எனவே என் திருமணத்தில் வடமலையும் பங்கேற்றார்.

அதன் பிறகு, நீண்ட இடைவெளியில் நாங்கள் இருவரும் சந்திக்கவே இல்லை. 2004க்குப் பிறகு சென்னையிலும், பெண்ணாடத்திலும் நடைபெற்ற பொது நிகழ்ச்சிகளில் நான் வடமலை அவர்களைச் சந்தித்தேன்.

வடமலை அவர்களின் துணைவியார் பரஞ்சோதி அம்மாள் 29-3-2011இல் மறைந்தார். அவருடைய படத்தைத் திறந்து வைத்திட, என்னை அழைத்தார்கள். கடைசியாக நான் பாளையத்துக்குச் சென்றது அப்போது தான். 2012க்குப் பிறகு 2018க்குள் சென்னையில் நடைபெற்ற பல பொது நிகழ்ச்சிகளில் நான் வடமலை அவர்களைச் சந்தித்தேன்.

கடைசியாக, தமிழ்காப்புப் போராளி - தமிழறிஞர் கி.த. பச்சையப்பன் அவர்களின் மறைவை ஒட்டி, அவருடைய படத்திறப்பை நான் ஆற்றினேன். அந்நிகழ்ச்சி சென்னை, சேப்பாக்கத்திலுள்ள செய்தியாளர் கூட்ட மன்றத்தில் 11-10-18 வியாழன் அன்று நடந்தது.

அந்நிகழ்ச்சியில் என்னைச் சந்தித்த அ. வடமலை அவர்கள், சிரித்தக் கொண்டே என்னிடம் கேட்டார், “ஓட்டப் பந்தயத்திலே என்னோடு ஓட வர்றீங்களா?” என்று, அது இப்போதும் என் நெஞ்சத்தைப் பிணிக்கிறது!

அவர், ஓடிப் போய்விட்டாரே, என எண்ணி வருந்துகிறேன்.

**வளர்க! வாழ்க! அ. வடமலை புகழ்!**

## மாரித்தாய் அம்மாள் மறைவு

*மதுரை மாவட்டம் தே.கல்லுப்பட்டியைச் சேர்ந்த நூலகப் பணியாளர் மறைந்த சு. இராமச்சந்திரனின் மனைவியும் தாம்பரம் நெஞ்சக நோய் மருத்துவ மனையில் தலைமை மருந்தாளுநராகப் பணியாற்றுகின்றவரும் ஒடுக்கப்பட்டோர் பேரவையின் ஆதரவாளருமான இரா.சுந்தரராசனின் தாயாருமாகிய மாரித்தாய் அம்மாள் 30.11.2018 அதிகாலை 3 மணி அளவில் உடல்நலம் குறைவால் இயற்கை எய்தினார். தோழர்கள் கலசம், தாம்பரம் மா.சுப்பிரமணி, புதுப்பெருங்களத்தூர் சு.பிரபாகரன் ஆகியோர் அன்னாரின் இல்லம் சென்று மறைந்த அம்மையாரின் உடலுக்கு இறுதி மரியாதை செலுத்தினர்.*

பெரியார் நினைவு நாளையொட்டி தமிழின உரிமை மீட்போம்!

# திசம்பர் 23, திருச்சியில் கருஞ்சட்டைப் பேரணி – மாநாடு

இந்தியா முழுதும் பிற்போக்குத்தனங்களும், சாதிய மேலாதிக்கமும் நிறைந்திருக்கிறது. ஆரியப்- பார்ப்பனிய - இந்துத்துவக் கும்பல் இந்திய ஒன்றியத்தின் அனைத்துத் தேசிய இனங்களின் வளங்களையும் கார்ப்பரேட்டுகளுக்குத் தாரை வார்த்துக் கொண்டிருக்கிறது. மதத்தின் பெயரால் நாள்தோறும் கலவரங்களும், படுகொலைகளும் இந்தியா முழுவதும் நிகழ்த்தப்படுகின்றன. மாட்டுக்கறி வைத்திருந்தார்கள் என்று சொல்லி ஒடுக்கப்பட்ட மக்களையும், சிறுபான்மை மக்களையும் காவி வெறிக் கும்பல் அடித்துக் கொலை செய்கிறது. ஆரியப்-பார்ப்பனியத்தின் சூழ்ச்சிப் போக்குகளிலிருந்து தமிழ்நாட்டைக் காத்திட தன் இறுதி மூச்சு வரை போராடியவர் தந்தை பெரியார்.

ஆனால், அத்தகைய தமிழ்நாட்டினைக் கூறு போட்டு விற்றிட இன்றைக்கு ஆரியப்-பார்ப்பனிய இந்துத்துவக் கும்பல்கள் பெருமளவில் களமிறங்கியிருக்கின்றன. தமிழ்நாட்டின் பண்பாட்டையும், இயற்கை வளங்களையும், தனித்தன்மைகளையும் இந்தக் கும்பல்களிடமிருந்து காக்க வேண்டிய கடமை தமிழ்நாட்டினர் அனைவருக்கும் இருக்கிறது. தமிழ்நாட்டு வளங்களைக் கார்ப்பரேட்டுகளுக்குச் சுரண்டிக் கொடுக்கும் ஆர்.எஸ்.எஸ்-இந்துத்துவக் கும்பலை அச்சுறுத்தும் பெரு நெருப்புகளுள் தந்தை பெரியார் எனும் ஆயுதம் முதன்மையானது. தமிழ்நாட்டினை முழுமையாக அடிமைப்படுத்தி ஆக்கிரமிக்க இன்று பார்ப்பனியம் சதி செய்து கொண்டிருக்கிறது. இந்தியையும், சமஸ்கிருதத்தையும் தமிழ்நாட்டின் மேல் திணித்துக் கொண்டிருக்கிறது. காவிரி கடைமடைப்பகுதி யினை மீத்தேன் மற்றும் ஹைட்ரோகார்பன் எடுத்து பாலைவனமாக்கும் சதி நடக்கிறது. தேனியில் நியூட்ரினோ திட்டத்தினை அமைத்து அறிவியல் அழிவிற்கான சோதனைக் கூடமாகத் தமிழ்நாட்டை மாற்றுகிறார்கள். தமிழர் கடலை அன்னிய நிறுவனங்களின் வேட்டைக்காடக மாற்ற, மீனவர்களை வெளியேற்றும் சட்டங்களைக் கொண்டுவருகிறார்கள். நீட் தேர்வினைத் திணித்தும், புதிய கல்விக் கொள்கை என்கிற பெயரிலும் தமிழ்நாட்டின் கல்வி உரிமையை முழுமையாய்ப் பறித்து வருகிறார்கள். ஜி.எஸ்.டி வரிவிதிப்பு என்கிற பெயரினால் தமிழ்நாட்டின் நிதி வலிமை முறிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இவற்றையெல்லாம் இந்தியப் பார்ப்பனியம் தன் அதிகாரத் திமிரோடு செயல்படுத்திக்கொண்டுள்ளது. இந்த அநீதிகளையெல்லாம் எதிர்த்து நின்று முறியடிக்காவிட்டால் நம் கண் முன்னே தமிழினம் தமிழ்நாட்டில் வீழ்வதை நாம் பார்க்க நேரிடும். தமிழினத்தின் எதிரிகளுக்குச் சிம்ம சொப்பனமாக இன்றும் இருப்பவர் பெரியார். அவரின் கருப்புச் சட்டையும் கைத்தடியும் நமக்குப் போர்க்கருவிகள். கடந்த காலங்களில் கருப்பு சட்டைகள் களம் கண்ட இந்த மண்ணில் இன்று காவிக் கூட்டங்கள் ஊர்வலம் நடத்திக் கொண்டிருக்கின்றன. காவி எங்கள் நிறமல்ல! கருப்பே எங்கள் நிறம்!

என்பதை உரக்கச் சொல்ல வேண்டிய தேவை நமக்கிருக்கிறது. தமிழ்நாட்டின் வளங்கள் தமிழருக்கே! தமிழ்நாடு தமிழருக்கே! என்ற பெரியாரின் கொள்கைகளை அடையாளப் படுத்தும், கருப்பு சட்டையுடன் நாம் திரள வேண்டியது வரலாற்றில் மிகவும் முக்கியமான ஒன்றாக இருக்கிறது. பெரியாரிய உணர்வாளர்கள் தங்கள் வலிமையினைத் திருச்சியில் காட்டுவோம்! இலக்கக் கணக்கில் தோழர்கள் திருச்சி மண்ணில் திரண்டு நிற்போம்! ஆரியம் மிரள கருப்பர்கள் கூட்டம் திரளட்டும்! சாதி, மதங்களைத் தூக்கியெறிந்திடும் தமிழர்களாய்த் திரள்வோம்! இயக்கம் - கட்சி அடையாளங்களைக் கடந்து கருப்புச் சட்டை திருச்சியை நிரப்பட்டும்! பெண்களே! இளைஞர்களே! மாணவர்களே! அனைவரும் வாருங்கள்! சாதி, மதமற்ற, பெண் அடிமைத்தனம் ஒழித்திடும், வல்லரசியத்தை எதிர்த்திடும் உழைக்கும் தமிழக மக்களுக்கான தமிழ்நாட்டினை மீட்போம்! திசம்பர் 23, திருச்சி **பெரியார் உணர்வாளர்கள் கூட்டமைப்பு**

**ஒருங்கிணைப்பாளர்கள்**

| பொழிலன் | திருமுருகன் காந்தி | அரங்க.குணசேகரன் |
|---|---|---|
| 8608068002 | 9444146806 | 9047521117 |

## கருஞ்சட்டைப் பதிப்பகம் தொடக்க விழா நான்கு நூல்கள் வெளியீட்டு விழா



கடுஞ்சட்டைப் பதிப்பகத்தின் தொடக்க விழா 17.11.2018 மாலை 6 மணியளவில் சென்னை, இராயப்பேட்டை, அவ்வை சண்முகம் சாலையில் உள்ள இந்திய அலுவலர் சங்கத்தில் மகாலட்சுமி தலைமையில் நடைபெற்றது. ஜனனி வரவேற்புரையாற்றினார். பதிப்பகம் குறித்த அறிமுக உரையை தென்றல் நிகழ்த்தினார். கருஞ்சட்டைப் பதிப்பகத்தின் 'கருஞ் சட்டைப் பெண்கள்' - ஓவியா, 'கொஞ்சம் டார்வின் - கொஞ்சம் டாக்கின்ஸ்' - மருத்துவர் ஷாலினி, 'கோட்சேயின் துப்பாக்கி பத்திரமாயிருக்கிறது'-இரா. உமா, 'நற்றிணை-நயச்சொல்லோவியம்' - கலைச்செல்வி புலியூர் கேசிகன் எனும் நான்கு நூல்களை சுப்புலட்சுமி ஜெகதீசன் வெளியிட்டுச் சிறப்புரை யாற்றினார். நூல் படிகளை வசந்தா பெற்றுக் கொண்டார்.

இந்நூல்கள் குறித்து வழக்குரைஞர் அருள்மொழி, கவிஞர் சல்மா, முனைவர் சுந்தரவள்ளி, பேராசிரியர் வாணி அறிவாளன் ஆகியோர் திறனாய்வு உரை நிகழ்த்தினர். நூல் ஆசிரியர்கள் சார்பில் ஓவியா ஏற்புரையாற்றினார். இந்நிகழ்வில் இரா. உமா இணைப்புரை வழங்கினார். ஸ்ரீவித்யா நன்றி நவின்றார்.

## மறைமலைநகரில்
## தமிழகம் அமைந்த நாள் விழா



மறைமலைநகரில் தமிழின உணர்வாளர்கள் கூட்ட மைப்புச் சார்பில் 18.11.2018 ஞாயிறு காலை 10 மணிக்கு தமிழகம் அமைந்தநாள் விழா சிறப்பாக நடைபெற்றது. தோழர்கள் க.பழனி, தாமு, டீக்காராம், தி.க.பன்னீர்செல்வம், மு.அரங்கநாதன், திருக்குறள் ம.வெங்கடேசன், இரா. சிவஞான பாண்டியன், மு.இராமு, பா.பிரேம், ச.இலெனின், காவிரிச்செல்வன் பி.பழனிச்சாமி, முத்து திருமலை ஆகியோர் முன்னிலை வகித்தனர். துரை.முத்து, அரங்க. கிரிச்சந்திரன், இரா.வேலு, தே.தென்னவன், சி.தனஞ்செயன், ஜே.சார்லஸ், நா.இரவி, க.இரவி பாரதி, சி.தீனதயாளன், கலசஇராமலிங்கம், தாம்பரம் சுப்பிரமணி, கு.கிருட்டிணமூர்த்தி ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்கள் கலந்து கொண்டனர். ஆனந்த சுகுமார் வரவேற்றையாற்றினார்.

மு.பிச்சைமுத்துமுத்து தலைமை தாங்கினார். மா.சமத்துவமணி தொகுப்புரை வழங்கினார். சு.கி.கொண்டல் சாமி தொடக்கவுரையாற்றினார். வாலாசா வல்லவன் சிறப்புரையாற்றினார். உலகப்பொதுமறை திருக்குறளை முற்றோதல் செய்து 'திருக்குறள் மணி' விருதுபெற்ற மாணவி தி.சு.சகானா அவர்களுக்கு பாராட்டு பரிசு அளிக்கப்பட்டது.

இறுதியில் வாலாசா வல்லவன் அரை மணி நேரம் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் கேள்விகளுக்கு விடை அளித்தார். திருமதி. பூர்ணா சார்லஸ் அவர்கள் நன்றி யுரையுடன் விழா இனிதே முடிவுற்றது.

## திருமதி. மா.செ. தாமரைச்செல்வி
## படத்திறப்பு - நினைவேந்தல் நிகழ்ச்சி



கவிக்கொண்டல் ஆசான் மா.செங்குட்டுவன் அவர்களின் துணைவியார் திருமதி. தாமரைச்செல்வியின் படத்திறப்பு - நினைவேந்தல் நிகழ்ச்சி 10-11-2018 அன்று காலை சென்னை, இராயப்பேட்டை இந்திய அலுவலர் சங்க அரங்கில் நடைபெற்றது.

உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி பாஸ்கரன் அவர்கள் தலைமை ஏற்றுப் படத்தைத் திறந்து வைத்து உரை யாற்றினார். தொடக்கத்தில் திருமதி. வாசுகி கண்ணப்பன் உருக்கமானதொரு பாடலைப் பாடினார்.

திராவிடர் கழகத் தலைவர், ஆசிரியர் கி. வீரமணி, முன்னாள் அமைச்சர் கா.வேழவேந்தன், பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன், திரைப்பட இயக்குநர் எஸ்.பி. முத்து ராமன், நாடாளுமன்ற தி.மு.க. உறுப்பினர் டி.கே.எஸ். இளங்கோவன், மு. மேத்தா, தேசிய பிற்படுத்தப்பட்ட ஊழியர் நலச் சங்கங்களின் கூட்டமைப்புத் தலைவர் திரு. சி. சேதுபதி ஆகியோர் நினைவேந்தல் உரை நிகழ்த்தினர்.

கவிக்கொண்டல் மா. செங்குட்டுவன் நன்றியுரை ஆற்றினார். மா. செங்குட்டுவன் அவர்களின் பிள்ளைகள் அன்பரசு, மதிவாணன், புகழேந்தி, முத்துச்செல்வன் ஆகியோர் முன்னின்று இந்நிகழ்ச்சியை நடத்தினர்.

தமிழறிஞர்களும், கவிஞர்களும் கவிக்கொண்டல் அன்பர்களும் பெருவாரியாகக் கலந்து கொண்டனர்.

## மா.பெ.பொ.க. தோழர்களுக்கு: கனிவான வேண்டுகோள்
## பொங்கல் மலருக்கு எழுதுங்கள்

மா.பெ.பொ.க. உறுப்பினர்களாகவும், மாவட்டச் செயலாளர்களாகவும், துணை அமைப்புகளின் மாநிலச் செயலாளர்களாகவும், ஒன்றிய-நகரச் செயலாளர்களாகவும் பல பத்து ஆண்டுகளாகப் பணியாற்றும் தோழர் கள் பலர் நம் கட்சியில் உள்ளனர்.

**அவர்கள் நல்மனம் கொண்டு, அவரவர் ஆற்றிய இயக்கப் பணிகளைப் பற்றி, 3 (அ) 4 பக்க அளவில் திம்மி 1/8 தாளில் ஒரு கட்டுரை எழுதி, 20.12.2018க்குள் கிடைக்கும்படி, அம்பத்தூர் முகவரிக்கு அனுப்பிட வேண்டுகிறேன்.**

**01.12.2018** **- வே. ஆனைமுத்து**

# பகுத்தறியும் அனைவரும் நாத்திகர்களே!

ஆறு அறிவுடன் பிறந்தவர்கள் மனிதர்கள். மற்றவைகள் பகுத்தறிவு இல்லா உயிரினங்கள். மனிதர்களுக்கு கூடுதல் அறிவு என்பது பகுத்தறிவே. எதையும் பகுத்தறிவதுதான் மனித குணம். அனைத்துச் செயல்பாடுகளும் பகுத்தறிந்து தான் செயல்படுகின்றன. உறவு முறைகள் வைத்து வாழ்வது மனிதர்கள். எதை, எப்படிச் செய்யலாம், அதனால் என்ன நடக்கும் என்பதை அறிந்தே செயல்படுகின்றனர் மனிதர்கள்.

கடவுள் என்பது கற்பனையே. கடவுளால் எதுவும் நடக்காது. மன அமைதிக்காகக் கோவில்களை மையமாக வைத்து குறைகளைப் பலர் முறையிட்டு, எல்லாம் அவர் பார்த்துக் கொள்வார் என்று நினைத்து மன அழுத்தமின்றி செயல்படுகின்றனர். சிலர் மருத்துவர்களிடம் முறையிட்டு மன அமைதி அடைகின்றனர். மன அமைதியுடன் பகுத்தறிந்து செயல்பட்டால் நன்மைகள் பல கிடைக்கும். இதை உணர்ந்தவர்கள் தான் நாத்திகர்கள்.

குறிசொல்பவன் தொடர்ந்து குறிசொல்லிக்கொண்டு மற்றவர்களின் வாழ்வை உயர்த்துவதாகவும் வளமடையச் செய்வதாகவும் கூறி, கூலி வாங்கி வாழ்க்கை நடத்துகிறான். குறிசொல்லிகள் எப்படி எல்லாம் குறி சொன்னால் கேட்பார்கள் என்பதை அறிந்து குறிசொல்கின்றனர். பொய்யான குறிகளைச் சொன்னால் வருமானம் கிடைக்கும் என்பதால், தொடர்ந்து சொல்கின்றனர். குறிசொல்பவன் பணத்திற்காகச் சொல்கின்றான் என்பதை உணர்வதே பகுத்தறிவு.

கரடுமுரடான கல்லை ஒரு சிற்பி அழகான சிற்பாகச் செதுக்குகின்றான். அப்படிச் செதுக்கப்பட்ட சிற்பங்களைக் கடவுளாய் வைத்து மக்களிடம் காணிக்கை என்ற பெயரில் தொடர்ந்து பறித்து, தின்று கொழுத்து வருகின்றனர். பார்ப்பனர்கள் ஆனால் காணிக்கை கொடுத்தவன் கொழுக்கவில்லை. ஆடு, மாடு, பன்றி, ஒட்டகம் மேய்த்துக் கொண்டு அப்படியே உள்ளனர்.

கோயில்களில் இப்பொழுது பணம் கொடுத்தால் சிறப்புச் சலுகை கிடைக்கின்றது. கோவில்களில் பூசாரிகள், நிர்வாகிகள் செய்யும் சிலைத் திருட்டு, பொருட்கொள்ளை, பொய்க்கணக்கு, பாலியல் தொல்லை, கொலைகள் போன்ற செயல்களில் ஈடுபடும் இவர்கள் தண்டனை பெறுவதில்லை. இதை உணர்ந்து பொது மக்கள் கோயிலைவிட பள்ளிக்கூடத்தையே வளர்த்தெடுக்க வேண்டும். கல்வியறிவையும், மனிதநேயத்தையும் வளர்த்தெடுப்பதே பகுத்தறிவு, பகுத்தறியும் அனைவரும் நாத்திகர்களே.

**- உழவர் மகன் ப.வ.**

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி - திசம்பர்-2018

| | | |
|---|---|---|
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| மருத்துவர் **பா. ஜீவானந்தம்** | ஈரோடு | 1000/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 500/- |
| **தமிழேந்தி** | அரக்கோணம் | 500/- |
| **இரா.பச்சமலை** | சென்னை | 500/- |
| பாவலர் **வையவன்** | திருவண்ணாமலை | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| **மரு. தாரணி** | ஒரிசா | 500/- |
| **அ. இராமசாமி** | விருத்தாசலம் | 300/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| **ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி** | வாலாசாபேட்டை | 200/- |
| **வசந்தா மதியழகன்** | அரியலூர் | 200/- |
| **இளவரசன்,** தமிழ்க்களம் | அரியலூர் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| திருமதி. **சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **நா. மதனகவி** | வாணியம்பாடி | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **கோ.நக்கீரன்** | சோளிங்கபுரம் | 100/- |
| **க.பிரபாகரன்** | தஞ்சாவூர் | 100/- |
| **இரா.காந்தி** | வடக்கு மாங்குடி | 100/- |
| **சி. ரித்திக் (எ) இளம்பரிதி** | ஒரிசா | 100/- |
| **சி. அகில்** | ஒரிசா | 100/- |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - திசம்பர்-2018

| | | |
|---|---|---|
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் | .... 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்பென்னாத்தூர் | .... 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி | .... 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி | .... 100/- |
| **அறிவுக்கடல் ராஜ்குமார்** | சிதம்பரம் | .... 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | .... 100/- |

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளிடுபவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
மனை எண்.277/2, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை - 600 050.
அச்சிட்டோர் : **பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம்,** சென்னை-50. ☎ : 9597526990

Printed by **V. ANAIMUTHU** and Published by V. Anaimuthu on behalf of Marxist Periyarist Communist Party, and printed at Periyar Printers & Publishers Place of Printing No.277/2, Chennai-Tiruvallur High Road, Ambattur, Chennai-50. Editor : **V. ANAIMUTHU**